# இளந்தளிர்



கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்!!



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பெற்றோரின் பொற்றிருப் பாதங்களைப்
பற்றிப் பணிந்து...

9197(P)
PL

அமரர்கள்

# திரு. க. கந்தையா திருமதி க. கனகம்மா

**நினைவு நிதியம்**
**2012**

# இளந்தளிர்

நூலின் பெயர்
**இளந்தளிர்**

வெளியீடு

அமரர்கள்
**திரு. க. கந்தையா திருமதி. க. கனகம்மா**
நினைவு நிதியம் - 2012

இதழாசிரியர்கள்
**செல்வி கோ. லதா,**
**செல்வி செ. இந்திரவதனா**

ஒப்பு நோக்குநர்கள்
**திரு. க. மயில்வாகனம்**
**திரு. செ. சட்டநாதர்**

உதவி ஒப்பு நோக்குநர்கள்
**செல்வன் வ. கபிலன்**
**செல்வி து. றஜிதா**


உள் அட்டைப்படம்
**திருமதி தயாமதி குகராசா**

வடிவமைப்பு-அச்சுப்பதிப்பு
**நோபிள் பிரிண்டேர்ஸ்**
817, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

## நிதிய கீதம்

அறமது துளிர்த்து அருள்மிகு பூத்து
அவனியில் இன்பம் குலவிடவே
நறுஞ்சுவைத் தமிழொடு நாடிய பயன்தரு
நெறிமிகு சைவம் துலங்கிடவே
வீறொடு வேலன்பிராய் வந்துறை ந்திடு
வீரபத்திரன் விழியது நோக்க
திறன்தரு கலைகளும் கல்வியும் ஓங்கியே
வாழிய! வாழிய! வாழியவே!

அன்னை தந்தையை அகமதி லிருத்தி
அனுதினம் அவர்களின் பாதம் போற்றும்
தன்னிக ரில்லா வாழ்வினைத் தந்த
தலைவனை என்றும் மனதினில் போற்று
கன்னல் மொழி பேசிக் கருணையைக் காட்டு
கடமையை என்றும் கண்ணெனப் போற்று
துன்பம் விலக்கி நீ துணிவுடன் வாழ்ந்து
வாழிய! வாழிய! வாழி பல்லாண்டு.



# வளமும் வாழ்வும்

மகுட வாசகம்

**கற்பதால் உயர்வோம் ! காலத்தை வெல்வோம்!!**

குறிக்கோள்

**இந்துக்கள் மத்தியில் சமய நெறிகளை ஊட்டி எமது மதத்தைப் பல்வேறு வகைகளிலும் மறுசீரமைத்துக் காத்தல்**

செயற்பாடு

**கிராம மக்களிடையே இந்து சமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவித்தல்**

# இளந்தளிர் உள்ளே...


01. ஆசியுரை .................. கோபாலகிருஷ்ணன்
02. ஆசியுரை ................. மு. திருஞானசம்பந்தபிள்ளை
03. ஆசிச்செய்தி ............. காப்பாளர்
04. வாழ்த்துரை ................ இரா. செல்வவடிவேல்
05. வாழ்த்துரை ................. கோ. ஜீவபாலன்
06. வாழி பல்லாண்டு ........ திருநெறிவேந்தன்
07. இதழாசிரியர் இதயங்களிலிருந்து
08. பரீட்சைக் குழுவினர் 2012
09. காப்பாளர் புகைப்படம்
10. காப்பாளர் அறிக்கை
11. நிதியச்செயற்பாடுகள்
12. தலைமையுரை
13. நிகழ்வின் நிழல்கள் ........... புகைப்படங்கள்
14. ஆலயம் - ஆலய வழிபாடு .......... சிவசண்முகராசா
15. வாசிப்போம் வாருங்கள் ........... மகான்
16. கற்பகதரு ................................ லதா
17. சித்த மருத்துவமும் இந்து சமயமும் ........... ரகுசாந்
18. சமூக செயற்பாடுகளும் மனித செயற்பாடுகளும் ...... பிரியதர்சினி
19. மனித வாழ்வில் சமயம் ................... கபிலன்
20. சமயமும் சமூகமும் .................. கேதீஸ்வரி
21. திருவள்ளுவர் எழுதிய ஒரு 4 வரிப்பாடல் ..... சுஜந்தா
22. ஒழுக்கம் பேணுவோம் ............. கௌதமி
23. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ........... ஜெயினா
24. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு .......... வினோஜா
25. நேரம் நல்ல நேரம்
26. வாழ்வோம் நல(திட)மாய் ................ கனகமணி
27. தகவல் ........................................ அனுஜன்
28. விடுகதைகள்
29. உண்மை தந்த பரிசு .................... வித்தியா
30. திருநாவுக்கரசர் ......................... கஸ்தூரி
31. தமிழ் ........................................ இந்திரவதனா
32. உண்மை பேசுவோம் ............. சங்கீதா
33. கணினி ................................... தரணிகா
34. நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் மொழிகள்
35. ஓய்வூதிய அதிகாரியும் ஓய்வுபெற்ற ஆசிரியரும்
36. தொலைத்தொடர்பு சாதனங்களின் பயன்பாடுகள்
37. எமது கிராமத்தில் ஏற்படும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவோம் ................ பவிவன்
38. அறக்குறள்
39. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
40. ஆத்திசூடி
41. கொன்றைவேந்தன்
42. சிவபுராணம்


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

## ஆசியுரை

சமயம் மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்துக் கொடுக்கின்றது. இளம் தலைமுறையினரிடையே கல்வி, ஒழுக்கம், பெற்றோர், ஆசிரியர், பெரியோர் ஆகியோரை மதித்து நடத்தல் உண்மை பேசுதல், பிறர்க்கு உதவுதல், ஆலயசேவை போன்ற சிறந்த நற்பண்புகளை மேலோங்கச்செய்வது பெரியோர்களினதும் ஆசிரியர்களினதும், சமயத்தலைவர்களினதும், கடமையாகும். அவ்வகையில் அமரர் திரு. க. கந்தையா திருமதி. க. கனகம்மா நினைவு நிதியம் இளஞ்சிறார்களிடையே சமய அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்த்தெடுக்கும் வகையில் சைவசமயப் போட்டிப்பரீட்சை நடத்தி வெற்றிபெற்றோர்க்குப் பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைவதோடு இவ்வரிய பணியை மேற்கொள்பவர்களைப் பாராட்டுகின்றேன்.

இந்த நினைவு நிதியத்தின் மகுடவாசகம் "கற்பதால் உயர்வோம்"! காலத்தை வெல்வோம்!! என்பதாகும் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும். கிராம மக்களிடையே சைவசமயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவிக்கும் திட்டத்தை நோக்கமாகக் கொண்டு இந்த நிதியம் சார்ந்த அன்பர்கள் செயற்படுகின்றனர். சைவ சமயத்தைப் பல்வேறு வகைகளில் வளம்பெறச் செய்வதை இந்நிறுவனம் தூரநோக்காகக் கொண்டுள்ளது.

இந்நிறுவனம் கோவிலாக்கண்டி தச்சன்தோப்பைத்தளமாகக் கொண்டு நாவற்குழி பிரதேசத்தில் செயற்படுகின்றது. சைவசமய விழுமியங்களை இளந்தலை முறையினரிடையே வளர்த்தெடுக்கும் வகையில் முன்னின்று செயற்படும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் அவர்களது முயற்சிகள் வெற்றி பெறவும் தில்லைநடராஜப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்தி ஆசிகூறுவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

சைவத்தின் சிறப்பை தாயுமானசுவாமிகள் போற்றும் அரிய பாடலொன்று இங்கு சிந்தனைக்குரியது.

சைவ சமயமே சமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி
காட்டும் இந்தக் கருத்தை விட்டு
பொய் வந்து உழலும் சமயநெறி
புகுத வேண்டா முத்திதரும்
தெய்வட் சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் ஜகத்தீரே

இளம் மாணவர்களின் தேடலையும் எழுத்தாக்கங்களையும் வளர்க்கும் நோக்கில் நிதியம் வெளியிடும் சஞ்சிகை சிறக்க எனது வாழ்த்துக்கள்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பேராசிரியர் இலக்கியக்கலாநிதி
ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
01.01.2012

கோவிலாக்கண்டி மேற்கு
தச்சன் தோப்பு
திரு. க. கந்தையா
திருமதி. க. கனகம்மா
நினைவு நிதியம்

## “ஆசியுரை”

அமரர் திரு.க. கந்தையா திருமதி.க.கனகம்மா நினைவு நிதியத்தினை அவர்களது பிள்ளைகள் சொந்த முயற்சியாக நிறுவி தாய் மண்வாசனை மறவாது நாவற்குழி பிரதேசத்தில் சமய ஒழுங்கையும், கட்டுப்பாடுகளையும், அறிவினையும் மாணவர்களிடையே எடுத்துச் செல்வதன் மூலம் எதிர் காலத்தில் நல்ல ஆரோக்கியமான ஒழுக்கமுள்ள அறிவார்ந்த சமுதாய கட்டமைப்பினை ஏற்படுத்தலாம் என்ற நன்நோக்கில் கடந்த ஐந்து வருடங்களாக செயற்பட்டுவருகின்றமை போற்றுவதற்குரியது.

அவர்களின் செயற்பாடுகளாக கடந்த 2007ம் ஆண்டு தொடக்கம் பொதுத்தேர்வுகளாகிய 5ம் ஆண்டு புலமைப்பரீட்சை, க.பொ.த. (சா.த) க.பொ.த.(உ.த) ஆகியவற்றில் உயர் பெறு பேறு பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதியினை வழங்கி வருவதும். இப்பிரதேச மாணவர்களுக்கு சமய அறிவுத்தேர்வுப் போட்டியினை நடத்தி முன்னிலை வகிக்கும் மாணவர்களுக்கு பணப்பரிசில் விருதுகள், நூல்கள், சான்றிதழ்கள் வழங்கி வருவதும் பாராட்டுக்குரியது.

கடந்த ஆண்டுகளில் இந்நிதியத்தின் மூலமாக நடத்தப்பட்ட செயற்பாடுகள் விதந்துரைக்கப்படவேண்டியனவாகும். இவற்றின் தொடர் மேம்பாட்டு முயற்சிகளாக இவ்வாண்டு தொடக்கம் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

01. மாணவர்களையும், மக்களையும் இயற்கையோடிணைந்த வாழ்வினை நிலை நிறுத்துமுகமாக இவ்வருடம் முதல் பரிசில் பெறும் மாணவர்களுக்கு நல்லினமரக்கன்றுகளை வழங்கி அவற்றினை வீட்டுச்சூழலில் நட்டுவளர்த்துப்பேண ஊக்கமளித்தல்.

02. மாணவர்களின் சுய ஆக்க முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் “இளந்தளிர்” சஞ்சிகையை இவ்வருடம் முதல், ஆண்டு தோறும் வெளியிடல்.

03. மாணவர்களின் வாசிப்புத்திறனை ஊக்கிவிக்கும் முகமாக அவர்களுக்குப் பரிசு வழங்கும் நூல்களாக ஈழத்து எழுத்தாளர்களின் சிறந்த நூல்களையே தேர்வு செய்து வழங்கல்.

பெற்றார்களின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட இந்நிதியத்தின் கடந்த காலச்செயற்பாடு பலவற்றையும் நேரிலும், அறிந்தோர் வாயிலாகவும் கேட்டவர்கள் யாவரும் இப்பாரிய பணியினைச் செய்பவர்களை பாராட்டி, வாழ்த்தி, போற்றுவர் என்பதில் ஐயமில்லை.

"ஈதல் இசைபடவாழ்தல் அஃதல்லது
ஊதியம் இல்ல உயிர்க்கு"

என்பதற்கமைய ஒருவர் தாம் வாழ்வதோடு பிறரையும் வாழவைக்கும் செயற்பாட்டை திரிகரணசுத்தியோடு செய்வார்களாயின் அவர்களை இம்மானிலத்தோர் எஞ்ஞான்றும் வாழ்த்திப் போற்றுவார்கள். தன்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் எம்மையும் எம்பணிகளையும் பின்பற்றுவார்கள், ஏற்றுக்கொள்வார்கள் என்ற அடிப்படையில் தொண்டாற்றும் அமரர்கள் கந்தையா தம்பதிகள் ஞாபகார்த்த நிதியத்தின் செயற்பாடுகள் மென்மேலும் ஓங்கிட வளர்ந்து செழிப்புற வேண்டுவதோடு, மாணவர்களின் ஆக்கத்திறனை உயர்த்தும் நோக்கோடு வெளிவர இருக்கும். "இளந்தளிர்" சஞ்சிகை தளராது தழைத்து விசாலித்து தண்ணிழல் வழங்கி அனைவரையும் வாழ்வாங்கு வாழ இம்மண்ணில் நிலைபெற வேண்டும் என வாழ்த்தி அமைகின்றோம்.

சைவப்புலவர்
**மு. திருஞானசம்பந்தபிள்ளை**
ஓய்வு நிலை அதிபர்
கொக்குவில்
25.12.2011

## காப்பாளர் ஆசிச்செய்தி

இந்துக்களின் வாழ்வுமுறை முழுக்க முழுக்க அறிவுரீதியானது. ஏன், எதற்கு என்ற கேள்விகளுக்கான விடைகள் பொதிந்தது. இன்று பலராலும் பலவகைகளாலும் நிரூபணமாகி வரும் உண்மைகள் அனைத்தையும் தன் அகத்தே கொண்டது. நபிநந்திஅடிகள் தண்ணீர் ஊற்றி விளக்கெரித்ததென்ன, கடும்தவம் புரிந்து அர்ச்சுனன் பாசுபதம் பெற்றதென்ன, நாயன்மார்கள் செய்த அதிசயங்கள் என எல்லாம் இன்றைய விஞ்ஞான உலகில் நிரூபணமாகி வருகின்றது. அப்படியொரு பெருமையும், தொன்மையும், அறிவுமிகு சமயத்தை நாம் பின்பற்றி வருவதில், நாம் சைவ சமயிகள் என்பதில் பெருமை அடைகின்றோம். பண்டைய காலங்களில் ஏன் எதற்கென்ற கேள்விகள் இல்லை. கேள்விகள் கேட்கும் தரம் வாய்ந்த மக்களும் இல்லை. அறிவும் வளர்ச்சிபெற்று இருக்கவில்லை. அவர்களிடம் இருந்ததெல்லாம் நம்பிக்கை ஒன்று மட்டும்தான். கல்விகற்ற பெரியவர்கள் காட்டும் அறிவு சார் வழியில் பின்பற்றிச் சென்றார்கள். இன்றோ கற்றவர்கள், அறிஞர்கள், முன்னோடிகள் எனக் கருதப்படுவோரில் சிலர் கயமைத்தனமாக வாழ்வதாலும் கபட சிந்தனையுடையவர்களாகக் காணப்படுவதாலும் ஏன் எதற்கு என்ற கேள்வி கேட்க வேண்டிய தேவை அதிகரிக்கிறது. அறிவுவளர் சமூகம் இன்று வளர்ந்து வருவதால் எதையும் விளக்கி ஏற்றுக் கொள்ளப்பண்ண வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதையும் எளிய முறையில் இலகுவாக வழிப்படுத்தக் கூடிய வகையில் மாணவர் களிடமிருந்து ஆரம்பித்து போட்டிப் பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் ஒரு ஒழுக்கமிகு சமுதாயக்கட்டமைப்பை கட்டி எழுப்ப முயன்று வரும் இந்நிதியமானது இவ்வருடம் முதற்கொண்டு மாணவர்களிடமுள்ள ஆற்றல்களையும், ஆக்க இயல்புகளையும் வெளிக்கொணரும் பொருட்டு அவர்களின் ஆக்கங்களைத் தாங்கி "இளந்தளிர்" என்ற சஞ்சிகையை வெளியிடுகிறது. இவ் இளந்தளிரானது செழித்துக்கிளை விட்டுப்பெரு விருட்சமாக வளரவேண்டும் என வாழ்த்துகின்றேன். இனி வருங்காலங்களில் பல்வேறு ஆக்கங்களுடன் வெளிவந்து ஒரு புதிய சமுதாயக் கட்டமைப்பை உருவாக்க எல்லாம் வல்ல வேலன்பராய் காதவாய்க்காய் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் அருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்.

காப்பாளர்
**க. மயில்வாகனம்**

01.01.2012

## "இளந்தளிர்"
## விருட்சமாக வாழ்த்துகின்றேன்

அமரர்கள் திரு.க.கந்தையா, திருமதி.க.கனகம்மா நினைவு நிதியம் நாவற்குழி பிரதேச மக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு நற்சேவையாற்றி வருவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். கிராமம் ஒரு நாட்டிற்கு இதயமாகும். இதயம் சரியாக இருந்தால் தானே, உடல் எனும் நாடு ஒழுங்காகத் தொழிற்படமுடியும். கிராமத்தை நேசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொடுக்கவேண்டும்.

நிதியமானது நாவற்குழிப்பிரதேச மாணவர்களுக்கு சைவசமய பாடத்தில் போட்டிப்பரீட்சை நடாத்தி பரிசுகள் வழங்கி ஊக்குவித்து வருகிறது. மனிதனாகப் பிறப்பது மட்டுமல்ல, மனிதனாக வாழவும் வேண்டும். மாணவர்கள், சமயநெறியில், சமயப்பண்பாட்டில் ஈடுபட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இயற்கை இறைவன் தந்த கொடையாகும். இயற்கை வளத்தைச் சிறப்பாக கையாண்டு பயனடைய வேண்டும். இயற்கைக் காப்பு "காட்டு வளத்தின்" அளவில் தங்கியுள்ளது. நிதியத்தின் மூலம் மாணவர்களிடையே மரம் நடுதலின் முக்கியம் உணர்த்தப்படவிருப்பதும் சிறப்பான முன் உதாரணமான செயலாகும்.

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு வாசிப்பும், எழுத்தாக்கங்களும் பெருமளவில் உதவும். இவ்விரண்டு பணிகளையும் உள்ளடக்கி மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் "இளந்தளிர்" வாழ்த்துக்குரியதாகும். பல்சுவை பொதிந்து "தளிர்" கிளை பரப்பி மொட்டவிழ்ந்து மணம் பரப்ப வேண்டும் மாணவர்களின் சுய ஆக்கங்களைத் தெரிந்து பிரசுரித்தல் வேண்டும். மாணவர்கள் அனுபவத்தைப் பெற வேண்டும். மாணவர்களின் ஆக்கம் தாங்கி வெளிவரும் "தளிருக்கு" பெரியவர்கள் உதவுதல் வேண்டும்.

கிராமத்தின் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்வதற்கு முன் வருபவர்களுக்குரிய ஊக்கம் வழங்கப்படுதல் அவசியமாகும். நிதியத்தின் நற்பணிகளுக்கு அடியேனின் உதவியும் வாழ்த்தும் என்றும் இருக்கும். இளந்தளிர் விருட்சமாக வளர்ந்து கிராமத்திற்கு நிழல் கொடுக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

தேசபந்
**இரா செல்வவடிவேல்**

15.01.2012

# இளந்தளிருக்கு இறை ஆசிர் வேண்டி

அமரர்கள் திரு.திருமதி கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தினர் இரண்டாவது ஆண்டுவிழாவில் முதலாவது இதழாக வெளியீடு செய்கின்ற "இளந்தளிர்" என்னும் சஞ்சிகைக்கு இதயபூர்வமான நல்லாசிகள் வழங்குவதில் உவகையடைகின்றேன்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற சான்றோர் கூற்றுக்கு அமைவாக புதிய பல இலக்கியப்பணிகளை இலக்கியச் செல்நெறிகளை "இளந்தளிர்" வழங்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இந்நிதியத்தின் காப்பாளராக இருந்து நிதியத்தை சிறப்புற செயற்படுத்தி வருவதோடு முதுமையான நிலையிலும் மாணவ உலகின் அறிவுத் தேவையை பூர்த்திசெய்து கொள்ளும் நோக்குடன் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிவரும் திரு.க.மயில்வாகனம் ஐயா அவர்களது முயற்சி மென்மேலும் வளர்ந்து செல்ல எனது நல்லாசிகள்.

கல்வி அறிவையும் கேள்வி அறிவையும் அனுபவ அறிவாக ஏற்றுக்கொள்பவனே விரைவில் அறிவாளியாகின்றான். அதேபோல் நெஞ்சத்தில் நேர்மையுடனும் நீதியிலே உயர்வுடனும் உண்மையில் பற்றுடனும் ஒழுக்கத்தில் நாட்டமுடனும் வாழ முயல்பவனே பெரும் மேதையாகின்றான். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு திரு.க.மயில்வாகனம் ஐயா அவர்கள்.

நீங்கள் எடுக்கும் விழா மாணவ உள்ளங்களுக்கு உயிர்ப்புக்கொடுத்து அவர்களின் தனியாற்றல்களை தட்டிக்கொடுக்கும் தகுதியுடையதாய் அமைவதாக.

இந்நிதியத்தினர் எமது பிரதேசத்திற்கு ஆற்றுகின்ற செயற்த்திட்டங்களை நோக்கின், நிதியத்தின் வருடாந்த ஆண்டு விழாவில் எமது பிரதேசத்தில் தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) போன்றவற்றில் சிறந்த சித்திகளைப் பெறுபவர்களுக்கு **"திறமைகள் பலர்முன் பாராட்டப்பட வேண்டும்"** என்பதற்கு அமைய பாராட்டிப் பரிசில்கள் வழங்கி கௌரவித்தும், ஆண்டுவிழாவை முன்னிட்டு தமிழ், சமய அறிவை வளர்க்கும் நோக்கில் போட்டிகளை நடாத்தி பரிசில்களையும் பதக்கங்களையும் வழங்கியும் வருகின்றனர்.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழிப் பொது நூலக வாசிப்பு மாத நிகழ்வுகளிலும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்க அவர்கள் தவறவில்லை.

யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இரு தொண்டர் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 500வீதம் ஊக்குவிப்புத் தொகை ஒன்றை வழங்குவதோடு மாதம் ஒரு தடவை மாணவர்களுக்கான போசாக்கு உணவையும் வழங்கிவருகின்றனர். இதைவிட இப்பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த), போன்றவற்றில் சிறந்த சித்திகளைப் பெறுபவர்களுக்கு பணப் பரிசில்களை வழங்குதல் போன்ற பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இச்சஞ்சிகையையும் மாணவச் சமூகத்திற்காய் பிரசவித்துள்ளனர். இச்சஞ்சிகை பாடசாலை மாணவர்களின்

படைப்பாற்றலுக்கு ஊடகமாக அமைவதுடன் சமய சமூக புனருத்தாரண, பண்பாட்டு விழுமியக் கருவியாகிய கல்வியினை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

"இளந்தளிர்" என்றென்றும் மாறா இளமை மெருகுடன் வருடாவருடம் வெளிவர எனது நல்லாசிகள்.

"வாழ்க நிதியம்! வளர்க இளந்தளிர்"!!

யா/ நா. ம. வித்தியாலய
பாடசாலை அபிவிருத்திச்சங்க
பொருளாளர்

**கோ. ஜீவபாலன்நாவற்குழி**
அகில இலங்கை சமாதான நீதிவான்.கைதடி
18.02.2012

## வாழிபல்லாண்டு

நாற்றிசை ஆட்சியை நின்திறன் ஆற்றவே
நறுந்தமிழ் என்றுமுன் பரணியைப் பாடவே,
காற்றொடு குலவிடு குளிர்மிகு தழுவவே,
களிப்பொடு "இளந்தளிர்" குழைந்து நீ துளிர்த்துமே
ஆற்றிடுஞ் சேவையால் அவனியோர் சிலிர்த்திட
அமுதென முத்தென ஆருயிர் மருந்தென
போற்றியே வாழ்த்துவோம் பெருகிடு மாசையால்
பொலிவுடன் புவிதனில் பீடொடு வாழிய!

சேற்றினில் மலர்ந்திடு செந்தா மரையென
செழிப்பது தந்திடு சிறந்திட மெம்மூர்
ஆற்றலைக் காட்டிட விரும்பிடு சிறார்க்கு
அருமருந் தாகிநீ இனித்திடல் வேண்டும்
போற்றிநாம் துதித்திடு பெற்றோர் சிறப்பை
பறைசா ற்றிநின்று பேணுதல் கடனே
சாற்றிடும் அறியுறு நெறிகள் அனைத்தும்
சரித்திரம் படைத்திடப் பணிசெய்து வாழிய!

ஊரது நாவற் குழியதிலமைந்த
உயர்யுறு கோவிலாக் கண்டியில் வாழி!
பாரது கண்டிடாப் புதுமைகள் யாவும்
விழுதிட வகைசெய்து வளமுடன் வாழி!
காரது பெருமழை தருபயன் போன்று
கல்வியுங் கலைகளு மீந்துமே வாழி!
சீர்மிகு சிந்தனை சிறுவர்க் கூட்டி
செழித்திடு முலகினில் வாழிபல் லாண்டு!

திருநெறி வேந்தன்

## இதழாசிரியர் இதயங்களிலிருந்து...

இளவயதில் வாசிக்கும் பழக்கத்தையும் எழுதும் வினைத் திறனையும் விருத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியம். சஞ்சிகைகளை வெளியிடுதல் மாணவர்களின் எழுத்தாற்றலை விருத்தி செய்யவும், தமது பாடவிதானத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை வாசித்து அறியவும், அவ்வாறு அறிந்து கொண்டவற்றுள் பயனுள்ள விடயங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளவும் ஊக்குவிக்கின்றது. மாணவர்களது அறிவுத்தேடலுக்கும் ஆக்க வெளிப்பாட்டிற்கும் விடாமுயற்சிக்கும் மிகச் சிறந்த உரை கல்லாக எமது இளந்தளிர் விளங்கும் என நம்புகின்றோம்.

அந்தவகையில் இச்சஞ்சிகை, 2011ம் ஆண்டுக்குரிய எமது நிதிய நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதுடன் இக்கால மாணவர்களின் படைப்பாக்கங்களையும் தேடல்களையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது நிதியததின் செயற்பாடுகளையும மாணவர்கள் திறன்களையும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் ஓர் காட்டியாக திகழ்கிறது.

நிதியத்தின் செயற்பாடுகள் மட்டுமின்றி மாணவர் ஆக்கங்களும் அவர்களின் தேடல்களும் அத்துடன் துறைசார் சான்றோர்களின் படைப்புகளும் இம்மலரை அணிசெய்துள்ளது. மாணவர்கள் தாமாகவே முன்வந்து இம்மலரை உருவாக்குவதில் பங்களிப்பு செய்துள்ளனர்.

இம்மலரை உருவாக்குமாறு பணித்த நிதியக்காப்பாளர் அவர்களுக்கும், இதனை வெளியிட சகல விதத்திலும் உதவியவர்களுக்கும் மலராக்கல்குழுவினர் சார்பில் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமது இவ் "இளந்தளிர்" இனிவரும் காலங்களிலும் தொடரச்சியாக சிறப்புடன் துளிர்க்க வேண்டும் என எல்லாம் வல்ல வேலன்பிராய் காதவாய்கால் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் அருளை வேண்டிப் பணிகின்றோம்.

**லதா கோபாலசிங்கம்**
**இந்திராவதனா செல்வராசா**

## பரீட்சைக் குழுவினர் - 2012

திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்
திரு. இரா. செல்வவடிவேல் அவர்கள்
திரு. பொ. சுப்பையா அவர்கள்
திரு. செ. சட்டநாதர் அவர்கள்
திரு. க. மயில்வாகனம் அவர்கள்



எமது காப்பாளர்

# காப்பாளர் அறிக்கை

தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் நமது பிரதேசத்திலும் வளர்த்தெடுக்கும் நோக்கில் எமது பெற்றோர் நினைவாக நிதியம் ஒன்றை நிறுவி போட்டி பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை நன்நெறிப் படுத்திவிட இறைவன் எமக்கு அருள்புரிந்துள்ளார். இரண்டாவது வருடமாகவும் நடாத்தப்பட்ட இந்தப் போட்டிப் பரீட்சையில் பரிசு பெறும் மாணவர்களைக் கௌரவிக்கும் இந் நிகழ்விலே இன்று இங்கு நாமெல்லோரும் கூடி இருக்கின்றோம். இவ்வருடம் முதல், இனிவரும் காலங்களில் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்கள் அனைவரையும் இப்போட்டிப் பரீட்சையில் பங்கு கொள்ள வைக்கும் எம் முயற்சிக்கு கருணை புரிந்தமைக்காகவும் இறைவனுக்கு நன்றி உடையவர்களாவோம்.

முதன்மை விருந்தினர் அவர்களே
சிறப்பு விருந்தினர் அவர்களே
கௌரவ விருந்தினர் அவர்களே
இப்போட்டிப் பரீட்சையை நடாத்தி முடிக்க பல்வகைகளிலும் உறுதுணை நின்ற நல் இதயங்களே!
பெற்றோர்களே, மாணவச் செல்வங்களே, நலன்விரும்பிகளே, உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகலந்த வணக்கங்கள். எமது அழைப்பை ஏற்று இங்கு வந்து கலந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்பதில் எமது நிதியம் பெருமை கொள்கிறது.

இன்றைய நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து எம்மை யெல்லாம் கௌரவித்துக்கொண்டிருக்கும் பேராசிரியர் திரு. திருநாவுக்கரசு வேல்நம்பி (யாழ்பல்கலைக்கழக கணக்கியற்துறை தலைவர்) அவர்களைச் சான்றோர் உலகம் நன்கு அறிந்து வைத்திருக்கின்றது. மிகவும் இள வயதிலேயே கலாநிதி பட்டம் பெற்று பல்கலைக்கழகத்தில் பல்லாயிரக் கணக்கான கணக்கியல் வல்லுனர்களை உருவாக்கி வருகின்றார். சுயமுயற்சிக்கும் கடும் உழைப்புக்கும் முன்னுதாரணமாகத் திகழும் இவர் மிகுந்த வேலைப்பழுக்களுக்கிடையேயும் இது போன்ற சமய சமூக வளர்ச்சிப் பணிகளில் உழைத்து வருகின்றார். இவர் இன்னும் பல சிறந்த பட்டங்கள் பதவிகள் பெற்று பன்நெடுங்காலம் சிறப்புடன் வாழ்ந்து பெருமை சேர்க்க இறைவன் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

இன்றைய விழாவினைத் தலைமை தாங்கி நடாத்திக் கொண்டிருக்கும் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் இப்பிரதேச

மக்களால் நன்கு அறியப்பட்டவர். மதிக்கப்படுபவர். அவரின் கட்டிறுக்கமான நிர்வாகத்திறமையால் யா/நாவற்குழி மகாவித்தியாலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றது. நல்ல மாணவர் சமுதாயம் ஒன்றை உருவாக்கி வைத்துள்ளார். அதன் மூலம் நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் மிக்க சமுதாயம் ஒன்றை மலர வைத்துள்ளார். ஆக்கபூர்வமான முயற்சிகளை எப்போதும் ஊக்குவித்தும், உதவியும் வரும் இவர் காலத்தில்தான் நாவற்குழி மகாவித்தியாலயம் "மனச்சிறப்பங்கள்" இறுவெட்டை முழுக்க முழுக்க இப்பாடசாலை மாணவர்களின் வளங்களைக் கொண்டு தயாரித்து, வெளியிட்டு பாராட்டுப்பெற்றது. எமது போட்டிப் பரீட்சையும் பரிசில்கள் விழாவும் சிறப்புற நடைபெறக் காரணமாய் இருந்த இவர், பன்நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து தான் கட்டி எழுப்பிய சமூகத்தின் சுபிட்சம் கண்டு மகிழ இறைவன் அருள்புரிய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பது ஔவையார் வாக்கு. இப்பிரதேசமாணவர்களுக்கும் தான் சேவையாற்றிய பாடசாலை மாணவர்களுக்கும் எண்ணை (MATHS) மிகவும் எளிய முறையில் புரியக்கூடிய வகையில் 35 வருடங்களுக்கும் மேலாகக் கற்பித்து பல அறிஞர்கள் உருவாக்கிய ஆசான் திரு பொ. சுப்பையா அவர்களை எமது இன்றைய கௌரவ விருந்தினராக அழைத்து அவரால் நாம் பெருமை அடைகின்றோம். ஓய்வு பெற்ற நிலையிலும் அயராது பல சமூகப் பணிகளில் தன்னை இணைத்துப் பாடுபட்டுவரும் இவர் இன்னும் பல ஆண்டுகள் சுகமாக வாழ்ந்த இப்பிரதேசத்துக்குச் சேவை செய்ய இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மிகச்சிறந்த கலைக்குடும்பப் பின்னணியில் வாழ்ந்து தன்னையும் வெளிக்கொணர்ந்து. மக்கள் வங்கியில் பணிபுரிந்து வரும் திரு. சிதம்பரநாதன் சஜீவன் வளர்ந்து வரும் இளம் கலைஞர். சிறந்த அறிவையும் ஆற்றலையும் மிகக் குறைந்த வயதிலேயே வளர்த்துக் கொண்ட இவர் இது போன்ற சமய சமூக எழுச்சிப்பணிகளிலும் விரும்பி முன்நின்று உழைப்பவர். இவர் எமது இளந்தளிர் சஞ்சிகையை ஆய்வு செய்து சீர்தூக்கி எம்மையெல்லாம் நெறிப்படுத்தியுள்ளார். இவர் தனது பணிகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு இன்று இங்கு சமுகந்தந்து எம்மையெல்லாம் கௌரவப்படுத்தியமைக்காக நன்றி தெரிவிப்பதுடன் இவர் இறையருளால் பன்னெடுங்காலம் சுகமாக வாழ்ந்து சிறந்தகலைத் தொண்டும் சமூகத்தொண்டும் ஆற்ற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

தென்மராட்சிப் பிரதேசமானது சிறந்த கல்விமான்களைக் கொண்ட பிரதேசம். அப்பிரதேசத்தின் கல்வி நிர்வாக கட்டமைப்பின் பொறுப்பை ஏற்று மிகத்திறம்பட செயற்பட்டு வருவதுடன், பிரதேசத்தின் கல்விசார் ஊழியர்களை மிகவும் கட்டிறுக்கமான நிர்வாகத்தின் கீழ் செயற்பட வைத்து வரும் திரு.பி.முத்துலிங்கம் (பிரதிக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம்) அவர்கள் இந்தப் பாடசாலையின் அதிபராகவும் செயற்பட்டு நல்ல

மாணவ சமூகத்தை உருவாக்கித் தந்தவர் அவருடன் இணைந்து இப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்காகவும் அயராது உழைத்து வரும் திருமதி.செ. முத்துலிங்கம் (அதிபர் யாழ். கோவிலாக்கண்டி மகாலட்ஷ்மி வித்தியாலயம்) அவர்களும் இங்கு வந்து கலந்து சிறப்பிப்பது எம்மை பெருமிதம் கொள்ளச் செய்கிறது. எமது அழைப்பை ஏற்று இவர்கள் இங்கு கலந்து சிறப்பிப்பதற்காக நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவிப்பதுடன் இறைவன் இவர்களுக்கு நீண்ட ஆயுளையும் சுகவாழ்வையும் தரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருக்கும் திரு.சி. சோமசுந்தரம் யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை அதிபர் அவர்களும் திரு.ஜெ.ஜெயகாந்தன் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் அவர்களும் எமக்கு காட்டிய ஆதரவுக்கும் ஆலோசனை களுக்கும் உதவிகளுக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். இப்பிரதேச மாணவர்களைத் தரமுயர்த்தி வைக்க அவர்கள் எடுத்து வருகின்ற கடுமையான முயற்சிகளைக் கண்டு வியந்துள்ளோம். தொடர்ந்தும் இவர்கள் தங்கள் பணியில் சிறப்புடன் செயலாற்ற இறைவன் இவர்களை நல்லாரோக்கியத்தடன் வைத்திருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய ஆசிரியர் க.நடேஸ்வரன் அவர்களும், யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி கோமதி சந்திரகுமார் அவர்களுடன் இணைந்து எழுத்துப் பரீட்சையை ஒழுங்குற நடாத்த உதவிகள் புரிந்த அனைத்து ஆசிரியர்களும் என்றென்றும் எமது நன்றிக்குரியவர்கள். இறைவன் இவர்கள் அனைவருக்கும் நல்லாரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் தரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

உலக முன்னேற்றங்கள் எல்லாவற்றினதும் ஆரம்பம் மாணவர் களிடையே தான் ஆரம்பமாகியது. எமது பிரதேச மாணவர்களையும், உலக தரத்துக்கு உயர்த்திவிட முடியும். என்ற நம்பிக்கையில் ஈடுபட்டு உழைக்கிறோமோ அவ் இனிய மாணவச் செல்வங்களே, உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வைத் தீர்மானியுங்கள் கடுமையாக உழைத்தால் நீங்கள் நிச்சயம் வெல்வீர்கள். பயம் வேண்டாம். பயம் பலவீனப்படுத்தும் பலவீனம் தோல்வியைத் தரும் ஆதலால் எதற்கும் அஞ்சாதீர்கள். மனதை ஒருநிலைப்படுத்தி பாடங்களை ஒன்றிக் கற்றுக்கொள்ளுங்கள் இப்பிரதேசம் உங்கள் வளர்ச்சியால் பெருமை கொள்ள வேண்டும். உங்கள் வாழ்வே தங்கள் குறிக்கோள் என வாழும் உங்கள் பெற்றோரின் கனவுகளை மெய்ப்படச் செய்து எங்களையும் மகிழ்வியுங்கள். இறைவன் உங்களுக்குத் துணையாக இருப்பார்.

உங்கள் பிள்ளைச் செல்வங்கள் சபையேறிக் கௌரவம் பெறும் இந்நன்நாளிலே மிகவும் மகிழ்வுடன் காணப்படுகின்றீர்கள். நீங்கள் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் தான் இன்று இவர்கள் இங்கு சௌரவம் பெறுகின்றார்கள். இவர்கள் சபை ஏறிச் சிறப்புப் பெற நீங்கள் படிக்கற்களாக இருந்தீர்கள். இனிவரும் நாட்களிலும் உங்கள் பிள்ளைகள் எங்கள் பிரதேச மாணவர்கள், சிறந்த பெறுபேறுகள் பெற்று உங்களுக்கும் இந்தப் பிரதேசத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

பொதுவாக போட்டி என்று வந்தால் முதன்மையானவர்கள் பரிசு பெறுவதுதான் வழமை இங்கு முதன்மையானவர்களைத் தேர்ந்தெடுக்கப் பரீட்சைக் குழுவினர் மிகவும் சிரமப்பட்டார்கள் 1 புள்ளி 2 புள்ளி வித்தியாசத்தில் பரிசில்களைத் தவறவிட்டவர்கள் அநேகம். அவை கூட கவனயீனப்பிழைதான். வினாக்களை விளங்கிக் கொள்ளாமல் பதில் எழுதியமைதான். ஆக எமது பிரதேச மாணவர்கள் அனைவரும் திறமையைக் காட்டியுள்ளனர். இனிவரும் காலங்களில் கவனமெடுத்து பயிற்சி எடுத்து வினாக்களுக்கு சரியான விடைகளைத் எழுதி பரிசில்கள் வெல்ல வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

போட்டிப் பரீட்சையின் வினாத்தாள்களைத் திருத்தியும் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தும் தந்த பரீட்சைக்குழுவினருக்கும் ஆசிச்செய்தி வழங்கிய திரு. கோபாலகிருஷ்ணர் ஐயா (வாழ்நாள் பேராசிரியர்) யாழ் பல்கலைக்கழகம் அவர்களுக்கும் எம்மை எவ்வேளையிலும் ஊக்குவித்தும் உதவியும் வரும் சைவபுலவர் சங்க தலைவர் திரு.மு. திருஞான சம்பந்தபிள்ளை ஐயா அவர்களுக்கும் வாழ்த்துரை வங்கிய எமது அன்புக்குரிய ஆசான் திரு.இரா. செல்வவடிவேல். அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கிறோம்.

இளந்தளிர் வளர ஊற்றாக இருந்து விளம்பரங்கள் தந்துதவிய பெருமனது படைத்த அனைவரும் எமது அன்புக்குரியவர்கள். இவர்கள் இதுபோன்ற பணிகளில் ஆர்வம் காட்டி வளர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

இந்நிதியமானது இப்பிரதேச மாணவர்களின் முன்னேற்றத்தில் ஈடுபட்டு உழைத்திட எல்லாம் வல்ல வேலன்பராய் தாகவாய்க்கால் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் அருள்புரிய வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

- நன்றி -

## 2011ஆம் ஆண்டின் நிதிய செயற்பாடுகள்

2011ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் தேர்வில் யா.நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 12 மாணவர்களுக்கும் யா.கைதடி நாவற்குழி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 4 பேருக்கும் யா. மறவன்புலோவு சகல கலாவல்லி வித்தியாலயத்தில் ஒரு மாணவனுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கினோம்.

2010 கா.பொ.த.சா.தரத்தில் தேர்வெழுதிய மாணவர்களுள் நா.ம.வித்தியாலயத்திலிருந்து 6 மாணவர்களுக்கும் யா.கைதடி நாவற்குழி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து 5 மாணவர்களுக்கும் யா.வேம்படி மகளிர் கல்லூரி மாணவர்கள் இருவருக்கும் ரூபா 1000 வீதம் நிதியுதவி வழங்கினோம்.

2010 கா.பொ.த.உ.தரத்தில் தேர்வில் சித்தியெய்திய மாணவர்களுள் நா.ம.வி. மாணவர்கள் ஐவருக்கும் யா.இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் ஐவருக்கும் ரூபா 1000 வீதமும் யா.கொ. இந்துக்கல்லூரி மாணவர்கள் 10 பேருக்கு 500ரூபா வீதமும் வழங்கி உக்குவித்துள்ளோம்.

2011 கால்கோள் விழாவில் யா/கைதடி நாவற்குழி தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 12 பேருக்கு கற்றல் உபகரணங்களும் நூல்களும் வழங்கினோம்.

2011ம் ஆண்டின் நிதியம் நடாத்திய போட்டிப் பரீட்சையில் பங்குபற்றிய மாணவர்கள் (6-13வரை) மூன்றுபிரிவுகளாகப் 3 பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 மாணவர்களுக்கு பணப்பரிசில், பதக்கம், நூல்கள், சான்றிதழ் வழங்கினோம் மத்திய பிரிவில் 3ம் பரிசு இருவருக்கு வழங்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் 10 மாணவர்களுக்கும் நூலும் சான்றிதழ்களும் வழங்கினோம் மேலும் மத்திய பிரிவில் 36 மாணவர்களுக்கு கீழ்ப்பிரிவில் 55 மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கினோம் இவர்கள் அனைவரும் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டவர்கள்.

2011ம் ஆண்டு மே மாதம் கோவிலாக்கண்டி மேற்கு ஸ்ரீ சரஸ்வதி சனசமூக நிலையம் நடாத்திய போட்டிப் பரீட்சையில் சித்தியெய்திய 25 மாணவர்களுக்கு நூல்கள் வழங்கினோம்.

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதற்காக தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு நா.பிரதேசசபை நூலகத்தின் அங்கத்துவமும் நூலகத்தில் அதிக நேரம் வாசிப்பில் செலவிட்ட 5

மாணவர்களுக்கு நூல்களும் மரக்கன்றுகளும் வழங்கினோம். நூலகத்துக்கு "சிட்டு" சஞ்சிகை தொடர்ந்து வழங்கி வருகின்றோம்.

மாணவர்களின் திருக்குறள் அறிவை விருத்தி செய்வதற்காக "தினம் ஒரு திருக்குறள்" எழுதுவதற்காக இப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் பொது நூலகத்துக்கும் ஒரு காட்சிப்பலகை வழங்கியுள்ளோம்.

இவ்வாண்டு முதல் இளந்தளிர் சஞ்சிகை வெளியிட்டு அதில் இப்பிரதேச மாணவர்களின் ஆக்கங்களைப் பிரசுரித்து ஊக்க மளித்துள்ளோம்.

இவ்வருடம், ஆண்டு 1முதல் 13 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இப் போட்டிப் பரீட்சையை விரிவுபடுத்தியுள்ளோம். இவர்கள் 5 பிரிவுகளாகப் வகுக்கப்பட்டுள்ளனர். பணப்பரிசில், பதக்கம், நூல், சான்றிதழ், என வழமைபோல வழங்குவதுடன் பரிசில்கள் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களுக்கு மேலாக ஒவ்வொரு மரக்கன்றும் வழங்கவுள்ளோம்.

யா.நாம.வித்தியாலயத்தில் கற்பித்துவரும் தொண்டர் ஆசிரியர்களில் இருவரைத் தேர்ந்தெடுத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தரும் உதவித் தொகைக்கும் மேலாக ரூபா 500 வீதம் மாதாந்தம் வழங்கி வருகிறோம்.

இனிவரும் வருடங்களிலும் இது போன்ற மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களுடன் வருவோம்.

# தலைமை உரை

இன்றைய இனிய நன்னாளிலே கந்தையா கனகம்மா ஞாபகார்த்த நினைவு நிதியத்தின் பரிசில்நாள் விழாவிற்கு தலைமைதாங்கும் பொறுப்பை எனக்களித்த எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருப்பாதங்களை வணங்கி எனது தலைமை உரையை ஆரம்பிக்கின்றேன்.

தனது உழைப்பின் ஒருபகுதியை பிறர் நலன்கருதி வாரிவழங்கி அதன் மூலம் சமூகத்திற்கு ஒரு உதாரணபுருஷனாகத்திகழும் இந்நிதியத்தின் காப்பாளர் திரு.க.மயில்வாகனம் அவர்களே! அவர்தம் பணிக்காக அவருடன் இணைந்து பணியாற்றும் அவர்தம் உறவுகளே முதற்கண் உங்கள் பணி மென்மேலும் வளர்ந்து சிறக்க வாழ்த்தி வணங்குகின்றேன்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர் திருவாளர் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி அவர்களே தாங்கள் எமது பிரதேசத்திற்கு வருகைதந்தது எம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. "கற்றாங்கு ஒழுக" என்ற வாக்கிற்கு அமைவாக தாங்கள் தங்கள் பொதுவாழ்வை ஒழுங்கு படுத்தியுள்ளமை மகிழ்ச்சியானது. மிக இளவயதிலேயே பெரிய பதவியை அலங்கரித்திருக்கும் தங்களின் தன்னல மற்ற பணி சமூகத்திற்கு தொடரவேண்டுமென்ற எமது எண்ணம் ஈடேற இறைவனை வேண்டுகின்றேன்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் தென்மராட்சிக்கல்விவலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.பி.முத்துலிங்கம் அவர்களே தாங்கள் இப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்காக அயராது பாடுபட்டு வருகிறீர்கள். தங்களின் பணியை பாராட்டி வாழ்த்தி பணிதொடர வாழ்த்துகின்றோம்.

இன்றைய நிகழ்வு சிறக்க வருகைதந்திருக்கும் இப்பிரதேசத்தின் மூத்த உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய திரு.பொ.சுப்பையா அவர்களே தாங்கள் சமய விழுமியங்களை கட்டிக்காப்பதற்காக ஆற்றிவரும் பணிகள் பாராட்டிற்குரியது.

அன்பான பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, ஆசிரியர்களே, மாணவர்களே, உங்கள் வருகையால் இவ்விழா பொலிவுற்று நிற்கிறது இந்நிகழ்வானது வெறுமனே பரிசில் வழங்கும் நிகழ்வல்ல மாற்றங்கள் அன்றாடம் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. எல்லாம் மாறும் என்ற ஒரு விதியைத்தவிர உலகிலுள்ள எல்லாமே மாறிவருகிறது. மாற்றங்களுக்கேற்ப எம்மை நாம் மாற்றியமைத்தாலும் எமது சமூக கலாச்சார விழுமியங்களை காப்பாற்றி எமது தூயபண்புகளை வளர்க்கவேண்டிய பெரும் பணி எம் முன் பரந்து விரிந்துள்ளது. அதற்கு இத்தகைய பரந்த உள்ளம் வாய்க்கப்பெற்ற பெரியார்கள், ஆரோக்கியத்தில் ஆன்மீகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற உயரிய சிந்தனையுடன் தனது சொந்த உழைப்பை பயன்படுத்தி வரும் திரு.க.மயில்வாகனம் அவர்களின் பணி மென்மேலும் தொடர இறை ஆசி வேண்டி எனது தலையுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

வணக்கம்

**திருமதி வ. மேகலிங்கம்**
(அதிபர், யா நாவற்குழி மகாவித்தியாலம்)

## 2011 ம் ஆண்டு பரிசில் நாள் நிகழ்வில்



12.03.2011 அன்று நடைபெற்ற பரிசில்தின
விழாவிற்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படும்போது...



நிதியகீதம் இசைக்கப்படுகையில்...

# 2011 ம் ஆண்டு பரிசில் நாள் நிகழ்வில்



சிறப்பு விருந்தினர் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(தென்மராட்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
அவர்கள் உரையாற்றுகையில்...



சிறப்பு விருந்தினர் திரு. சி. சோமசுந்தரம்
(அதிபர் - யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை)
அவர்கள் உரையாற்றுகையில்...



மத்திய பிரிவில் 1ம் இடம் பெற்ற
செல்வி நி. பாஸ்கரி அவர்கள்
பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்



மத்திய பிரிவில் 2ம் இடம் பெற்ற
செல்வன் மு. வின்சன் அவர்கள்
பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்

# 2011 ம் ஆண்டு பரிசில் நாள் நிகழ்வில்




சைவப்புலவர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
அவர்கள் ஆசியுரை வழங்குகையில்...



யா/நாவற்குழி மகாவித்தியாலய அதிபர்
திருமதி ம. மேகலிங்கம் அவர்கள் தலைமையுரை
வழங்குகையில்...

# 2011 ம் ஆண்டு பரிசில் நாள் நிகழ்வில்



திரு. மு. கனகலிங்கம் அவர்கள்
வாழ்த்துரை வழங்குகையில்...



மேற்பிரிவில் 1ம் இடம் பெற்ற செல்வி கோ. விஜித்தா
அவர்கள் பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்



மேற்பிரிவில் 2ம் இடம் பெற்ற செல்வன் க. ரோபிநாத்
அவர்கள் பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்



மேற்பிரிவில் 3ம் இடம் பெற்ற செல்வன் தி. புஸ்பகாந்
அவர்கள் பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்

# 2011 ம் ஆண்டு பரிசில் நாள் நிகழ்வில்



கௌரவ விருந்தினர்
திருமதி சாந்தகுமாரி மயில்வாகனம் அவர்கள்
மங்கல விளக்கேற்றுகையில்...



கீழ்ப் பிரிவில் 1ம் இடம் பெற்ற
செல்வி சி. கஜந்தா அவர்கள்
பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்



கீழ்ப் பிரிவில் 2ம் இடம் பெற்ற
செல்வி ஜ. ஜதுர்சனா அவர்கள்
பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்



கீழ்ப் பிரிவில் 3ம் இடம் பெற்ற
செல்வி ம. சயந்தி அவர்கள்
பிரதம விருந்தினரிடம் பரிசில் பெறுகையில்

# சமூக அபிவிருத்தியில் நிதிய உறுப்பினர்கள்



2011ம் ஆண்டு நாவற்குழி பிரதேச
பொது நூலக வாசிப்பு மாத நிகழ்வில்
திரு. க. மயில்வாகனம் அவர்கள்
மரக்கன்று நாட்டுகையில்...




2011ம் ஆண்டு நாவற்குழி பிரதேச
பொது நூலக வாசிப்பு மாத நிகழ்வில்
திரு. க. வன்னியசிங்கம் அவர்கள்
பரிசில் வழங்குகையில்...



2011ம் ஆண்டு நாவற்குழி பிரதேச
பொது நூலக வாசிப்பு மாத நிகழ்வில்
திருமதி து. மங்கயர்க்கரசி அவர்கள்
நூல்கள், அன்பளிப்புக்கள் வழங்குகையில்...



2011ம் ஆண்டு நாவற்குழி பிரதேச
பொது நூலக வாசிப்பு மாத நிகழ்வில்
திரு சோ. சிவகேஸ்வரன் அவர்கள் மாணவர்
களுக்கு நூலக அங்கத்துவம் வழங்குகையில்...



# ஆலயம்

## ஆலய வழிபாடு சிறுவர்களுக்குச் சில கருத்துக்கள்.

சித்தமருத்துவ கலாநிதி
**சே. சிவசண்முகராஜா** M.D.(S)
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை - யாழ் பல்கலைக்கழகம்

**கோ**யில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று எம் முன்னோர் கூறிவைத்துள்ளார்களே ஏன்?

கோயில் என்பது ஆண்டவன் உறையும் இடம் இந்துக்களின் வழிபாட்டுத்தலம்: ஆன்மீக நெறியில் எம்மை வழிப்படுத்தும் இடம் என்பது மட்டும் கருத்தாகக்கொள்ளலாகாது. தமிழ்மக்களின் சிறப்பாக இந்துக்களின் பாரம்பரியம், கலை, கலாசார விழுமியங்களைப் பேணி வளர்க்கும் நிலையங்களாகவும் எமது ஆலயங்கள் விளங்குகின்றன. முக்கியமாக ஊரின் மத்தியிலோ, நதிக்கரை, குளக்கரை, அருவிக்கரை, மலையுச்சி, கடற்கரை, போன்ற இடங்களிலோ கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் அமைக்கப்பட்டுள்ள கோவில்கள் காற்றோட்டம் மிக்கவையாகவும் மக்கள் ஒன்று கூடுவதற்குரிய இடங்களாகவும் விளங்குகின்றன. பெரும்பாலும் ஆலயத்தை மையமாக வைத்தே மக்கள் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆலயத்தில் செய்யப்படுகின்ற கிரியைகள் யாவும் மக்களின் உடல், உள ஆரோக்கியத்தின் பொருட்டும் ஆன்மீக மேம்பாட்டின் பொருட்டுமே செய்யப்படுகின்றன. எனவே மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கு ஆலயங்கள் இன்றியமையாதனவாக இருப்பதாலேயே கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறி வைத்துள்ளனர்.

"காலையும் மாலையும் கடவுளை வணங்கு என்று கூறப்படுவதேன்? மானிடப்பிறவியெடுத்தவர்கள் தமது வீடுபேற்றின் பொருட்டு எப்போதும் இறைவனை வணங்கவேண்டும் என்பதே முறை. அப்படியிருந்தும் காலை, மாலை கடவுளை வணங்குதல் வேண்டும் என்று கூறப்பட்டிருப்பது உடல் ஆரோக்கியத்துடனும் சம்மந்தப்பட்ட ஒரு விடயமாக

அமைந்துள்ளது. பொதுவாக ஆலயங்கள் கிழக்கு முகமாக அல்லது மேற்கு முகமாக அமைந்துள்ளன. எனவே காலை, மாலை, வேளைகளில் ஆலயச் சூழலில் நல்ல வெளிச்சம், சூரியஒளி கிடைக்கும் அந்தநேரத்தில் ஆலயவழிபாடு செய்யும் போது எமது உடம்பில் சூரியஒளி படுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. (ஆலயங்களுக்கு ஆண்கள் மேற்சட்டை அணிந்து செல்வதில்லை) அதன் மூலம் தோலில் நோய் விளைவிக்கும் கிருமிகள் அணுகுவது தடை செய்யப்படுவதுடன் உயிர்ச்சத்து Dயும் தொகுக்கப்பட வாய்ப்பேற்படுகிறது.

எனவே காலையும், மாலையும் கடவுளை வணங்கினால் மட்டும் போதாது ஆலயம் சென்று கடவுளை வணங்குதல் வேண்டும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஏன்?

கடவுள் எங்கும் இருக்கிறார். அப்படியிருக்க ஆலயத்திற்குச் சென்று தான் கடவுளை வணங்குதல் வேண்டுமா? என்று சிலர் கேட்கிறார்கள். இரண்டாவதாகக் கூறப்பட்ட "காலையும் மாலையும் கடவுளை வணங்கு" என்பதில் ஆலயம் என்ற சொல் இடம் பெறவில்லை ஆயினும் ஆலயத்திற்குச் சென்று கடவுளை வழிபடுவதே உடல் நலத்திற்கும் உகந்தது என்று எடுத்துக்கூறினோம். இங்கு ஆலயம் தொழுவது காலவும் நன்று என்று கூறப்பட்டுள்ளதே தவிர கடவுள் (கடவுளை வணங்கு) என்ற சொல் இடம் பெறவில்லை ஏன்? கடவுளை மட்டுமன்றி கடவுள் வாழும் ஆலயத்தையும் நாம் வழிபடவேண்டும் என்று நுட்பமாகக் கூறிவைத்துள்ளனர். இதுவும் உடல் நலத்திற்கு வழிகாட்டும் ஒரு முறையாகும். ஆலயத்திற்கு நாம் செல்லும் போது குளித்து, தோய்ந்து சுத்தமான ஆடை அணிந்து செல்கிறோம் அதுவும் காலில் காலணி எதுவும் அணிந்து செல்வதில்லை அங்ஙனம் வெறுங்காலுடன் நடந்து செல்வது பாதத்திலுள்ள பல நரம்பு ஸ்தானங்களைத் தூண்டும் ஒரு செயலாகவும் அமைகின்றது. எனவே "கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை..." என்று பாடுவதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

ஆலயத்திற்குச் சென்றதும் கடவுளை (வீதி) வலம் வந்து வணங்குகின்றோம். அங்ஙனம் சுவாசத்தில் வலப்பக்கம் நாசிவழியாக நடக்கும் சூரிய கலை (பிங்கலை) நாடிவழிச் சுவாசம் ஊக்குவிக்கப்படுகிறது. அதுவும் ஆரோக்கியத்திற்கான ஒன்றாகும்.

வீதிவலம் வந்து வணங்குதல் குறைந்தது மூன்று தடவைகளாதல் செய்யப்படல் வேண்டும். என்பது வழி எனவே, இறைவழிபாட்டுடன் உடல் பயிற்சி முறையாகவும் இது அமைகிறது தற்காலத்தில் Walking என்ற பெயரில் காலை வேளைகளில் தெருத்தெருவாக நடப்பவர்களையும், மைதானங்களில் அலைவோரையும் காணமுடிகிறது. இவர்கள் காலை, மாலை வேளைகளில் கோவில் வீதியில் சுற்றி வந்து வழிபட்டாலே உடற்பயிற்சி ஆகவும் அமைவதுடன் இறைவழிபாடாகவும் அமைந்து இரட்டிப்பு நன்மை ஏற்படும்.

ஆலய வழிபாட்டில் பிள்ளையாரை நோக்கிக் குட்டிக்கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல், பிரதிஸ்டை செய்தல், அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், அடி அழித்தல், முதலானவையும் உடற்

பயிற்சியாகவும் அமைந்து தேக ஆரோக்கியத்தைப் பேணவும் உதவுகின்றன. எனவே, தினமும் ஆலயந் தொழுவது சாலவும் நன்றாம்.

ஆலயங்களில் மந்திரங்கள், கிரியைகளின் முக்கியத்துவம் என்ன?

ஆலயங்களிற் செய்யப்படும் கிரியைகள், ஓதப்படும் மந்திரங்கள் யாவும் உலக நன்மையின் பொருட்டேயாகும். முக்கியமாக மந்திரங்கள் மனதிற்குச் சாந்தியளிப்பனவாகவும் அமைந்துள்ளன. ஆலயங்களில் ஓதப்படும் மந்திரங்கள் நேரடியாகவும், விக்கிரகங்களினடியில் அமைந்துள்ள யந்திரங்களில் பதிந்தும் ஆலயச்சூழலில் ஒருவித அதிர்வலைகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. அவ்வதிர்வலைகள் உடலிலுள்ள மூலாதாரம் முதலான சக்கரங்களிலும், பிற உறுப்புக்களிலும், ஒத்த அதிர்வுகளை ஏற்படுத்த வல்லனவாகவும், அதன் மூலம் மனச்சாந்தியை ஏற்படுத்த வல்லனவாகவும் உள்ளன. ஆலயக்கிரியைகளில் ஹோமம் முக்கிய அம்சமாக விளங்குகிறது. ஹோமத்தில் மா, பலாசு, வன்னி, எருக்கலை, நாயுவி, அறுகு, போன்றவற்றின் சமித்துக்களும் நெய்யும்,அக்கினியில் இடப்படுகின்றன. இவற்றிலிருந்து கிளம்பும் புகையானது ஆலயச்சுற்றுச் சூழலில் நோய்க்கிருமிகள் பரவாமல் தடுக்க வல்லதாகவும் இப்புகையைச் சுவாசிப்பவர்களின் முட்டு தொய்வு, மற்றும் சுவாசநோய்கள், தலைவலி முதலியவற்றைத் தணிக்க வல்லதாகவும் விளங்குகின்றது. இந்தியாவில் போபால் என்னும் இடத்தில் நச்சுவாயுக்கசிவு ஏற்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தபோது அக்கிராமத்தில் தினசரி ஹோமம் வளர்த்து வழிபட்டுவந்த ஒரு வைதிகக் குடும்பத்தவர் மட்டும் எவ்வித பாதிப்புமின்றி உயிர் பிழைத்தமை இங்கு நோக்கற்குரியது.

ஆலயத்தில் வழங்கப்படும் பிரசாதங்களின் மகிமை பற்றி..

ஆலயங்களில் விபூதி, சந்தனம், குங்குமம், போன்ற அணிதற்குரிய பிரசாதங்களும் தீர்த்தம், வடை, கடலை, சர்க்கரைச்சாதம், வாழைப்பழம், மோதகம், பஞ்சாமிர்தம், போன்ற உண்ணுதற்குரிய பிரசாதங்களும் வழங்கப்படுகின்றன. விபூதி, ஒரு சிறந்த அவுடதமாகும். அது ஒரு சிறந்த கிருமி கொல்லியாகவும் அமைகிறது. சந்தனம், பூசுவதால் உடலுக்கும், கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தருகிறது. ஆலயத்தில் வழங்கப்படும் புஷ்பங்களைக் காதில் அல்லது தலையில் சூடிக் கொள்வதன் மூலம் அவற்றிலிருந்து எழுகின்ற நறுமணம் தலைவலி, தலைநீரேற்றம், முதலிய சிரசு நோய்களுக்கு மருந்தாகவும் அமைகின்றன.

ஆலயத்தில் வழங்கப்படும் தீர்த்தத்தில் பலவித மருந்துச் சரக்குகள் ஊறியதாக அமைந்து உடல் ஆரோக்கியத்திற்கு அருமருந்தாக அமைகின்றது. விஷ்ணு, ஆலய தீர்த்தத்தில் துளசியிலையும், சிவன் கோவில் தீர்த்தத்தில் வில்வ இலையும், விநாயகர் ஆலயத் தீர்த்தத்தில் அறுகம்புல்லும், இடப்பட்டு வழங்கப்படுவது வழக்கம். இவ்விலைகள் ஊறிய தீர்த்தத்தைப் பருகும் போது குறிப்பாகத் துளசியிலை ஊறிய நீர் சளி, இருமல், போன்ற சுவாச பிரச்சினைகளுக்கும், வில்வஇலை, ஊறியநீர் வயிற்றுப்புண்ணுக்கும், அறுகம்புல், ஊறியநீர் வயிற்றெரிச்சல், முதலியவற்றிற்கும் மருந்தாகவும், அமைகின்றன.

மோதகம், கொழுக்கட்டை, வடை, சர்க்கரைச்சாதம், கடலை, போன்ற பிரசாதங்கள் போசாக்குக்குணவாகவும் அமைந்து உடல் நலத்தைப் பேண உதவுகின்றன.

பிரார்த்தனை, வேண்டுதல் என்பன உடல் நலத்திற்கு உதவுகின்றனவா?

ஆலயத்தில் பிரார்த்தனைகள், வேண்டுதல்கள், பயன் கருதியும் பயன் கருதாமலும் செய்யப்படுகின்றன. பலர் சேர்ந்து செய்யும் கூட்டு வழிபாடாகக் கூட்டுப்பிரார்த்தனை அமைகிறது. இதன் போது கூட்டாகப்பாடப்படும் தெய்வீகப்பாடல்கள் மன அமைதிக்கும் வழி காட்டுகின்றன. மேலும் ஒவ்வொருவரும் தத்தம் குறைகள், பிரச்சினைகளை மானசீகமாகவோ அல்லது மனம் விட்டு வெளிப்படையாகவோ இறைவனிடம் முறையிட்டு வேண்டுதல்கள் செய்வதும் வழக்கம் இங்ஙனம் தமது மனக்குமுறல்கள், குறைகளை மனம் விட்டு மனந்திறந்து வெளிக்காட்டும் இடமாகவும் உளவளத்துணையில் முக்கியமான ஒரு விடயமாகும். இதன் மூலம் ஒருவரின் உளப்பிரச்சினைகள் உளநெருக்கீடுகள் தணிவதற்கும் வாய்ப்பேற்படுகிறது. உளம் சாந்திபெறும் போது உடல் ஆரோக்கியமும் பேணப்படும் என்பது சொல்லாமலே புரியும்.



அப்பா:-
நர்ஸ் வேலைக்குத்தான் போவேன் என
அடம்பிடித்துப் படித்தாயே
என்ன தெரிந்து கொண்டாய்..?
மகள்:-
உங்களுக்கு டாக்டர் மாப்பிள்ளை தான்
வருவார் என தெரிந்து கொண்டேன்



# வாசிப்போம் வாருங்கள்

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கல்விச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என பாரதி அறைகூவல் விட்டான். எத்தனை எத்தனையோ கலைகள் நவீனமடைந்து காலத்துக்கு ஏற்ப ரசனைகளும் வந்து சேர்ந்துவிட மாறிவருகின்ற சூழ்நிலைக்கேற்ப வாசித்தல் மட்டும் அதன் அற்புத ரசனை இழந்து முடங்கிப்போனது மட்டுமல்லாமல் ஒதுக்கப்பட்டுக் காணாமல் போய் கொண்டிருக்கின்றது. எழுத்துக்களின் ரசனையில், ரிதத்தில் நாடி நரம்புகள் யாவும் சிலிர்த்து மெய்மறந்து புத்தகங்களுள் மூழ்கிப்போன காலங்கள் தொலைந்து போய் விட்டது. வாசிக்கத் தெரிந்து அறிவு பெற்று வாழ்ந்த சமூகப்பின்னணி அற்றுப் போய்விடுமோ என்ற அச்சம் எழுகிறது. இதை வளர்த்தெடுக்க வருடத்தில் ஒரு தடவை வருகின்ற வாசிப்புமாத (கார்த்திகை மாதம்) விழா வினால் மட்டும் இயலாது அவ்வப்போது சில நிறுவனங்கள், மன்றங்கள், அமைப்புகள் அதிக நேரம் மாணவர்களுக்க பரிசில்கள் வழங்கி ஊக்குவித்து வந்தாலும் போதாமலே உள்ளது. வாசிப்பை மட்டுமல்ல நல் விழுமியங்கள், பண்பாடுகள், ஒழுக்கங்கள் போன்ற எவற்றையும் கட்டாயப்படுத்தி இளம் தலைமுறையினரிடம் வளர்த்து விட முடியாதென்பதாலேயே போட்டிகளும் நடாத்திப் பரிசில்களும் வழங்கிச் சில அமைப்புகள் ஊக்குவித்து வருகின்றனர். போட்டி என்று வந்தால்தான் வாழ்வில் சுவையும் உழைப்பும் ஊக்கமும் வெல்ல வேண்டும் என்ற தீரமும் வளரும்.

கண்களால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய் தீர விசாரித்து ஆராய்ந்து அறிதலே உண்மையாகும். தேர்ந்து தெளிந்த அறிவு பெற ஒருவர் தானாகவே வாசிக்க வேண்டும். வாசிக்க வாசிக்க யோசிக்க யோசிக்கத் தூண்டும். யோசிக்க யோசிக்க தெளிந்த பேரறிவு பெற முடியும். வாசிப்பதால் மட்டுமே ஒருவன் முழுமனிதனாகிவிடமுடியும். கண்ணால் காண்பது எல்லாம் நிஜம் என்றால் கானல் நீர் தாகம் தீர்க்க வேண்டும்.

நண்பகல் வேளையில் கடும் வெயில் காலத்தில் தார் வீதியில் பயணம் செய்யும் ஒருவர் தூரத்திலே வீதியில் நீர் இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தைக் காண்பார் ஆனால் அவ்விடத்தை அவர் அடைந்ததும் அங்கு நீர் இல்லாத உண்மையை அவர் அறிந்து கொள்வார். இவ்வாறு தான் தூரத்தே நீர் இருப்பதாக எண்ணி பாலைவனத்து மிருகங்கள் தாகமிகுதியால் அலைந்து திரிகின்றன. இது கானல் நீர். பொய்த்தன்மை. இவ்வுண்மையை உணர்ந்து கொள்ள அறிவு தேவைப்படுகின்றது. நூல்களிலுள்ள விளக்கங்களாலேயே இவ்வுண்மையை புரிந்து கொள்ள வைக்க முடியும். அது போலவே தான் கேள்விச்செவியன் ஊரைக் கெடுத்தான் என்பதும், காதால் கேட்கும்போது சொல்பவர் கருத்தை அவர் சொல்ல எண்ணிய கருத்தை அப்படியே விளங்கிக்கொள்ள முடியாமல் போய் விடுகின்றது. இப்புரிதல் இல்லாமலேயே நாட்டிலும் வீட்டிலும் கருத்து முரண்பாடுகள் வளர்கின்றன. ஆகவே ஒருவர் உண்மையைப் புரிந்து கொள்ள அல்லது விடயங்களை உள்ளவாறே விளங்கிக்கொள்ள தானாகவே. வாசித்து யோசித்து தெளிந்து கொள்ளல் வேண்டும். மனிதன் வாசிக்காமல் விட்டால் மந்தபுத்தி உள்ளவனாகி விடுகின்றான். எப்போதும் யாருடைய கட்டளைக்காகவும், ஏவல்களுக்காகவும் காத்திருக்கின்ற வனாகின்றான். அதனால் சமூகம், இனம், நாடு பின்தங்கிவிடுகின்றது. இதை நனகுணர்ந்த நம்முன்னோர்கள் ரிதம் தரக்கூடிய சிறிய சிறிய சொற்களைக் கொண்ட கருத்துச் செறிவுள்ள பாடல்களையும் சிறுகதைகளையும் கூறி பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே வாசித்து ரசிக்க வைத்துப் பிணைத்து வைத்திருந்தனர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி போன்ற இலகு தமிழில், இனியதமிழ் கருத்துச் செறிவு மிக்க உண்மைகளையும் வாழ்க்கை நெறிகளையும் எடுத்துக் கூறினர். இப்படி மிகவும் நுண் அறிவுடன் வளர்ந்த மாணவன் பின்னர் தானாகவே தேடித் தெரிந்து நூல்களை வாசித்து ரசிக்கத் தொடங்கினான். வாசிக்க வாசிக்க முழு மனிதனாக மாறுகின்றான். பின்னர் பாரதியையும், வரதராசனையும், கல்கியையும், அண்ணாதுரையை, பார்த்தசாரதி, அருராமநாதன், தேசியவிநாயகம்பிள்ளை, முருகையன், செங்கை ஆழியான், காரை சுந்தரம்பிள்ளை, நீர்வை பொன்னையன், அராலியூர் சுந்தரம்பிள்ளை, போன்றவர்களின் நூல்களையும் நல்வழிகாட்டிய விஞ்ஞான நூல்களையும் என பலவற்றை வாசிக்கும் பழக்கத்தையும் உண்டாக்கிக் கொண்டான். கண்டு அது கற்றுப் பண்டிதனாகி வளர்ந்தான்.

வெற்றி வெறி ஏற்றி இளம்பிள்ளைகளை அங்குமாறி இங்கு என தனியார் கல்வி வியாபார நிலையங்களுக்கு விரட்டும் பெற்றோரின் வெற்றி வெறி அடங்க வேண்டும். தன் பிள்ளைகளைச் சான்றோராக்க வேண்டும் என்ற எண்ணம் வளர வேண்டும். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவர்களாகவே தேடி எடுத்துப் படிக்கும் பழக்கத்தை ஊக்கவேண்டும். படி, படி என்று விரட்டக் கூடாது வெறுப்பேற்றக் கூடாது.

பொதுவாக இன்றைய மக்களிடையே தவறுகளையும் குற்றங்களையும் மற்றவர் மீது சுமத்திவிட்டுத் தான் தப்பிக்கொள்ளும் இயல்பு வளர்ந்து வருகிறது. தமக்கும் இவ்விடயத்துக்கும் சம்மந்தம் இல்லாத பாவனை காட்டி ஒதுங்கியிருப்பதும். மற்றவர்கள் செய்யட்டும் என வாளா இருப்பதும். துணிந்து செய்யும் ஒருவர் விடும் தவறுகளைப் பெருப்பித்துக்காட்டி நகைப்பதுமாக தங்கள் பொன்னான நேரத்தைக் களிக்கின்றார். தொலைக்காட்சி, சினிமா, நாடகங்கள், நெடுந்தொடர்கள், என வந்ததால்தான், வாசிக்கும் பழக்கம் குறைந்து வருகின்றதெனக் கூறுகின்றனர். இன்னும் சிலர் Internet, Facebook இவை பார்க்கவே தன் பிள்ளைகளுக்கு நேரம் போதாமலிருக்கின்றது. வாசிக்க அவனுக்கு நேரம் எங்கிருக்கிறது என்று பெருமை பேசுகின்றனர். தொலைக்காட்சி, Facebook என்பன காட்டும் வாசிக்கத் தூண்டும் செய்திகளையும் அரும்பெரும் அறிவுத் தகவல்களையும் அலட்சியப்படுத்தி விடுகின்றனர். மேலைநாடுகளிலிருந்து தானே இந்தச் சாதனங்கள் இங்கு கொண்டுவரப்பட்டன. அங்கு இவை அதிக காலத்துக்கு முன்னரே பாவனைக்கு வந்து விட்டன. ஆனால் அங்கு வாசிக்கும் பழக்கம் அதிகரித்தே வருகின்றது. எதற்கெடுத்தாலும் மேலைநாட்டவரை உதாரணம் காட்டுவதும். அவர்கள் நாகரீகங்களைப் பின்பற்றியும் வரும் இவர்கள் அந்நாட்டவர்களிடமுள்ள நேரந்தவறாமை, மற்றவரை மதிக்கும் பண்பு, தவறெனில் மன்னிப்பு கேட்கும் பாங்கு என்பவற்றைப் பின்பற்றுவதில்லை. பேருந்து ஒன்றுக்காகக் காத்திருக்கும் போதும், பயணம் செய்யும் போதும்கூட வாசிப்பதும், வாசிப்பதற்காக புத்தகங்கள் எடுத்துச்செல்லும் பழக்கங்களையும் பின்பற்றுவதில்லை. சினிமா நாடக ஆரம்பத்துக்காகக் காத்திருக்கும் போதும் பிரமுகர்களுக்காகக் காத்திருக்கும் போதும் கூட வாசித்து வரும் மேலை நாட்டவர் பழக்கங்களை ஏன் வளர்த்துக் கொள்ள முன்வருகிறார்கள் இல்லை. ஒரு பயணம் 30 நிமிடங்கள் எடுக்குமாயின் அந்த 30 நிமிடங்களுக்கு வாசிக்கப் போதிய தகவல்கள் கொண்ட செய்தித்தாள்கள் அங்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. இங்கு நடைமுறைப்படுத்த முடியுமா?

தன்னையோ தன் குடும்பத்தவரையோ வேறுபடுத்தி, மேம்படுத்திக் காட்டுவதிலோ வாழ்வதிலோ தவறு இல்லை. அது மனித இயல்பும் கூட. ஒவ்வொருவனும் மற்றவரை விட, தான் உயர்ந்தவன், மாறுபட்டவன் என்று எண்ணி வாழ்வதனாலேயே உலகம் இன்னும் உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. யாரையும் பலிக்கடாவாக்கியும், யாரையும் காட்டிக் கொடுத்துமோ தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளக்கூடாது. தவறுகளை ஏற்றுக்கொண்டு திருத்தி வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறை வாசிக்காமல் போவதற்கு நாம்தானே காரணம். அவர்களுக்கான களமும் வாய்ப்பும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் அர்த்தமில்லை. திறமான முறைமை ஒன்றை வகுத்து மாணவர்களை அவர்களது இளம் பராயத்தில் இருந்தே வாசிக்கத்தூண்ட

வேண்டும். இந்த ஈடில்லா பணியில், ஆலயங்களில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலைகள், பஜனைக்குழுக்கள், சமயச் சொற்பொழிவுகள் மக்களிடையே சமய அறிவைமட்டுமல்ல, கட்டுப்பாடுகள், ஒழுங்கங்களுடன், வாசிக்கும் பழக்கத்தையும் தூண்டி வந்தன. இன்று ஒரு சில ஆலயங்களைத் தவிர ஏனையன வெறும் வழிபாட்டிடமாகவும் அபிஷேகங்களும் அன்ன தானங்களும் வழங்கும் இடங்களுமாகவே செயல்படுகின்றன. மக்களை ஒன்று கூட்டி சமூக ஐக்கியத்தை வளர்க்கவும், தனக்குமேலானவன் உள்ளான் என பணிந்து பக்தியுடன் வாழவும், சமயநெறிகளுக்கு கட்டுப்பட்டு வாழவும்தான் ஆலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அவற்றின் சமூகப்பணிகளிலிருந்து விலகி தன்னாதிக்க மையமாக இன்று ஆலயங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அறிவு, அடக்கம், நம்பிக்கை, ஐக்கியம், பிறரை மதித்தல், நேரந்தவறாமை, கட்டுப்படுதல் என சீரியபண்புகளை வளர்க்க வேண்டிய ஆலயங்கள் சீர்குலைந்து அவமானச்சின்னங்களாகி வருகின்றன. கிராமியக்கலைகள், நாட்டுக்கூத்து, நாட்டார்பாடல்கள், கடவுள்மீது பாடப்பட்ட நாட்டார் இலக்கியங்களை எல்லாம் வளர்த்தெடுக்கத் தவறிவிட்டன. இப்பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் தேடல் ஆவலைத்தூண்டிவிடமுடியும். மீண்டும் அவனை வாசிக்கும் பக்கம் இழுத்து வந்து தூண்டிவிட முடியும். பழையவை யாவும் பெருமையானவைதான். முன்னோர்கள் எந்தெந்த வழிகளில் மக்களிடையே அறிவையும் தெளிவையும் ஆற்றலையும் நம்பிக்கையையும் வளர்க்க முடியுமென உளரீதியாகவும் உணர்வுரீதியாகவும் அறிந்து மிக மென்மையாக அணுகி மக்களை நெறிப்படுத்தினர். மென்மையான போக்கை இன்று காணவே முடியவில்லை. எதற்கும் வன்முறை. கட்டாயப்படுத்துவதன் மூலம் எவரிடமிருந்தும் எந்தவிதமான வெளிப்பாடுகளையும் வெளிக்கொணர முடியாது என்பதுதான் யதார்த்தம்.

எல்லாம், பொருள்மயம் என்றாகிவிட்ட நவீன உலகிலும் சரி, தொன்றுதொட்டு வாழும் இலங்கைத் தமிழர் வாழ்விலும் சரி, கல்வி, பணம் பண்ணும் தொழிலாகவே கருதப்பட்டு வருகின்றது. அறிவுக்காக வாசிப்பவர்களை விட சுகவாழ்வு, அதிகாரம், அந்தஸ்து, என்பவற்றுக்காகக் கற்பவர் தொகையே அதிகம். அதில் தவறும் இல்லை. அவர்களது இலக்கு அடையப்பட்டதும் வாசிக்காமல் விடுவது தவறுதானே. நிலாக்காட்டி பாட்டி சோறு ஊட்டிய வாழ்விலும் பின்னர் தொடர்ந்து வந்த வாழ்வு அனைத்திலும் மிக நுட்பமாக மாணவர்கள் ஆவலைத் தூண்ட எளிய இனிய தமிழ் வார்த்தைகளால் ரிதம் பண்ணக்கூடிய பாடல்களை அமைத்து வழங்கினார்கள். இப்பாடலில் கூறப்பட்டுள்ள கதையையும் அது கற்பிக்கும் “பொய்சொல்லக்கூடாது பாப்பா” என்ற பாரதியாரின் கருத்தையும், பொய் சொல்ல மாட்டேன் ஒரு போதும் கையை மணந்து பார் இப்போது என்று உறுதிப்படுத்தும் இப்பாடலைப் பாருங்கள்.


மாமா வீட்டு முற்றத்திலே
மாமரம் ஒன்று நிற்கிறது
பொன்னைப் போல பூ பூக்கும்
பூக்களினுள்ளே பிஞ்சிருக்கும்
பச்சை மணிபோல் காய் காய்க்கும்
பவளம்போலே பழம் பழுக்கும்

அணில் பிள்ளை வந்து கொந்தாமல்
அடிப்பேன் தகரத்தில் பிந்தாமல்
இன்றைக்கு மாமா கூப்பிட்டார்
இனிப்பான பழம் தந்தார் சாப்பிட்டேன்
பொய் சொல்ல மாட்டேன் ஒரு போதும்
கையை மணந்து பார் இப்போது

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

சிறுவர் மனதில் பதிய வைத்தார்கள். அவர்களைத் தேடி அறிய வைத்தார்கள். அதன் பின்னர் அவர்கள் பா. சத்தியசீலனை, அழ வள்ளியப்பாவை, முருகையன் கவிதைகளை பாரதி பாப்பாப்பாட்டு என அறிந்து வாசித்துச் சுவைத்துத் தெளிந்தனர். இது போன்ற சிறு சிறு கவிதைத் தொகுப்புகளை மாணவ சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். இன்றுள்ள கற்றவர்கள், கற்ற தாய் மார்கள் அனைவரும் தங்கள் தங்கள் வீட்டு அளவிலேனும் பிள்ளைகளை வாசிக்கத் தூண்டவேண்டும். இலகுவாக நூல்கள் பெற்றுக்கொள்ள உங்கள் பகுதியிலுள்ள நூல் நிலையங்களை அணுக வேண்டும். அவனை ஈடுபடுத்த வேண்டும். இந்தவகையில் அவ்வப் பிரதேசங்களிலுள்ள ஆலயங்கள் பெரும்பணி ஆற்றமுடியும். பயம் காரணமாகவோ, பக்தியுடனோ ஆலயங்களை நாடி வரும் சிறுவர்களிடம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, பாப்பாப்பாட்டு, போன்ற சிறுவர் நூல்களை மறு பதிப்புச் செய்து இலவசமாக வழங்க முன்வரவேண்டும். இதன் மூலம் அவனை வாசிக்கும் வாசகர் கூட்டத்துக்குள் கொண்டு வரமுடியும். ஒரு தடவை வந்து விட்டால் பின்னர் அவன் தேடித் தேடிப்படிக்கத் தொடங்குவான். வாசிப்பதால் மட்டுமே மனிதன் முழுமனிதனாகின்றான்.

**மகான்.**



# கற்பகதரு --- இயற்கையின் அருங்கொடை

எமது பிரதேசத்தில் ஏழை மக்களின் வாழ்வை ஏற்றம் பெறச்செய்யும் பனை வளம் மண்ணுலகக் கற்பகதரு பனை என்று அனைவரும் அறிந்திருப்பீர்கள். அடிமுதல் முடிவரை வேண்டுவோருக்கு வேண்டியவற்றைக் கொடுக்கவல்ல மரம் பனை ஆகும். பனையானது பூலோக கற்பகதரு ஆகும். இது நீண்டு உயர்ந்தது. நிறமோ, கறுப்பாக இருப்பினும் பல பயன்களை மக்களுக்கு கொடுத்து மதிப்புப் பெற்றுள்ளது.

பனையை உண்டாக்குவது பற்றி யோசித்துப் பார்ப்போமாயின் நிலத்தைக் கொத்தியோ உழுதோ பண்படுத்தாமல் நிலத்தில் விதைகளை புதைத்தால் அவ்விதைகள் முளைத்துப் பெரிய மரமாகிறது. இவற்றுக்கு நீர் பாய்ச்சத் தேவையில்லை வளமற்ற வரண்ட பிரதேசத்திலும் மழைகாலத்தில் முளைகள் வளர்ந்து பின்பு மரமாகி எமக்கு அளப்பரியவற்றை வாரிவழங்குகின்றது. பயன் கருதாமல் வளர்ந்து பலன் பல தருவதால் சிறந்த நட்பை பனைக்கு உதாரணமாக்கியுள்ளனர் சான்றோர்.

எமது பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பனை வளம் இப்போது அழிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம் பாதுகாப்பு நிலைகள் அமைக்கவும் பதுங்கு குழிகள் அமைக்கவும் பனைவளம் பரவலாகக் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டுள்ளன. இளைய தலைமுறையினர் மிகவும் கவனமெடுத்து வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

நம் முன்னோர் தம் அறிவெல்லைக்கமைந்த வகையில் பனை தந்த செல்வம் அனைத்தையும் வளமாகப் பாவித்து திடமாக வாழ்ந்தனர் கடும்கோடை காலத்திலே பனை தந்த நுங்கும் பதநீரும் கள்ளும் ஊட்டச்சத்து மிகுந்த குளிர்பானங்களாய் அமைந்தன. இவை கோடை காலத்தில் வரும் வெப்ப நோய்களுக்கு அருமருந்தாகவும் உபயோகமானது. பனம் பழத்தினை சுட்டுக்கறந்த பழப்பாகினைக் காலை உணவாக கொண்டனர். பனங்கழியைக் கறந்து பாயிலே பரப்பி வெயிலிலே காயவிட்டு பனாட்டு ஆக்கினர். மழைகால ஆரம்பத்திலே மண்ணிலே பாத்தியமைத்து பனம் விதைகளைப் புதைத்து அவை ஈன்ற கிழங்கினைக் கிண்டி எடுத்தனர்.

அவை ஒடியலாகவும், புழுக்கொடியலாகவும், உருப்பெற்றது. பனாட்டு, ஒடியல்புட்டு, ஒடியற்கூழ், நமது முன்னோரின் உணவில் ஒரு கூறாக அமைந்தது. ஒடியற்கூழின் சிறப்பும், ஊட்டவளமும், சிறந்த கழிவகற்றியும் என அழகுசுப்பிரமணியம் என்ற ஆசிரியர் ஒருவர் ஆங்கிலமொழியில் எழுதிய ஆராய்ச்சி நூல் பலராலும் விதந்துரைக்கப்பட்டதுடன் மேலை நாட்டவரும் ஒடியற் கூழை விரும்பி உண்ண வைத்துள்ளது.

பனைமரம் மிகவும் வைரமானது. நீண்டகாலம் பழுதுபடாது இருக்கவல்லது. அதனை சீவி வீட்டு கூரைகளுக்கு வளைகளாகவும், சலாகைகளாகவும் உபயோகித்தனர் கிணற்று துலாவாக பயன்படுத்துவர். பனம்மட்டை, பன்னாடை, விறகுகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. பனம்மட்டை, வேலிக்கு பயன்படுத்தப்படுகிறது. மாடுகளுக்கு உணவாக பனையோலை பயன்படும். குருத்தோலை மூலம் பாய், கடகம், பெட்டி, சுளகு, விசிறி, இன்னும் எத்தனையோ செய்யப்படுகிறது. இவ்வாறு பனையின் பயன் கூறமுடியாத அளவுக்கு விரிந்து செல்கிறது.

பனை உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்த ஏற்ற வகையில் பனைசார் கைப்பணிப் பொருட்களை நவீனப்படுத்தி ஏற்றுமதி செய்வதன் மூலம் வடக்கு, கிழக்கில் கிராமமட்டத்தில் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடும் வறிய மக்களுக்கு உச்ச வருமானத்தை தேடிக்கொடுக்கலாம். எமது அரசாங்கம் பனையில் இருந்து பெறும் கைப்பணிப் பொருட்களை ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எமது அண்டை நாடாகிய இந்தியா பனையிலிருந்து பெறும் சகலவிதமான பண்டங்களையும் கைப்பணிப் பொருட்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருந்தொகையான அந்நியச் செலாவாணியைச் சம்பாதிக்கிறது. எனவே எமது நாட்டு நிபுணர்களிடமிருந்து ஆலோசனை பெற்று பனைவளத்தை நவீனமுறையில் விருத்தியடையச் செய்ய வேண்டும். இதன் மூலம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பினையும் கணிசமான வருமானத்தையும் ஈட்டச் செய்யலாம் 1970களில் பனம் பொருள் ஆராய்ச்சி நிறுவனமும் மட்டுவில் நடராசா மாஸ்ரரின் முயற்சியாலும் கிராமங்கள் தோறும் பனங்கட்டித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும், தொழிலாளர்களுக்கு வருமானமும், பாவனையாளர்களுக்கு உள்ளூர் கலப்படமற்ற பனங்கட்டியும் கிடைத்தது.

அத்துடன் மட்டும் பனையின் பெருமை நின்றுவிடவில்லை. ஆதிகாலத்தில் எமது முன்னோர்களால் படைக்கப்பட்ட பல காவியங்களை இன்றும் நாம் படித்துப் பயன்பெறுகிறோம். கணனித்தட்டச்சோ, வேறு இதர வசதிகளோ இன்றிய அக்காலத்தில் அவர்களால் இத்துணை பெரிய காவியங்கள் எவ்வாறு எழுதிப் பேணப்பட்டன என்பது எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. இவ் ஆச்சரியத்தின் பின்னணியில் உள்ளது. எமது பனைவளம் என்று கூறுவதில் எவ்வளவும் ஐயமில்லை. அனைத்துக் காவியங்களும் எழுத்தாணி கொண்டு பனையோலைச் சுவடிகளில் எழுதப்பட்டன. எத்தனையோ ஆயிரம் ஓலைச்சுவடிகளில் எழுதிப்

பாதுகாக்கப்பட்டன. அத்தடன் கூர்மையான எழுத்தாணி கொண்டு எழுதும் மென்மையான உயர் கைப்பக்குவத்தையும் அவர்களுக்கு வழங்கியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. அதனுடன் இன்றும் எம்மவர் மத்தியில் கல்வியின் ஆரம்பத்தில் பனையோலைச் சுவடி தனக்கென ஒரு முதன்மைநிலையை பெற்றுள்ளது அதாவது ஏடு தொடக்கல் நிகழ்வில் ஓலை அரிச்சுவடி பயன்படுத்தப்படுவது யாவரும் அறிந்ததே.

பனை வளம் குன்றிய இக்காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் பனை விதை நடுகையை மேலும் விஸ்தரிக்க வேண்டும். இவ்வாறான மூலவள உற்பத்தியில் ஈடுபட்டு பனைவளம் பெருக்கி ஏழைமக்களின் வாழ்வை ஏற்றம் பெறச் செய்வோமாக.

எமது பாட்டன் பூட்டன் காலத்தில் ஞாலத்தின் வளம் கருதி வளர்த்தெடுத்த இவ் அரிய சொத்துக்கள் கண்டபடி ஒரு கட்டுப்பாடின்றி வெட்டி வீழ்த்தப்பட்டுவிட்டனவேயொழிய வளர்த்தெடுக்க ஒரு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை. இப்போது நாட்டி வளர்த்தால்கூட் 20-30 வருடங்களாகும் அவை பயன்தர. ஆதலால் இன்றே இதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

செல்வி. லதா கோபாலசிங்கம்







# சித்த மருத்துவமும் இந்து சமயமும்

சித்த மருத்துவம் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட ஓர் இயற்கை மருத்துவமுறையாகும். சித்த மருந்துகளின் மூலப்பொருட்கள் எல்லாம் இயற்கையிலிருந்தே பெறப்படுகின்றன. இதுபோலவே ஆலயங்களும் கடவுள் வழிபாட்டுக்கென ஒன்று கூடும் பக்தர்க்ள் தூயநீர் தூய காற்று இயற்கைச் சூழலிலேயே அமைந்துள்ளன. கோவில்களில் நடைபெறும் கிரியைகள் எல்லாவற்றிலும் இயற்கைச் செல்வம் இன்றியமையாத ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம். அவை சித்தமருத்துவ மூலப்பொருளாகவும் காணப்படுகின்றன.

இயற்கையை அதன் புனிதத் தன்மையை பேணிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் மூர்த்தி, தலவிருட்சம், தீர்த்தக்கேணி, பரந்ததூய வீதி, என்பனவற்றின் கூட்டே ஆலயங்கள் ஆகும். இதனால்தான் ஆலய வழிபாட்டில் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து மருந்துப்பொருட்களானவற்றுக்கு புனிதத் தன்மை தெய்வீக தன்மையை வழங்கியுள்ளனர். கோவில் அமைப்பு, அங்கே அமைக்கப்படும் விக்கிரகங்களின் உலோகங்களின் மூலப்பொருட்களின் தன்மை, அபிஷேகத்திற்கு உபயோகிக்கப்படும் திரவியங்கள், அஷ்டபந்தனத்தில் இடம்பெறும் மூலப்பொருட்கள், பிம்ப சுத்தியில் இடம்பெறும் பலவகை மூலிகைகள், ஹோமம், பத்திரபுஷ்பங்கள், பலவகையான பிரசாதங்கள் அவற்றின் போசாக்குத் தன்மைகள், திருநந்தவனத்தில் வளர்க்கப்படும் மூலிகைகள் போன்ற ஆலயச் செயற்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் அர்த்தங்கள் உண்டு.

ஒரு காலத்தில் ஆலயக்குருமார் வைத்தியத் துறையிலும் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களுக்கு ஆலயக் கிரியைகளில் இடம்பெறும் மூலிகை மருந்துகள்பற்றி தெளிவான அறிவு இருந்துள்ளது. அறிவுத் தேடலையும் விரிவாக்கல்களையும் விட்டு குருமாரும் சாதாரண மனித நிலைக்கு இறங்கி பொருட்களுக்காக சராசரி மனிதருடன் போட்டியிடும் நிலைக்கு வந்துள்ள தற்காலத்தில் அத்தகைய நிலை மிகக் குறைவாகவே உள்ளது.

சித்த மருத்துவத்தில் உபயோகிக்கப்படும் மூலிகைகள் அனைத்துமே ஓமத்திரவியங்களாகவே உபயோகிக்கப்படும் மூலிகைகள் இந்துசமய வழிபாட்டு முறையில் இணைக்கப்பட்டுள்ளன. எந்தெந்த மூலிகைகளின் புகை வளி மண்டலத்திலுள்ள கிருமிகளைக் கட்டுப்படுத்த உதவுகின்றனவோ அவையெல்லாம் ஓமத்திரவியங்களாகக் காணப்படுகின்றன. அவையாவன அரசு, ஆல், எருக்கு, மா, வன்னி, பலாசு, நாயுருவி, கருங்காலி, அறுகு இவை சமித்துகள் எனப்படும் இவற்றின் புகையால் சுற்றாடல் சுத்தியாவது சுவாசநோய், நாசிநோய், சிரசு நோய், என்பன தீரும் எனவே இதை நசியத்திற்கு ஒப்பிடலாம்.

எந்தெந்த மூலிகைகளின் சாறுகள் மருந்தாக உட்கொள்ளப் படுகின்றனவோ அவையெல்லாம் கும்பத்திரவியத்தில் உள்ளடக்கப் படுகின்றன. அவையாவன:- மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், குளவிந்த மஞ்சள், கோரைக் கிழங்கு, வில்வம் பூ, இலாமிச்சை, சந்தனத்தூள், மருக்கொழுந்து நெல்லிவற்றல், வெண்கோட்டம் இவை ஊறிய நீரே அபிஷேகத்தீர்த்தம் எனப்படும். எல்லோரும் நலமாக இருக்க வேண்டும் என்ற பெருநோக்கில் தீர்த்தம் அனைவருக்கும் பங்கிட்டு வழங்கும் முறைமை தொன்று தொட்டே இருந்து வருகிறது. ஆலயங்களில் மருத்துவ குணமுடைய மூலிகைகள் ஒவ்வொன்றும் அபிஷேகத்தில் இடும் போதும், ஓமத்தீயில் இடும் போதும் அவற்றுக்குரிய மந்திரங்கள் கூறப்பட்டு இடப்படும் போது மருத்துவ சக்தியும் மந்திரசக்தியும் இணைந்த தீர்த்தம் புகை உடல் நலத்தைப் பேணுகின்றன.

கும்பாபிஷேகத்தின் போது விக்கிரகத்தை ஆசனக்கல்லுடன் சேர்த்து நிறுத்த சுக்கான் கல்பொடி, சாதிலிங்கம், செம்பஞ்சு, குங்குலியம், கொம்பாக்கு, காவிக்கல், வெண்மெழுகு, பசுநெய், போன்ற எட்டு சரக்குகளை கொண்டு மருந்து சாத்துதல் எனும் அஷ்டபந்தனம் இடம்பெறும். அபிஷேகம் செய்யப்படும் பால், தயிர், போன்றன இதில் பட்டு கலந்து வருவதால் அது மருத்துவ குணமுடையதாகக் காணப்படுவதால் தீர்த்தம், பஞ்சாமிர்தம் போன்றவை சுவையாக மட்டுமின்றி பிணி தீர்க்கும் அருமருந்தாகவும் அமைகிறது. வருடப்பிறப்பன்று மருத்து நீர் தேய்த்துக் குளித்தல் சிறப்பம்சம். இது பல மூலிகைகளையும் சேர்த்து அவித்து பெறப்படுவது. திப்பிலி, மாதுளம் பூ, தாமரைப்பூ, பால் போன்றன அவற்றுள் சிலவாகும் இவை குளிச்சியை தருவதுடன் மருத்துவ சுகாதாரமுடையவை

மேலும் விபூதி, சந்தனம், போன்ற பிரசாதங்களும் மக்களுக்கு நன்மை பயக்கின்றன. நைவேத்தியத்தில் வழங்கப்படும் கடலை, அவல், அறுசாதம், மோதகம், போன்றன போஷாக்கு நிறைந்த உணவுகளாகும் கற்பூரம் ஏற்றுதல் சாம்பிராணி இடுதல் என்பனவும் சுற்றாடலை தூய்மைப்படுத்துவதுடன், கற்பூரம் கண்ணில் ஒற்றும் போது கண்ணிற்கு சிறந்த பலனளிக்கிறது.

காவடியாட்டத்தின் போது உடலின் எவ்விடங்களில் செதில்கள் குத்தப்படுகின்றனவோ அப்புள்ளிகள் அக்யுபஞ்ஷர் (Accupuncture) முறையில் குறிப்பிடப்படும் புள்ளிக்கு நிகரானவை நெற்றிப்பொட்டில் சந்தனம்

இடுவது. காதில் பூச்சூடுவது, காது குத்துவது போன்றனவும் நரம்புமையங்களை இனங்கண்டே பாதணிகள் இன்றி வீதிவலம் வரும்போது பாதத்திலுள்ள நரம்பு முடிவிடங்கள் தூண்டப்பட்டு அவற்றின் தொழிற்பாடு சீராக்கப்படுகின்றது.


குட்டிக் கும்பிடுதல் தோப்புக்கரணம் இடுதல், அங்கப்பிரதிஷ்டை மேலும் அட்டாங்க பஞ்சாங்க, நமஸ்காரம் என்பன உடலுக்கு சிறந்த உடற்பயிற்சிகளாக அமைகின்றன.

இவ்வாறு மேலும் இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து முறைகளும் சித்த மருத்துவ முறைகளுடன் ஒன்றிக் காணப்படுகின்றன. எனவே இவற்றை நன்கு அறிந்து அதற்கேற்ப நாம் செயற்பட வேண்டும். விதிக்கப்பட்ட முறையில் பொருட்களைக் கொண்டு அதற்கேற்ப பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு உரிய பயனைப் பெற வேண்டும். ஆலயம் என்பதை வெறும் மதச் சின்னமாகக் கருதாது முன்னோர் வகுத்த வழியில் எமது சமயத்தை பேணி உரிய பயனைப் பெறுவோமாக.

**சு. ரகுசாந்**
சித்தமருத்துவத்துறை
3ம் வருட மாணவன்
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

---





## சமூக செயற்பாடுகளும் மனிதசெயற்பாடுகளும்

**இ**ன்றைய சமூகத்தில் மாற்றங்கள் மிக விரைவாக நிகழ்ந்து வருகின்றன. இவற்றுட் சில மாற்றங்களை பலர் வரவேற்கலாம். இன்னும் சிலர் எதிர்க்கலாம். ஏனெனில் மாற்றங்கள் எல்லாம் எப்போதும் எல்லோருக்கும் ஒரேமாதிரியானவையாகவோ அல்லது இலகுவான வையாகவோ இருப்பதில்லை. மாற்றங்களுக்கு ஏற்ப தன்மை இயைபுபடுத்திக் கொள்ளாதன அழிந்து போக நேரிடும் என்ற கருத்துக்களைப் பரிணாமவாதிகள் முன்வைத்துள்ளனர். இன்றைய இளைஞர்கள் சமூகத்தில் தமக்குரிய இடம் வழங்கப்படுவதில்லை, தமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை எனக் குறைப்படுகின்றனர். தாம் துன்பமடையும் போது எவரும் தமக்குதவ முன்வராத நிலையையும் சுட்டிக்காட்டுகின்றனர். இதனடிப்படையில் சமூக செயற்பாடுகளுக்கும் மனித இயல்புகளுக்கு மிடையே பொருந்தாத் தன்மை அவர்களுக்கான சரியான வழிகாட்டல்களின்றி வேதனையும் விரக்தியும் வாழ்வில் வெறுப்பும் அடைகின்றனர். இன்றைய நிலை இவ்வாறிருக்கும் போது எமது பாரம்பரியமான வாழ்க்கைக்கான ஆலோசனை வழிகாட்டல் எவ்வாறு புராதன சமூகத்தை வழிப்படுத்துகிறது என்பதை சற்று ஆழமாக நோக்குவோம்.

### சமூக அமைப்பில் சிறப்பைத் தீர்மானிக்கும் குடும்பங்களின் பங்களிப்பு

புராதன சமூகங்களில் ஆலோசனை வழிகாட்டல் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களைப் பின்பற்றுவதன் வாயிலாகக் கிடைக்கப்பெற்றன. அவ்வாறு பெற்றுக்கொண்ட கல்வியும், தொழிலும் அதன் வழியே அமைந்தன. விஞ்ஞான முன்னேற்றமின்மையால் அன்றைய வாழ்க்கை முறையும் மிக எளிமையாகவே இருந்தது. இன்று போலல்லாது குடும்ப உறவு, குடும்பவாழ்க்கை முறை, குடுப்பப்பொறுப்பு, ஆண் பெண் உறவு

நிலை என்பன வலுப்பெற்றுக் காணப்பட்டமையால் குடும்பப் பாரம்பரியம், விழுமியங்கள் என்பன சிறப்பான முறையில் கட்டியெழுப்பப்பட்டன. இதனால் குடும்ப உறுப்பினர்களான மூத்தோர்களின் ஆலோசனையும் வழிகாட்டலும் பிரச்சினைகளைத் தீர்க்கப் போதுமானவையாகக் காணப்பட்டன.

மனித வாழ்க்கையின் ஆரம்பப்படி குழந்தைப் பருவமாகும். புராதன காலங்களில் குழந்தைப் பருவத்திற்கான அன்பு, அரவணைப்பு, பரிவு என்பன வீட்டுச் சூழலிலேயே போதுமான அளவு கிடைக்கப்பெற்றது. குழந்தை வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான இடம் இல்லமாகவே மிளிர்ந்தது. தாயானவள் முழுநேரமும் குழந்தையினருகில் இருந்து குழந்தை விரும்பும் வகையிலான அனைத்து செயற்பாடுகளையும் குறிப்பறிந்து நிறைவேற்றி வந்தாள். பிள்ளை தாய்ப்பாலைப் போதியளவில் அருந்தவும் அவ்வாறு அருந்தும் குழந்தைகளுக்குத் தாயினால் கிடைக்கும் அரவணைப்பு, ஸ்பரிசத்தால், மனவுறுதி பிறரிடம் அன்பு, சமூக ஈடுபாடு ஆகியவற்றை இயல்பாகவே பெற வாய்ப்பேற்பட்டது. புராதன காலங்களில் தாயுடன் பழகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்பட்டதால் அக்குழந்தைக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற சந்தேகம் அக்கணப் பொழுதிலேயே தீர்க்கப்படுவதனால் ஆளுமைச் சீர்கேடுகள் நீங்கி பிள்ளையின் காப்புணர்ச்சி மேலோங்கிக் காணப்பட்டது. தாயின் தாலாட்டினால் குடும்ப உறவுகளை அறியவும் ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு சகிப்புத்தன்மை போன்ற ஆற்றலையும் சமூகத்துடன் அந்நியோன்யமான பிணைப்பினையும் ஏற்படுத்துகின்றது.

அத்தோடு தந்தையிடமிருந்து ஒழுக்கம், துணிவு, கருத்து வெளிப்பாடு, தலைமைத்துவம் முதலானவற்றைக் கற்றுக் கொண்டனர். ஆண் பிள்ளைகள் தந்தையிடமிருந்து சமூகத்தில் ஆணின் பங்களிப்பு யாது? என்றும் பெண் பிள்ளைகள் தாயாரிடமிருந்து தமது குடும்ப சமூக ஒழுக்கங்களையும் கடமை, பணிவு, பொறுமை போன்ற நற்பண்புகளையும் அறிந்து கொண்டு நற்பிரஜைகளாக வாழ்ந்தனர். இவற்றுக்கெல்லாம் மூலாதாரமாக விளங்குவது நம்பிக்கை. பெற்றோரிடத்தே பிள்ளை நம்பிக்கை வைத்தல் அவசியம். நம்பிக்கையே பிள்ளையின் ஆளுமைவளர்ச்சிக்கு மூலாதாரனமானது.

இன்று இந்நிலை முற்றாக மாறி பிள்ளையின் காப்புணர்ச்சி சிதைவடைந்தும், ஆளுமை குன்றிய சமூகமுமாகவே இன்றைய சமூகம் காணப்படுகின்றது. காப்புணர்ச்சி பற்றிய பரிசோதனையை உளவியலாளர் எச்.எப்.ஹாலோ செய்து காட்டிய போது, ஒரு தாயானவள் பின்வருமாறு புலம்பிக் கதறி அழுதாளாம் "ஐயோ நான் இவ்வளவு காலமும் ஒரு கம்பினாலான தாயாக இருந்தேனே". இன்றைய தாய்மாரின் நிலையும் இவ்வாறாகவே காணப்படுகின்றன.

சமய நிறுவனங்கள் சார்ந்த வழிகாட்டல்கள்.

இவ்வாறே பிள்ளைப் பருவக் கல்விக்காக குருகுலத்திற்கு குருவைநாடிச் சென்ற சீடர்களுக்கான கல்விகற்பித்தல் என்பதினைவிட அவர்கள் கல்வியினூடாக ஆன்மீகம் பண்பாடு விழுமியங்கள் சார்ந்த வாழ்க்கைக்கான வழிகாட்டல்களையே மேற்கொண்டு வந்தனர். இவ்வாறு குருகுலங்கள் மட்டுமின்றி பர்ணசாலைகள், பள்ளிகள், ஆலயங்கள், மடங்கள், திண்ணைப்பள்ளிகள், ஆதுலர்சாலைகள், ஆதீனங்கள், என்பனவும் சமயம் சார்ந்த வாழ்க்கைக்கான வழிகாட்டல்களையே மேற்கொண்டன. குருவிற்கு பணிவிடை செய்வதன் மூலமாக அவர்கள் பெரியோரைக் கனம் பண்ணவும் பெரியோருக்கு கீழ்ப்படிவுள்ள வர்களாகவும், சமூகத்திற்கு பொருத்தப்பாடுடையவர்களாகவும் விட்டுக் கொடுப்பு மனப்பாங்குடனும் குடும்பம் பொறுப்பு என்பவற்றைப் பெற்று ஒரு பொருத்தப்பாடுடைய சமூகத்தையும் அச்சமூகத்திற்கான பொருத்தப் பாடுடைய முழுமையான பூரணமான மனிதனையும் உருவாக்கினார்.

இலக்கியம் சார் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும்

இதனை விட அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களான மகாபாரதம, இராமாயணம், அரிச்சந்திரன் காவியம் ஐம்பெருங்காப்பியங்கள் கவிதைகள், முதுமொழிகள், விடுகதைகள், பகவத்கீதை போன்ற இலக்கியப்படைப்புக்களும் அக்கால மக்களுக்கான சிறந்த ஆலோசனை வழிகாட்டலையே மேற்கொண்டுவந்தன. மக்களால் அன்றாடம் மேற்கொள்ளப்பட்டுவரும் கலாசார சடங்குகள் சமயவிழாக்கள் நாடகங்கள் பொம்மலாட்டங்கள் போன்றனவும் வாழ்க்கைக்கான வழிகாட்டல்கள் மட்டுமன்றி தொழிலுக்கான வழிகாட்டலையும் மேற்கொண்டுவந்தன.

மகாபாரதத்தில் ஆசையும், துவேசமும், பொறாமையும் கோபமும் கொண்ட வாழ்க்கை நிலையாது என்பதற்கான வழிகாட்டல் தமிழர் பண்பாட்டில் இவையெல்லாம் பாவச் செயல்கள் என்றெண்ணி கட்டுப்பாடுடையவர்களாகவும் கட்டுக்கோப்புடனும் வாழ வழிநூலாகக் கொண்டனர். "தர்மம் தலை காக்கும்" "அதர்மம் என்றும் அழிவையே தரும்" என்கின்ற அறக்கருத்துக்களைச் சிறப்பான முறையில் இலக்கியங்களில் எடுத்தியம்பியுள்ளனர் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, கொண்ட மனிதர்களின் வாழ்க்கை நிலையாமை பற்றியும் கூறி மக்களை வழிப்படுத்தி வந்தன. அரசாட்சி அரசதர்மம் மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே எனக் கூறி மன்னர்களின் பெருமைகளை எடுத்தியம்பியும் சமூகத்தை நல்வழிப்படுத்தி வந்தவையும் இவ்விலக்கியங்களே என்றால் அதுமிகையாகாது. புறாவிற்காகத் தன்னையே கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி, முல்லைக்கு தேர் கொடுத்த பாரி, பசுவிற்கு உரிய தீர்ப்பு வழங்கிய மனுநீதிச் சோழன், உண்மையே பேசி உத்தமனாய் வாழ்ந்த அரிச்சந்திரன்,

செய்நன்றி மறவாத கர்ணன், யுத்த தர்மத்தை உணர்த்திய கிருஷ்ணர் போன்றோரின் வழிகாட்டல்களைப் பின்பற்றி மனிதன் முரண்பாடுகளின்றி மனிதனாக வாழ்ந்து வந்தான்.

பெண்ணடிமை நீங்க பாரதியார் பாடல்கள் "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் விந்தைமனிதன் தலைகுனிந்தான் "நாட்டின் விடுதலைக்கான வழிகாட்டல்" "அச்சமில்லை அச்சமில்லை" "சாதிமதபேதம் நீங்க ஓடிவிளையாடுபாப்பா" "வெள்ளை நிறத்தொரு பூனை..." என்கின்ற கவிதை வரிகளுடாக சமூகத்தைப் பாரதி நல்வழிப்படுத்தி அவற்றில் வெற்றியும் கண்டான். திருக்குறள் ஊடாக நல்வாழ்க்கைக்கான பல அறிவுரைகள் இல்வாழ்க்கைக்கான வழிகாட்டல் கல்விக்கான வழிகாட்டல் தொழிலுக்கான வழிகாட்டல்களும் கூறப்பட்டுள்ள குறட்பாக்களை நாம் காணலாம். இவ்வாறே அக்கால மூதாதையரின் பழமொழிகள், முதுமொழிகள், நாட்டார்பாடல்கள் என்பனவும் மக்களை நல்வழிப்படுத்தி வந்தன. "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்று ஒற்றுமையின் தார்ப்பரியத்தை இவ்வாறான கருத்துக்களின் வாயிலாகக் கூறி மக்களை நல்வழிப்படுத்தினர்.

இவ்வாறாக நாம் தொகுத்து நோக்குமிடத்து வரலாற்று ரீதியில் பாரம் பரியமாக ஓலைக்குடிசைகளிலும் கலப்பையும் கையுமாக வாழ்ந்த மனிதன் இன்றைய மனிதனைப் போலல்லாது தனது வாழ்க்கைச் சக்கரத்தினைச் சிறப்பான முறையிலேயே ஓட்டிவந்தான். தமக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தமது அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு எழும் சகல விதமான முரன்பாடுகளையும் சுமுகமான முறையில் தீர்த்துக்கொண்டனர். தற்போது விஞ்ஞான தொழில் நுட்பமாற்றங்களினால் நவீன உலகம் பல மாற்றங்களை வேண்டியோ, வேண்டாமலோ ஏற்கவேண்டி உள்ளது. இம்மாற்றங்களுக்கு ஏற்ப தம்மையும் இயைபுபடுத்திக் கொள்ளவேண்டிய தேவையானது பெரியவர்களுக்கு மாத்திரமின்றிச் சிறுவர்களுக்கும் அவசியமானது. சமூகமாற்றங்களுக்கு ஏற்ப தமது பாரம்பரியமான வாழ்க்கை முறையினையும் தமது சமூக பாரம்பரிய பண்பாடுகளையும் மாற்றி அமைத்து பின்பற்ற வேண்டும்.

**திருமதி. பிரயதர்ஷினி அங்கயன்**
ஆசிரியர்
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.



# மனித வாழ்வில் சமயம்

**வா**ழ்க்கை என்பது இறைவன் எமக்களித்த ஒரு வரம். அந்த வரத்தை நாம் சீரிய வழியிலேயே பயன்படுத்துதல் அவசியம். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனே வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவன் வாக்கு. அவ்வாறு நாம் வாழ்வாங்கு வாழ வழி செய்வதாய் அமைவதே சமயம் ஆகும். அதனால் தான் சமயம் என்பதை வாழும் நெறி என வரையறை செய்கிறார்கள் ஆன்றோர்கள். வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று கருத முடியாத அளவுக்கு நமது வாழ்க்கை சமயத்துடன் பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. அதே வேளை எமது சமுதாயமும் கூட சமயத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதாய் அமைந்துள்ளது.

இன்று பெரும்பாலும் பலரையும் நல்வழியில் நெறிப்படுத்திக் கொண்டிருப்பது சமயமே என்றால் மிகையில்லை. சட்டத்துக்கும் அதன் தண்டனைகளுக்கும் சிறிதும் அஞ்சாதவன் கூட, சமயத்துக்கும் அதன் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு நல்வழியில் நடக்கின்றான். இதனை சாதாரணமாகவே சமுதாயத்தில் அவதானிக்கலாம். அதனால் தான் இன்றும் மனிதன் சிறிதளவிலாவது நல்வழியிலே தன் பாதையை நெறிப்படுத்திக் கொண்டுள்ளான் என்று கூறினாலும் அது தவறில்லை. மனிதனை நெறிப்படுத்துவதில் சமய விழுமியங்கள் பெரிதும் பங்காற்றி வருகின்றன. உயிரினும் மேலான ஒழுக்க வாழ்வின் வாயிலாக பெறப்பட்ட பண்புகளையும் தலையாய பெறுமானங்களையும் விழுமியங்கள் என சுருங்கக்கூறலாம். ஒழுக்கமும் வாழ்வும் ஒரு நாணயத்தினுடைய இருபக்கங்களுக்கு ஒப்பானவை அதை நெறிப்படுத்துவது சமயமே.

சமய வாழ்வினுடைய வெற்றி, ஆன்மீக விடுதலை எல்லாமே நாம் கடைப்பிடிக்கின்ற விழுமியங்களில்தான் தங்கியிருக்கிறது. உயர்ந்த பண்பாடுகள், சீரிய ஒழுக்கங்கள், பழக்கவழக்கங்கள், மனித நேயப்பண்புகள், தியாக சிந்தனைகள், என்பனவற்றை தன்னகத்தே கொண்ட ஒருவனே நல் விழுமியங்களையுடையவனாக போற்றப்படுவான். இவ் மனித விழுமியங்கள் யாவுமே அன்பினை உலக அளவில் வளர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே அமைந்துள்ளன "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உணர்வலையை எல்லோர் மனத்திலும் உருவாக்குகின்ற ஒன்றாக அமையும். பொதுவாகச் சமயங்கள் அனைத்தும் பாவங்களையும், தீயனவற்றையும் விலக்கி, சீரிய வாழ்க்கை வாழ வேண்டியும் மதித்து நேசித்தலையுமே விழுமியங்களில் சிறந்ததாக குறித்துச் சொல்கின்றன.

இவையே சமயம் கூறும் நற்பண்பு அன்பு ஆகும். அன்பில்லாமல் இவ்வுலகமே இயங்க இயலாது எனலாம். இறைவன் அன்பே வடிவானவன். எல்லாச் சமயங்களும் அன்பையே போதித்து நிற்கின்றன "வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடிய இராமலிங்க வள்ளலாரும் "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு" என்ற இயேசு கிறிஸ்துவும் சாத்வீகமான அன்பை போதித்த புத்தபகவானும், அல்லாவும் சகோதரத்துவத்தைப் போதித்து மக்களுக்கு அருளுவது அன்பொன்றேயாகும். ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழ்தலே உண்மையான சந்தோஷமான வாழ்க்கையாகும். பிறர் சந்தோஷத்தில் தான் சந்தோசிப்பது உயர்ந்த பண்பாகும்.



இவ்வாறாக மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து காணப்படுவது மட்டுமல்லாமல் மனித வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தையும் வழங்குகிறது. சமயம் மனித வாழ்க்கையை மேன்மையுறச் செய்து மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கத்தையும் நிறைவேற்றுவதே சமயங்களின் பொதுவான நோக்கமாக காணப்படுகின்றது. எனவே நாம் சமயம் கூறும் நல்வழியில் வாழ்ந்து வாழ்க்கையிலே உயர்வை அடைவோமாக

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

வன்னியசிங்கம் கபிலன்
12ம் ஆண்டு மாணவன்
சென்ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.



# சமயமும் சமூகமும்

முன்னைய யுகம் புராதன யுகம் எனப்படுகிறது.மனித வாழ்க்கையோடு முன்னைய யுகம் முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. சமூக முன்னேற்றத்துக்கு சமயம் இன்று அடித்தளமாக அமைந்துள்ளது. எனவே சமயத்திற்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள தொடர்பினை ஆராய்தல் பயனுடையதாகும்.

சமூகம் என்பது பல்வேறு சேர்க்கைகளின் பிரதிபலிப்பாகும். பெரும்பாலான சமூக அமைப்புக்கள் இன, மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றன. இத்தகைய கூட்டத்தினர் ஓர் இடத்தில் கூடி வாழும் போது அவர்களை ஒரு சமூகத்தினர் என்றழைப்பர். இத்தகைய சமூகம் இன்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கு சமயம் துணை செய்கிறது.

சமயம் இன்று மனித வாழ்க்கையுடன் பிரிக்கமுடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. நாளுக்கு நாள் இத்தொடர்பு வலுப்பெற்றுவருகிறது. நாகரீக வளர்ச்சியற்று காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்த மனிதர்கள் நாகரிகமுற்று நல்ல பண்பாடுகளைக் கற்றுக் கொள்வதற்கு நமது முன்னையோர் செய்த சாதனைகள் துணை செய்தன எனலாம். முன்னைய காலத்தில் நோய்களால் பாதிப்புற்றோருக்கும் வாழ்க்கை வசதியின்றி தவித்தோருக்கும் சமயம் வழிகாட்டியாக அமைந்தது.

இதற்கு ஆதாரமாக பல தொல்பொருட் சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சடங்குகளை நோக்குவோமானால் சடங்குகள் சமயத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்பாகும். வழிவழியாக வரும் மரபுகளைக் காத்திடும் பணிக்கு சடங்குகள் பெரிதும் உதவுகின்றன. முன்னோர் இவற்றைக் கரணங்கள் என்கிறார்கள். உண்மையான உணர்வுடன் மனம் ஒன்றிச் செயற்பட்டால் சடுதியில் பயன் தருவது எனும் கருத்திலேயே சடங்குகள் செய்யப்படுகின்றன. முன்னோர்கள் செய்த செயல்களைக் காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்தாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கின் முறையாகும். வாழ்க்கை இன்பத்தைப் பெற்றுக்கொள்ளவும் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளவும் கடமைகளை உணர்ந்து செயலாற்றிக் கொள்ளவும் அதில் வாழ்வினை வெற்றி கண்டு பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளவும் மக்கள் ஒப்பரவு முறையில் உதவியும் துணையுஞ் செய்து, உறவுகளை, வலுப்படுத்திக் கொள்ளவும் சடங்குகள் உதவுகின்றன. இவ்வகையில் எமது சமயத்தில் மனித வாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித சடங்குகள்



இடம்பெறுகின்றன.

மக்களின் மன வலிமையை அதிகரிக்கவும் நம்பிக்கை அடிப்படையில் அவர்கள் வாழ்வில் வளமும் நலமும் மிகுவதற்கு சமயங்கள் உதவுகின்றன. குடும் நலம், உடல் நலம், விசுவாசம், தன்னம்பிக்கை, துணிவு, பணிவு, பக்தி, அன்னியோன்யம் எனும் பண்புகளை அதிகரித்து வாழ்வில் ஒழுக்கம், நியாயம், நேர்மை, தூய்மை, என்பவற்றை சமயம் அதிகமாக்குகின்றது. எனவே தான், வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று கருத முடியாத அளவுக்கு நமது வாழ்க்கை சமயத்தினால் மெருகூட்டப்பட்டுள்ளது. குறிப்பாகச் சைவ சமயிகளாகிய நமது வாழ்வியற் கருமங்கள் யாவும் இறை சிந்தனையுடனேயே ஆரம்பித்து இறைசிந்தனையுடனேயே நிறைவெய்துகின்றன. நமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியின் பால் நமது வாழ்வு சமயத்துடன் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகிறது. அதாவது நாயன்மார்கள், சமயச் சான்றோர்கள், அநுபூதிச் செல்வர்கள் என்போர் வாழ்ந்து காட்டிய வழியில் நமது வாழ்வை அமைத்துக் கொள்வோமானால் எந்நாளுமே இன்பம் கூடும்.

காலத்தால் முற்பட்ட சமயமாகிய நமது சைவம் இன்றளவும் நிலைத்து எம்மையெல்லாம் சீரிய வழியில் நெறிப்படுத்திச் செல்வதற்கு காரணம் அந்நெறி கூறும் ஒழுக்கங்கள் செயலாக்கம் பெறும் ஆலயங்களாலேயே எனலாம். எமது சைவ சமயத்தையும் ஆலயங்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவுக்கு அவை பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அருவம், உருவம், அருவுருவம், என்னும் மூவகைத் திருமேனிகளுடைய இறைவனை உருவமாகவும் அருவுருவமாகவும் வழிபடத்தக்க இடமாக ஆலயம் அமைகின்றது. அத்தகைய ஆலயங்களை நீக்கி விட்டு எமது சைவ சமய வளர்ச்சியை நோக்குவோமாயின் அது இயலாததாக அமையும். அந்தளவுக்கு சமூகத்தின் வளர்ச்சியில் சமயமும், சமயத்தின் வளர்ச்சியில் சமூகமும் பின்னிப் பிணைந்தவையாகக் காணப்படுகின்றன. எனவே சைவ சமயிகளாகிய நாம் ஒவ்வொருவரும் சமயத்தை சமூகத்தின் மூலம் வளர்த்து நமது முன்னோர்ப்படி நல்ல சமயியாக வாழ்வோமாக!

**கேதீஸ்வரி . கு**

தரம் 11 யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை



## திருவள்ளுவர் எழுதிய ஒரே ஒரு நான்கு வரிப்பாடல்!

உலகத்திலுள்ள அத்தனை ஜீவன்களுக்காகவும் அவர்களை நல்வழிப்படுத்தவும் குறள் எழுதிய திருவள்ளுவர் ஒரே ஒரு ஜீவனுக்காக மட்டும் நான் கடியில் ஒரு பாட்டு எழுதியுள்ளார். தெரியுமா? யார் அந்த பெருமைக்குரிய ஜீவன்? அவரது மனைவி வாசுகி தான் அந்த அம்மையார். தனது கணவரின் செயற்பாடுகள் குறித்து வாழ் நாள் முழுவதும் விமர்சித்ததே இல்லை. அவர் செய்பவை எல்லாம் சரியாகத்தான் இருக்கும். என்று நினைத்தவர். திருவள்ளுவர் சாப்பிடும் போது கையில் ஒரு ஊசி வைத்திருப்பார். கீழே விழும் சோற்றை எடுத்து தண்ணீர் உள்ள ஒரு கிண்ணத்தில் போடுவார். இதற்கான காரணத்தை அந்த அம்மையார் இறக்கும் தருவாயில் தான் கணவரிடம் கேட்டாராம். வள்ளுவரின் இல்லத்துக்கு துறவி ஒருவர் வந்தார். அவர்கள் இருவரும் பழைய சாதம் சாப்பிட்டனர் அப்போது வள்ளுவர் வாசுகியிடம் சோறு சூடாக இருக்கிறது. விசிறு என்றார்.

பழைய சோறு எப்படி சுடும்? அந்த அம்மையார் கேள்வி கேட்கவில்லை விசிற ஆரம்பித்து விட்டார். இப்படி கணவருடன் வாதம் செய்யாமல் விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் கொண்டிருந்தார் அந்தக் கற்புக்கரசி. ஒரு முறை கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். வள்ளுவர் அவரை அழைக்கவே கயிற்றை அப்படியே விட்டு விட்டு வந்தார். குடத்தடன் கூடிய அந்தக் கயிறு அப்படியே நின்றதாம் இப்படி ஒரு மனைவி கிடைத்தால் அந்தக் கணவன் கொடுத்து வைத்தவன் தானே! அந்த அன்பு மனைவி ஒரு நாள் இறந்து போனார். "நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை படைத்து இவ்வுலகு" என்று ஊருக்கே அறிவு கூறிய அந்தத் தெய்வப்புலவரே மனைவியின் பிரிவைத் தாங்காமல் கலங்கி விட்டார் நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லை என்பது தான் இந்த உலகத்திற்கே பெருமை என்பது இந்தக் குறளின் பொருள். ஆக தனது கருத்துப்படி அந்த அம்மையாரின் மறைவுக்காக வருந்தியிருக்க வேண்டியதில்லை முழு உலகுக்குமே நல் அறிவு கூறிய அவர் மனைவியின் பிரிவைத் தாளாமல்

அடிசிற்கினியாளே அன்புடையமாதே
படிசொற் தவறாத பாவாய் – அடிவருடி
பின் தூங்கி முன்னெழும் பேதாய்
இனிதா (அ) ய் என் தூங்கும் என் கண் இரவு

என்று ஒரு நாலு வரி பாட்டெழுதினார். அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே! பின் தூங்கி முன் எழுபவளே பேதையே! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ! என்பது பாட்டின் பொருள் இக்கருத்தை வெளிப்படுத்தித்தான் வள்ளுவர் ஒரு உருக்கமான நான்கு வரிப்பாடலைப் பாடியுள்ளார்.

நா. சுயந்தா
தரம் 11
யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்



## ஒழுக்கம் பேணுவோம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. ஒழுக்கத்தால் மட்டுமே சிறப்பு வந்துசேரும். ஆதலால் ஒழுக்கத்தையே நாம் உயிரினும் மேலாக கொண்டு கண்ணெனப் போற்றுதல் நம் கடமையாகும்.

ஒருவருக்கு பல்வேறு திறமைகள் இருக்கலாம். பல்வேறு பதவிகள் இருக்கலாம் ஆனால் அவரிடம் ஒழுக்கம் இல்லை என்றால் எதுவுமே இல்லை எனலாம் மாணவர்களுக்கிடையேயும் ஒழுக்கமே தலைசிறந்ததாக பேணப்படுகின்றது.

மகாத்மாகாந்தி அவர்கள் "மனிதருள் மாணிக்கம்" எனப் போற்றப்படுவர் அவர் மாணவர்களுக்காக கூறுகிறார் "நீங்கள் கீதை சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மகிழ்ந்து விடமாட்டேன், வரலாறு கணிதம் சமஸ்கிருதம் முதலியவற்றைக் கற்றாலும் கற்காவிட்டாலும் எனக்கு கவலை இல்லை முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும்" காந்தியடிகளின் இக்கூற்று, நமக்கு எதனை உணர்த்துகிறது? ஒழுக்கம் பேணுதலே நமது தலையாய கடமை என உணர்த்துகிறது "தன் ஆசிரியரை உதாசீனப்படுத்துபவன் எவ்வளவு பெரிய அறிவாளி ஆனாலும் அவன் கல்வியில் வீணாகி விடுவான்?" என்று அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இன்றைய மாணவரே நாட்டின் வருங்காலத் தலைவர்கள். **"ஏடு தூக்கும் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடுகாக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்"** நாளைய தலைவர்கள் ஆக விளங்கப்போகும் இன்றைய சிறுவர்கள் ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயமாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுக்கத்தாலும், தீய சொற்களை பேசாதிருப்பதும் ஒழுக்கத்தின் பாற்படும் பெரியாரை மதித்து நடத்தல், தன் கொள்கையில் உறுதியாக இருத்தல் பிறருக்கு உதவுதல் அறத்தின் வழியில் பொருள் சேர்த்து மகிழ்ந்து வாழுதல், மடமையைப் போக்குதல், பிறர் குறிப்பறிந்து நடத்தல் ஆகிய குணங்கள் சேர்ந்தே ஒரு மனிதனின் ஒழுக்கத்தை நிர்ணயிக்கின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதே தலை சிறந்த ஒழுக்கம் எனலாம்.

"நன்றும் தீதும் பிறர்தரவாரா" நன்மையும் தீமையும் தமது செயற்பாட்டில் தான் தங்கியிருக்கின்றன. எனவே மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தை உயிர்மூச்சாக பேணிக்காக்க வேண்டும். ஒழுக்கம் பேணி உயர்வடைதலே நமது குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

ந. கௌதமி
தரம் 11
யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

பண்டிதமணி இலங்கையின் வடக்கே யாழ் மாவட்டத்தில் மட்டுவில் என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் தருமர் என அழைக்கப்பட்ட சின்னத்தம்பிக்கும் வள்ளியம்மைக்கும் பிறந்தார். இவர் மட்டுவில் சந்திர மௌலீச பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றார். இவர் மூன்றாவது வயதில் தாயாரை இழந்தார் 13 வயதில் தந்தையாருடன் தனங்களப்புக்கு இடம் பெயர்ந்து சென்று தமிழறிஞர்களான பொன்னையா உபாத்தியாயர் பொன்னம்பலப் புலவர் பொன்னப்பாப்பிள்ளை ஆகியோரிடத்தில் தமிழ் கற்றார். கணபதிப்பிள்ளை 1917இல் நாவலர் காவியப்பாடசாலையில் சேர்ந்தார். இவர் அங்கு அ. குமாரசுவாமிப் புலவர். வித்தகர் ச. கந்தையாபிள்ளை வித்துவான் ச. சுப்பையாபிள்ளை, சுவாமி விபுலானந்தர் போன்றவர்களிடமும் கல்வி கற்றார்.

இவர் 1926ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பரீட்சையிலும் சித்தி பெற்று பண்டிதர் பட்டம் பெற்றார். பண்டிதமணி லோச் செல்லப்பாவின் தூண்டுதலால் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தில் காவிய வகுப்புக்களை ஆரம்பித்தார். இவர் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார். பண்டிதமணி 1929இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரியக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணி புரிந்தார்.

இவர் 1951 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் இடம் பெற்ற தமிழ் விழாவில் பண்டிதமணி என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் ஆறுமுகநாவலர் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். பண்டிதமணி நாவலரோடு சம்மந்தப்பட்ட கட்டுரைகள் பலவற்றை எழுதினார். அத்துடன் சிதம்பரம் கும்பாபிஷேக மலரில் சுவாமி ஞானப்பிரகாசர் குறித்தும் கலைமகள் மலரில் பஞ்ச கன்னிகைகள் குறித்தும் இவர் எழுதிய ஆக்கங்கள் அவருக்கு மிகுந்த புகழைத்தேடிக் கொடுத்தன.

பண்டித மணியின் தமிழ்த்தொண்டிற்காக இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1978 ஆகஸ்ட் 14ம் நாள் அன்றைய துணைவேந்தர் சு.வித்தியானந்தன் இலக்கியக் கலாநிதிப்பட்டம் அளித்து கௌரவித்தார். இவர் கம்பராமயணக்காட்சிகள், ஆறுமுகநாவலர்,

இலக்கிய வழி, கந்தபுராண கலாசாரம், பாரத நவமணிகள், கண்ணகி தோத்திரம், சைவ நற்சிந்தனைகள் போன்று பல நூல்களை இயற்றினார்.

இவரின் நினைவாக மட்டுவில் கிராமத்தில் பண்டிதமணி மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. 1999இல் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தில் பண்டிதமணி அவர்களுக்கு உருவச்சிலை ஒன்றைப் பாடசாலை சமூகம் நிறுவியுள்ளது. இவரைக் கௌரவித்து 1999ஆம் ஆண்டில் இலங்கை அரசு பண்டித மணிக்கு நினைவு முத்திரை வெளியிட்டது.

ஜெ. ஜெயீனா
தரம் - 7
யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்.

---





# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

மனித இனத்தின் பண்புக்கு, வெற்றிக்கு, எழுச்சிக்கு உரிய மார்க்கம் ஒன்று படுதலே. ஒன்று பட்ட உழைப்பின் மூலமே எச்செயலையும் வெற்றி கரமாக நிறைவேற்ற முடியும். வெற்றியின் பின்னணியினை விட முயற்சியோடு ஒற்றுமையும் உள்ளடங்கி உள்ளது.

இன்றைய சூழ் நிலையில் தனித்து வாழமுடியாது. சமூகத்தோடு ஒன்று பட்டு வாழ முடியும். அவ்வாறு ஒன்றுபட்டே வாழ்ந்தால், சமூக வாழ்வே மனிதனுக்கு உயர்ச்சி தரும். ஒரு கை கட்டி ஓசை வராது. அதே நேரம் இருகையையும் சேர்த்து தட்டினால் ஓசை தரும். அதே போல மனிதர்கள் சமூகத்தில் உள்ளவர்களோடு இணைந்தாற்றும் செயல் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒற்றுமை அவசியம். ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே எதையும் சாதித்துக் கொள்ளலாம். என்பதை மனதில் கொண்டு நாம் செயல்பட வேண்டும். இதனைத்தான் "கூடிவாழ்ந்தால் கோடி நன்மை" என்பார். எறும்புகள் பல ஒன்று சேர்ந்து உணவுப் பொருட்களை நகர்த்திச் செல்வதைப் பார்க்கிறோம் இது எல்லாம் கூடி வாழ்ந்தால் ஏற்படும் நன்மையை நமக்கு உணர்த்துகிறது.

கூட்டுத்தொழில், கூட்டுக்குடும்பம் என்பன எல்லாம் கூட்டுறவின் அவசியத்தையே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன கூடித் தொழில் செய்யும் போது இலகுவில் வேலை நிறைவேறுகின்றது. எடுக்கும் காலம் குறைகின்றது. அதே போல மனிதர்கள் இணைந்து வாழ்ந்தால் மிக இலகுவில் வேலைகளை செய்ய முடியும்.


உலகம் போற்றும் பெரியோர்கள் யாவரும் ஒற்றுமையை வலியுறுத்தி உள்ளனர் அந்த வகையில் இந்து முஸ்லீம் ஒற்றுமையைக்காக்கப் போராடினார்கள். காந்தி அடிகள் அதற்காக தம் உயிரை அர்ப்பணித்தார். எல்லாத்தலைவர்களும் ஒற்றுமை உயர்ந்ததென்றும் ஒன்றுபட்டே வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தினர் அவர்களது வாழ்வும் வாக்கும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்த்தியது.


விஞ்ஞானத்தின் வளர்ச்சி பல துறைகளிலும் மாற்றங்களைக் கொண்டுள்ளது. பெரிய கட்டடங்கள் ஆலைகள் என்பன வியக்கத்தக்க முறையில் உருவாகி உள்ளன. இவை எதுவும் தனி மனித முயற்சியினால் உருவானவை அல்ல. மனிதர்களின் ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் உருவானதே ஆகும். இதன் மூலமே "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பதை உணர்த்துகின்றது.

இவ்வாறு நோக்கும் போது நாடும் வீடும் சிறக்கும். எமது கெட்ட குணத்தை மண்ணுக்குள் புதைத்து சமத்துவம் நிலைத்திட ஒன்றுபட்டு உழைப்போம். ஒற்றுமையே வெற்றிக்கு வழி வகுக்கும். ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் எமது இலட்சியங்கள் நிறைவேறும். வெற்றிக்கு வழிவகுக்கும். இவ்வாறு ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் உயர்வு காணபோம்.

வினோஜா. வ
யா/ இந்து மகளிர் கல்லூரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.






# நேரம் நல்ல நேரம்

நேரம் அல்லது காலம் இறைவனால் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட விலை மதிப்பற்ற பொக்கிசமாகும். ஒவ்வொருவருக்கும் சில நியதிகளுக்குட்பட்டு பங்கீட்டடிப்படையில்தான் வழங்கப்பட்டுள்ளது. இப்பொக்கிசத்தைப் பக்குவமாகப் பேணி வருவபர்கள், வாழ்வில் உயர்நிலை அடைகின்றார்கள். இன்னொருவகையில் கூறுவதாயின் இன்று உயர் நிலை வகிப்பவர்கள், அனைவரும் தமக்கு அளிக்கப்பட்ட நேரத்தை நன்கு திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள். மற்றையோர் அனைவரும் அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு அதாவது உழைப்பேதும் இன்றி இருந்து வீணே நேரத்தை கழித்துவிட்டு அதிஷ்டம் வரும் எனக் காத்திருந்து ஏமாந்தவர்களே. வேளைக்குப் பறக்கும் பறவை நிறையப் புழுக்கள் பிடிக்கின்றன. புழுக்கள் மட்டுமல்ல நிலம், நீர், காற்று போன்ற வளங்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. எவர் வேளைக்கு விழித்துக் கொள்கிறார்களோ அவர் இவற்றின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றார். அல்லது அதிகம் பெற்றுக் கொள்கின்றார். அவ்வாறுதான் எவரும் நேற்று எவ்வாறு வாழ்ந்திருந்தோம் என்பதை அறிந்து இன்று எப்படி வாழ்கின்றோம் என உணர்ந்து அறிந்து தெளிந்து நாளை எவ்வாறு வாழ வேண்டும் என திட்டமிட்டு வாழ்ந்தால் மட்டுமே இலக்கை அடைய அல்லது வெல்ல முடியும். நேற்றைய நேரம் இழந்து விட்ட ஒன்று அல்லது உரிய முறையில் செலவுசெய்யப்பட்டுவிட்டது. இனிப்பெறமுடியாதது. இன்று கையிலிருப்பது 24 மணிநேரம். இதில் உறங்கல், உண்ணல், களித்தல், போக மீதியாயுள்ள மணித்துளிகளை எவ்வாறு செலவு செய்யப்போகின்றோம் என்பதுதான் கேள்வி. ஒழுங்காகத் திட்டமிட்டு களைக்காது உழைத்து வந்தால் வெல்ல முடியும் அல்லது வீணே இன்றைய பொழுதும் கழிந்துவிடும். நாளை என்பது நமக்கில்லை. கையில் கிடைத்த நேற்றையநேரத்தையும் இன்றைய நாளையும் வீணுக்குத் தொலைத்துவிட்டு நாளை வரவுள்ள நேரத்தைப் பற்றி எண்ணவே முடியாது. மாறாக நேரத்தை திட்டமிடும் ஒருவரால் மட்டுமே நாளைக்கும் மறுநாளும் இன்னும் வரும்நாட்களிலும் எவ்வாறு

செயல்படவுள்ளோம் என்பதை வரையறை செய்ய முடியும்.

பள்ளிப் பருவமும் நேரம் நமக்கு வழங்கிய நன்கொடையே. இப்பருவத்தில் இந்நேரத்தை வீண்விரயம் செய்துவிட்டு பின் நாட்களில் வருந்துவதால் பயனில்லை. இன்று கையிலுள்ள பருவத்தையும் நேரத்தையும் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பழகிக்கொள்வது மிக அவசியம். காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு. இவற்றை ஒழுங்காகச் செய்த பின்தான். மாலை முழுவதும் விளையாட்டு என்றார் பாரதியார் அதிகாலையிலே பறவைகள் இரைதேடிப் பறக்கும் நேரத்திலே எழுந்து காலைக்கடன்களை முடித்து கடவுளை வணங்கி சூரிய ஒளி எம்மீது படக்கூடிய இடத்தில் நிமிர்ந்து இருந்து தனது பாடங்களைப் படிக்கவேண்டும். மிகவும் அமைதியான நேரத்தில். ரம்மியமான சூழ்நிலையில் இன்னும் சொல்வதாயின் ULTRA VIOLET INFRA RED என சூரிய வெளிச்சத்திலுள்ள கண்ணுக்குப் புலப்படாத ஒளிக்கதிர்களின் ஊடுருவலில் உடலும் மனமும் தூண்டப்பட்டிருக்கும் வேளைகளில் கற்றல் மிக இலகுவாக இருக்கும். மனதை ஒருமைப்படுத்திப் படிக்கக்கூடியவாறு இருக்கும். படித்த அனைத்தையும் மனது கிரகித்துக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். இதையே தனித்திரு. விழித்திரு. படித்திரு என சான்றோர் கூறுவர். அவ்வாறில்லாமல் 8 மணிக்கு நித்திரைவிட்டெழுந்து அவசர அவசரமாக குளித்தது பாதி. சாப்பிட்டது பாதியென புத்தகங்களை அள்ளி எடுத்துக்கொண்டு பரபரப்புடன் பாடசாலை சென்று வருவதால் பயனில்லை. படிப்பதற்கு முன்னர் மனம் பதட்டம் இல்லாமல் (Tenson) இருக்கவேண்டும். மனதும் கண்ணும் காதும் கட்டுப்பாட்டுக்குள் இருந்து ஒரு நிலைப்பட வேண்டும். ஆசிரியர் சொல்லித்தரும் பாடங்களையும் விளக்கங்களையும் மிக அவதானமாக உள்வாங்க வேண்டும். குறிப்புகளும் எடுத்துக்கொள்வது நல்லது. மாலை விளையாடி முடிந்ததும். கைகால்களை அலம்பி கடவுளை வணங்கி மனதை ஒருநிலைப்படுத்தி பாடசாலையில் அன்று நடந்த பாடங்களை மீள எடுத்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாடசாலையில் எடுத்த குறிப்புகளும் உதவும். அன்றைய வீட்டு வேலைகளையும் அன்றே செய்து விட வேண்டும். நாளை செய்யலாம். என விட்டு வைத்தால் குப்பைகூடையுள் குப்பைகள் சேர்வது போல வேலைப்பாக்கியும் சேர்ந்து விடும். திரும்பச் செய்ய ஆரம்பிக்கும் வேளை சோர்வும் சினமும் வரவும் கூடும். அமைதியாக நித்திரை செய்து அதிகாலையில் எழுந்து மீளவும் உருப்போட்டுப் பார்க்கவேண்டும். இப்படி ஒவ்வொரு மாணவனும் ஒழுங்கமைத்துக் கொள்வானாகில் பரீட்சைக்கெனத் தனியே அவன் தயார்படத் தேவையில்லை. பதட்டமும் தேவையில்லை அன்றாட வேலைகளை அன்றன்றே இன்னின்ன வேலைகளை இன்னின்ன நேரத்தில் செய்வது எனத் திட்டமிடுவதே நேரமுகாமைத்துவம் ஆகும். எப்பொருளாயினும் உள்ளதை வைத்துக் கொண்டு உயர் வாழ்வு வாழத் திட்டமிடுவதே முகாமைத்துவம் குறிப்பிட்ட அளவு நேரம் தான் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை வைத்துக்கொண்டு உள்ள வளங்களுக்கு ஏற்றவாறு நம்மைக் கட்டி எழுப்ப ஒவ்வொருவருக்கும் இயலும். திட்டமிட்டுச் செயலாற்றினால் எல்லாம்

யாராலும் வெல்லமுடியும். எவ்வாறு ஒருவருக்கு தனது தேவைக்கும் மேலாக ஒரு பருக்கை சோற்றைச்சாப்பிட முடியாதோ அவ்வாறே தனக்கு வழங்கப்பட்ட நேரத்தை விட ஒரு வினாடி கூட மேலாகக்கிடைக்காது. வெறும் பொருட்கள் பணம், நிலம் என்பன நாளைக்குத் தேவைப்படலாம் எனக்கருதிச் சேமித்து வைக்கமுடியும் ஆனால் இன்றைய நேரத்தில் ஒரு சிறு பகுதியை கூட நாளை செலவு செய்ய என சேமிக்க முடியாது அதேபோல எதையெதையெல்லாம் இழந்தாலும் மீளப்பெறலாம் மானம், உயிர், நேரம் இந்த மூன்றையும் ஒரு தடவை இழந்தால் இழுந்ததுதான். மீளப்பெற முடியாது. ஆக இன்றைய நேரத்தில், தேவை அவசியம் கருதி மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். பணம், பொருள், நிலம் இழந்தால் அவை மட்டுமே இழக்கப்படுகின்றன. ஆனால் நேரத்தை இழந்தால் எல்லாமே இழக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் அமைய படிப்பிக்க வேண்டும். என மிக நுட்பமாகவே "நேரசூசி" (Timetable) பாடசாலைகளில் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அவ் வாறு ஒவ் வொருவரும் தமக்கான நேரத் தை திட்டமிட்டு வாழப்பழகினால் மற்றவை அனைத்தும் தானாகவே கை கூடும்.

நேரந்தவறாமை ஒரு உயரிய பண்பாகும். எத்தனை மணிக்கு வரச்சொன்ன நீ இப்போ எத்தனை மணிக்கு நீ வந்து நிற்கிறாய் என ஒரு கவிஞன் அங்கலாய்க்கின்றான். பொதுவாக நேரம் தவறுவதற்கு மூன்று காரணங்களைக் கொள்ளலாம். ஊக்கமின்மை அல்லது செயல்பாட்டில் ஆர்வம் இல்லாமை, தனது நேரத்தை கவனத்தில் எடுக்காமை அல்லது நேரத் தை மதியாமை. மூன் றாவதாக செய் யும் செயல் பாடு வெற்றியளிக்குமோ என்ற மனோபயம். மனோதிடத்துடனும் தன் நம்பிக்கையுடனும் செய்யும் எந்த ஒரு காரியமும் தோற்பதே இல்லை. மனதில் உறுதியை வளர்த்துக் கொண்டு செயல்பட வேண்டும். செயல், செயல் ஒன்று தான் வெற்றிக்கனியைத் தரும்.

விமானப்பயணியொருவர் பிரயாண நேரத்திற்கு 3 மணிநேரம் முன்னதாகவே வரும்படி அறிவுறுத்தப்படுகின்றார். புகைவண்டியின் பிரயான நேரத்துக்கு 5-10 நிமிடங்களாயினும் முன்னதாக புகையிரத நிலையம் செல்லவேண்டும். தவறின் பிரயாணம் தடைப்பட்டு விடும். ஒரு நிகழ்வில் கலந்து கொள்ளும் ஒருவர் குறித்த நேர்த்திற்குச் சமூகம் அளிக்க வேண்டும் எல்லா விடயங்களுக்கும் மேலை நாட்டவர்களை முன் உதாரணம் காட்டும் நம்மவர்கள் அவர்களது (Punctuality) நேரம் தவறாமைக்கு ஏன் முக்கியத்துவம் தருகிறார்களில்லை அந்தந்த நாடுகள் வளம் செழிப்பதற்கு நேரந்தவறாமையே காரணம். ஜப்பானியன் வளர்ந்ததுக்கு காரணம் கடும் உழைப்பே. அவர்களிடமிருந்து நேரந்தவறாமையையும் இவர்களிடமிருந்து உழைப்பையும் பெற்று நமது வாழ்வை நாம் மேம்படுத்த முயல வேண்டும். நிச்சயம் நாமும் வளர்வோம். நாடும் வளரும்.

# வாழ்வோம் நல(திட)மாய்

- கனகமணி

நாமே நமக்காய் உழைத்திட்டால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே என்றும் தேடிவரும்
சுற்றம் சேர்த்து வாழ்ந்திடுவோம்

நெஞ்சில் கருணை மிகுந்தோர்க்கும்
நேயம் கொண்ட நெறியோர்க்கும்
விஞ்சும் அமைதி காப்போர்க்கும்
வேளை வருமே வாழ்வினிலே....

ஊன்றிக் கற்றுக் கல்வியிலே
ஊக்கம் பெருக்கி உழைப்போமேல் - நற்
சான்று சிறந்த மாந்தரென
வாழ்த்தும் மனிதம் இவ்வுலகில்

காலம் கடந்தால் மீளாது
கடமை தவறின் வாழ்வேது
ஞாலமீது மேன்மையுற நாளும்
வருத்தி உழைத்திடவே எழுவோமே...





# தகவல்

- இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
- இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்
- இலங்கையின் தேசிய பறவை - காட்டுக்கோழி
- இலங்கைக்கு மிக அருகிலுள்ள நாடு - இந்தியா
- இலங்கையின் நிர்வாகத் தலைநகரம் - ஸ்ரீ ஜெயவர்த்தன புரக்கோட்டை
- மிக நீளமான நதி - மகாவலி கங்கை
- இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர்

  - முது தமிழ்ப்புலவர் மு. நல்ல தம்பி
- இலங்கையின் மிக உயரமான மலை - பீதுருதால காலமலை

அனுஜன்
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்



# விடுகதைகள்

01. ஓட்டு வீட்டுத் தாத்தா மெதுவாகத் நடப்பார். அவர் யார்?
நத்தை

02. வயல் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
மண்புழு

03. கூவி அழைப்பான் கூடி உண்ணுவான் அவன் யார்?
காகம்

04. அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன?
சிலந்தி வலை

05. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான் அவன் யார்?
மெழுகுவர்த்தி

06. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?
சிரிப்பு

07. வெளிச்சத்தில் தொடர்வான் இருட்டில் மறைந்திருப்பான் அவன் யார்?
நிழல்

08. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்?
பென்சில்

09. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காக தீர்ப்பு வழுங்குகிறார். அவர் யார்?
தராசு

10. அழைக்கும் போது உரக்கக் குரல் கொடுப்பான் பேசும் போது காதுக்குள் கிசுகிசுப்பான் அவன் ரர்?
தொலைபேசி

11. தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவை எவை?
இமைகள்

12. வாழ்நாள் முழுவதும் வாயை மூடாதவன் அவன் யார்?
தபால் பெட்டி

13. இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுவான் அவன் யார்?
கடிகாரம்

14. உனக்குச் சொந்தமானது ஆனால் உன்னை விட அதிகமாக மற்றவர்கள் பயன்படுத்துவது அது என்ன?
பெயர்

15. ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டு போகிறார் அவர் யார்?
நுளம்பு



# உண்மை தந்த பரிசு

அன்று வழமை போல தமிழ் ஆசிரியர் அன்பரசன் வகுப்புக்கு வந்தார். வணக்கம் கூறிய மாணவர்களை அமருமாறு கூறிவிட்டு தனது பாடத்தை நடத்தினார். பாடம் முடிவடைய 10 நிமிடம் இருந்த வேளையில் ஆசிரியர் மாணவர்களை நோக்கி பிள்ளைகளே! இன்று அரிச்சந்திரன் கதையை படித்தோமல்லவா? நான் உங்களுக்கு ஒரு போட்டி நடாத்த எண்ணியுள்ளேன்." என்றார்.

மாணவர்களிடையே சலசலப்பு அவர்களது ஆர்வத்தை மேலும் தூண்ட விரும்பாமல் "நான் உண்மை பேசும் மாணவன் ஒருவனுக்கு பரிசு வழங்க எண்ணியுள்ளேன். போட்டியை சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றின் மூலமாகவே நடாத்த விரும்புகின்றேன். வெற்றி பெறுபவருக்கு புத்தகமொன்று பரிசாக வழங்கப்படும்" என்றதும் மணி அடித்தது.

ஆசிரியர் போட்டி பற்றி குறிப்பிட்ட சில நாட்கள் வரை வகுப்பில் அதே பேச்சாக இருந்தது. ஆசிரியர் போட்டியை இன்னும் நடாத்தவில்லை நாட்கள் நகர்ந்தன மாணவர்கள் போட்டியை மறந்துவிட்டனர். இவ்வாறு ஒரு மாதம் கழிந்தது.

ஒரு நாள் மாணவர்களிடையே ஒரு சண்டை ஏற்பட்டது முரண்பாடு முற்றி மாணவர்கள் ஒருவரோடொருவர் கைகலப்பில் சண்டையில் ஈடுபட்டனர். அவ்வேளையில் ஒரு மாணவன் கதிரையில் இருந்து பாய்ந்த போது கதிரை உடைந்துவிட்டான்.

திடீரென்று தமிழாசிரியர் வகுப்புக்குள் பிரவேசித்தார் மாணவர்கள் தத்தம் இடங்களில் சென்று அமர்ந்தனர். மோகனுக்கு மட்டும் இடமில்லை. ஆசிரியர் கேட்க அவன் தனதீ கதிரை உடைந்து விட்டதை கூறினான். ஆசிரியர் கதிரை எவ்வாறு உடைந்தது என்று கேட்டார். அதற்கு மோகன் "சண்டைபிடிக்கும் போது யாரோ எனது கதிரையை உடைத்து விட்டார்கள்" என்றான்.

ஆசிரியருக்கு கோபம் வந்தது மேசையில் இருந்த பிரம்பை எடுத்தார். யார் உடைத்தது? என்று கேட்டார் யாரும் பதில் கூறவில்லை. மீண்டும் சற்று கடுமையான குரலில் கேட்டார்

அப்போதும் பதில் இல்லை. "உண்மையை கூறுங்கள் யார் கதிரையை உடைத்தது.?" என்று கேட்டார். அப்போது சுதன் என்ற மாணவன் எழும்பினான் "ஐயா! நான் தான் கதிரையை உடைத்தேன். கதிரையில் இருந்து மோகனுடைய கதிரைக்குப் பாய்ந்த போது கதிரை உடைந்து விட்டது தயவு செய்து மன்னித்து விடுங்கள். இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்" என்றான்.

ஆசிரியர் பிரம்பை மேசையில் வைத்தார். அவரது முகத்தில் புன்னகை பரந்தது. மாணவர்களை நோக்கி "பிள்ளைகளே அன்றொருநாள் நான் கூறியது நினைவிருக்கிறதா? உண்மை பேசும் போட்டியில் வெற்றி பெறுபவருக்கு புத்தகம் ஒன்றை பரிசாக வழங்குவதாய் கூறியிருக்கிறேன். இன்று அந்த போட்டியில் வெற்றி வெற்றவன் சுதன்" என்று கூறி அவனுக்கு உண்மை தந்த உயர்வு என்ற நூலைப் பரிசாக வழங்கினார்.

"பின்பு மாணவர்களை நோக்கி "நீங்கள் சுதனைப்போல எவ்வேளையிலும் உண்மை பேசப்பழக வேண்டும் கடினமானதுதான் ஆனால் நிச்சயம் ஒரு நாள் உங்களுக்கு உயர்வைத்தரும்" என்று கூற அனைத்து மாணவர்களும் கைதட்டி வாழ்த்தினார்கள்.

நி.வித்தியா யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ■

# திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசு நாயனார் சிவனடியார்களில் ஒருவர் ஆவார். இவர் கி.பி ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்தவர் இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். இவர் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருவாரூரில் பிறந்தார். இவர் சைவக் குடும்பவேளான் குலத்தை சேர்ந்தவர். இவரது இளமை பருவத்தில் சைவத்தை விட்டு சமண சமயத்திற்கு மாறினார். இவரது தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். இவர் சமய நூல்களை கற்று அச் சமயத்தின் தலைவர்களுள் ஒருவராகவும் விளங்கினார். திருநாவுக்கரசர் சமண சமயத்தில் இருந்த போது இவர் தர்மசேனா என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.



திருநாவுக்கரசர்

இவரது தமக்கையார் பெயர் திலகவதியார். இவர் சிறந்த சிவ பக்தராகவும் இருந்தார். தம்பியார் சமணத்தில் சேர்ந்ததை எண்ணி மிகவும் மனம் வருந்தி இறைவனிடம் முறையிட்டார் அதனால் மருணீக்கியாருக்கு கடுமையான சூலை நோய் ஏற்பட்டது. சமண மடத்தில் செய்யப்பட்ட சிகிச்சைகள் எதுவும் இவரது நோயைக் குணப்படுத்தவில்லை. தமக்கையாரின் ஆலோசனைப்படி சிவனிடம் “கூற்றாயினவாறு” என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார் நோய் நீங்கியது. திருநாவுக்கரசர் பின்பு மீண்டும் சைவ சமயத்திற்கு மாறினார். இதன் பின்னர் நாவுக்கரசர் என்று அழைக்கப்பட்டார்.

இவர் தொண்டு வழியில் இறைவனை வழிபட்டார். இவர் பல்வேறு ஊர்களுக்குச் சென்று பல தேவாரப் பதிகங்களைப் பாடினார். இவர் கோயில் சுற்றாடலை உழவாரங் கொண்டு தூய்மைப்படுத்தி வந்தார் இதனால் இவர் உழவாரத் தொண்டர் எனவும் அழைக்கப்பட்டார்.

திருஞான சம்பந்தருடன் சேர்ந்து யாத்திரைகளை செய்தார் இவர் அப்பர் என்றும் அழைக்கப்பட்டார் இவர்பாடிய தேவாரப் பாடல்கள் 4,5,6,

ஆகிய திருமுறைகளில் அடங்கும் 81 வயதில் திருப்புகலூரில் சித்திரைச் சதயத்தில் சிவலோக சாலோக முத்தியடைந்தார் இவர் பாடிய தலங்களிலே மேலக்கடம்பூர் அமிர்த்தகடேஸ்வரர் கோயில் ஆகும். இங்கு என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் வரிகளைப்பாடி அருளினார். காரைக்கோயில் என்னும் தலத்திலும் பாடினார். பின்பு ஒன்பது வணக்க கோயில்களில் கரக கோயில் என போற்றப்பட்டு ஒரே தலம் மேலக்கப்பூர் ஆகும்.

இவர் செய்த அற்புதங்கள், சமணர்களாலே 7 நாட்கள் சுண்ணாம்பு அறையில் அடைத்து வைத்திருந்தும் வேகாது உயிர் பிழைத்தார் சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற் சோற்றை உண்டும் சாகாது உயிர் பிழைத்தார். சமணர்கள் கல்லிற் சேர்த்து கட்டிக் கடலில் விடவும் சொற்றுணை வேதியன் என்ற பதிகம் பாட அக்கல் தோணியாகிக் கரையேற்றியது சிவபெருமானிடத்தே படிக்காசு பெற்றது வேதார்னியத்தில் கதவு திறக்கப் பாடியது இப்படி பல அற்புதங்களையும் செய்தார்.

க.கஸ்தூரி
தரம் - 7
யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்.



# தமிழ்

சங்கத் தொட்டிலிலே வளர்ந்த செந்தமிழ்
சிப்பிக்குள் முத்துச் சிலிர்ப்பது போல
என் கவிக்குள் நீ சிலிர்க்க
சதாசிவனை வேண்டுகிறேன்.

கலைகளின் தாயே முத்தமிழே
கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழே
கற்பாறையும் கரையாதோ உனைக்கேட்டு
மூவேந்தர் வளர்த்த முத்தமிழும் நீயே
முச்சங்கங்கள் உனை வளர்த்தனவோ
மன்னர் உன்னை அரவணைக்க
என் தவம் செய்தாய் நீயோ?



இயலாகி இசையாகி நாடகமாகி
உரையோடும் பாட்டோடும் இலக்கணமாய்
உயிரோடு கலந்து முதுமொழியாய்
இவ்வுலகில் வாழ்கின்றாய்

உலக மொழிகளிலே
ஆதி அந்தம் உனக்கில்லை
பைந்தமிழே தமிழரின் தாய் மொழியே
வீரமுரசம் செய்யும் வெற்றித் தமிழே

செம்மொழியான தமிழ் மொழியே
தித்திக்கும் தெவிட்டாத் தீந்தமிழே
பண்ணாகப் பாவலர் உனை வளர்க்கையிலே
கண்ணாக இருந்து கலைக்கோலம் புரிந்ததேனோ?

தமிழ் தந்த வள்ளுவனே
தரணியில் முதற் புலவனாவான்
தமிழ்கவி கம்பனுக்கு
தக்கதோர் இணையுமுடைதோ

தமிழர் தம் பண்பாட்டிற்கு ஈடாய்
தரணியில் பண்பும் உண்டோ?
தமிழர் பண்பது அழியுமானால்
தரணியில் அழிவது தமிழன்றோ?

சினிமாவே உன்னை அரவணைக்கும்
சிந்து தமிழே இந்துமா கடலின்
இணைமொழியும் நீயே
இணையத்தில் இடம் பிடித்த
ஒரு மொழியும் நீயே

கன்னித் தமிழே நீ
கலைக்கோலம் புரிவதேனோ?
இருபத்தோராம் நூற்றாண்டதனிலே
இனிய தமிழர் உனக்கு விழா எடுக்கின்றனர்

செந்தமிழே உனைப்பாட
எத்துணைத் தகுதி எனக்குண்டோ நானறியேன்
இயன்றவரை பாடுகிறேன்
பைந்தமிழே பிழை பொறுப்பாய்

செல்வி இந்திரவதனா செல்வராசா
2011 O/L
யா. இந்து மகளிர் கல்லூரி



# உண்மை பேசுவோம்

- ☞ உண்மை பேசுதல் உயர்ந்த பண்பாகும்
- ☞ உண்மை உயர்வு தரும் என்பது முதுமொழி
- ☞ நாம் என்றும் உண்மை பேசுதல் வேண்டும்
- ☞ பொய் பேசுதல் பெரும் பாவமாகும்
- ☞ "பொய் சொல்லக் கூடாது பாப்பா" என்று பாரதியார் பாடியுள்ளார்
- ☞ உண்மை பேசுதலால் உயர்வடையலாம் என்பதற்கு அரிச்சந்திரன் கதை நல்ல எடுத்துக்காட்டாகும்.
- ☞ உண்மை என்பதற்கு வாய்மை, சந்தியம், மெய் எனப் பல பொருள் கூறுவர்
- ☞ உண்மை சொல்லிக் கெட்டார் எவருமில்லை
- ☞ மனத்தில் பொய் இல்லாமல் நேர்மையோடு வாழும் ஒருவன் உலகத்துச் சான்றோர்களின் மனங்களில் எல்லாம உயர்வாக மதித்துப் போற்றப்படுவான் - இது வான் புகழ் கொண்ட வள்ளுவர் வாக்காகும்
- ☞ நாமும் உண்மை பேசி உயர்வடைவோம்.

நா.சங்கீதா
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி





# கணினி

01. நவீன உலகின் இணையற்ற கண்டுபிடிப்பு கணனி ஆகும்.
02. கணனியை கணிப்பான் கணிப்பொறி என்று பல பெயர்களால் அழைப்பர்.
03. இது ஒரு மின்னியல் கருவியாகும்.
04. கணனி பல்வேறு தேவைகளுக்கு பயன்படுகின்றது.
05. இடத்துக்கு இடம் கொண்டு செல்லக்கூடியதாகவுள்ளது.
06. கணனி ஒரு ஆசிரியராக பாடம் சொல்லித்தருகின்றது.
07. கணனி மூலம் உடனுக்குடன் தகவலைப் பெற முடியும்.
08. கணனி கற்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்.
09. பரீட்சைப் பெறுபேறுகள் துரிதமாக வெளிவருவதற்கு கணனி துணை புரிகின்றது.
10. உலகின் முதலாவது தானியங்கி கணனி ஆகும்.
11. கணனி பலருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குகின்றது.
12. கணனியின் தந்தையாக சார்லஸ் பபேஜ் போற்றப்படுகின்றார்.
13. கணனி எமது கட்டளைகளுக்கு ஏற்ப செயற்படும்.
14. கணனி நேரத்தை வீண்விரயம் செய்யாது.
15. ஓவியம் வரைதல், இசைமொட்டு அமைத்தல் போன்ற மனிதனுக்குரிய செயல்களுக்கு கணனி உதவுகின்றது.

செ. தரணிகா
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

# நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் மொழிகள்

இன்றைய காலகட்டத்தில் மொழி எனும் சொல் எல்லாராலும் பின்பற்றி வருகின்ற சொல் ஆகும். இது இடத்துக்கிடம் அல்லது நாடுகளுக்கிடையில் வேறுபட்டதாக காணப்படுகின்றது. உதாரணம் சிங்கள மக்கள், சிங்கள மொழியையும் தமிழ் மக்கள் தமிழ் மொழியையும் ஆங்கிலேயர் ஆங்கில மொழியையும் கொண்ட மூன்று பிரதான மொழிகளாக தமிழ், சிங்களம், ஆங்கிலம், என எம்மவர்களிடையே உலாவிவருகின்றது.

பொதுவாக பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மொழிப் போட்டிகள் நிலவி வருவதுண்டு ஆங்கிலம் தெரிந்தால் நான் பெரியவன் என நினைப்பது வழக்கம் உண்மையும் அது தான் இன்று சர்வதேச மொழியாக ஆங்கில மொழி பிரகடனம் செய்யப்பட்டிருப்பதுதான் மிக முக்கிய காரணியாகும். இன்றைய உலகில் தொடர்பாடல் என்பது இனங்களுக்கிடையே நல்லுறவு, கல்வியறிவு ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதற்கும் சர்வதேசத்துடன் உறவு கொண்டு ஐக்கியத்தை வளர்ப்பதற்கும் மொழி அறிவு இன்றியமையாததாக இருக்கின்றது.

இரு நபர்களுக்கிடையிலோ அல்லது பல நபர்களுக்கிடையிலோ நடைபெறும் உரையாடல் தொடர்பாடல் எனப்படும். இரண்டாம் உலகப் போரின் பின்னர் அரசுகளுக்கிடையில் இருந்த உறவுகள் வேகமாக வளர்ந்தன. அவை புரட்சிகரமான வளரச்சி என சில அறிவியலாளர்கள் கூறுகின்றனர் பல்வேறு துறைகளினூடாக இவ்வுறவுகள் வளர்ச்சியடைந்தன இதற்கு காரணம் பன் மொழித்தொடர்பாடல் ஆகும். இவ்வுறவுகளின் அடிப்படையில் உலகம் கிராமமாகச்சிறுத்தது . விசேடமாக நவீன தொழில் நுட்ப வளர்ச்சியுடன் தொடர்பாடல் துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதுடன் உலகம் ஒரு பூகோளக் கிராமமாக மாறியுள்ளது. இதனால் இன்றைய உலகத்தின் எந்தவொரு நாட்டுக்கும் ஏனைய நாடுகளிலிருந்து விடுபட்டு தனித்தியங்குதல் கடினமான விடயமாகும்.

ஆகவே இன்று சர்வதேச உறவு முறை பெருமளவு செல்வாக்கு செலுத்தும் காரணியாக மாறியுள்ளது. சர்வதேச தொடர்பு எனப்படுவது யாதென சான்றோர் கூறும் கருத்துக்களை நோக்குவோம் "சர்வதேச உறவுகள் எனப்படுவது நாடுகளிடையே ஏற்படும் சகலவித உறவுகளாகும்" என்ற கருத்தும். "சர்வதேச உறவு என்பது அரசுக்கான எல்லைக்கப்பால் நடைபெறும் அனைத்து விதமான தொடர்புகளாகும்" என்ற கருத்தை முன்வைத்தவர் "ட்றின்வா மத்தீசன்" ஆவார்.

இதனடிப்படையில் பார்க்கும் போது அரசியல் எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கிடையிலான பொருளாதார கலாசார அரசியல் சமூக மற்றும் இராஜதந்திர உறவுகள் யாவும் சர்வதேச உறவுகள் என்பது தெளிவாகின்றது. பல நாடுகள் பன் மொழிகள் மூலம் பல உதவிகளையும், பலவிதமான பொருட்களையும் நாடுகளுக்கிடையே பரிமாறிக் கொள்ளும் நடவடிக்கையும் நடை பெறுகின்ற போது சர்வதேச சமூகச் செயற்பாட்டைக் காணலாம்.



டாக்டர் :- நீங்கள் சங்கக்கடையிலா வேலை செய்கிறீர்கள்?

நோயாளி:- எப்படிச் சரியாகக் கண்டுபிடித்தீர்கள்?

டாக்டர்:- உங்களுக்குச் சீனியின் அளவு மிகவும் குறைவாக உள்ளதே




# ஓய்வூதிய அதிகாரியும் ஓய்வுபெற்ற ஆசிரியரும்.

கந்தசாமி ஒரு ஏழைச்சிறுவன். பல சகோதரர்களுடன் பிறந்தவன். அவனது அப்பா ஒரு கூலித் தொழிலாளி, அம்மாவும் கூலி வேலைகளுக்குப் போய் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே பிள்ளைகளை வளர்த்து வருகிறாள். மண்வீடு, வசதிகள் அற்றது. மழை காலத்தில் ஒரே ஒழுக்கும் சேறும் சகதியும். பிள்ளைகள் அனைவரும் அம்மாபோல் மிகவும் அழகானவர்கள். தொழில் புரியும் இடத்தில் கூட ஏனைய பெண்களை விட இவள் வித்தியாசமானவள். கடும் உழைப்பாளி. நேர்மையானவள். விசுவாசி. ஆதலால் முதலாளி இவளை மிகவும் நம்புவார். அன்பு காட்டுவார். இச் செயலானது இவளைப்பற்றி ஏனையவர்கள் கேலி பேசவும் கிண்டல் பண்ணவும் காரணமாயிருந்தது. இது மட்டுமல்ல சிறுவர் கல்வியின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் பற்றி இவள் அடிக்கடி பேசுவதும். தனது குடும்ப வறுமை ஏற்படுத்திய பாதிப்பாலும் கிராமத்தில் படித்தவர்கள் வசதியான வாழ்வு வாழ்வது கண்டும் தனது பிள்ளைகளையும் படிப்பிக்க வேண்டும் என முடிவு செய்தாள். கிராமத்தில் ஏனைய சிறுவர்கள் அழகழகான ஆடைகள் அணிந்து பாடசாலை சென்று வருவதைக் காணக்காண இவள் தனது முடிவில் உறுதியானாள்.

இருவரது உழைப்பும் வாழ்கைச் செலவுக்குப் போதாமலிருந்ததால் மூத்த மகளையும் மகனையும் கூலி வேலைக்கே அனுப்ப வேண்டி ஏற்பட்டதைக் கண்டு மிகவும் வேதனையடைந்தாள் அவள் கந்த சாமியை எவ்வாறாயினும் படிப்பித்துவிட வேண்டும் என எண்ணினாள். இள வயதிலே கூலி வேலைக்குச் சென்று விட்ட தனது பிள்ளைகளிருவரும் கஸ்டப்படுவது கண்டு மனம் நோவாள். அவர்கள் ஒற்றுமையில்லாமல் தங்களுக்குள் அடிபடுவதும் கோள் சொல்வதும் குடும்பத்தில் குழப்பம் வரக்காரணமானதுக்கும் கல்வி அறிவு இல்லாததே என எண்ணி தனது முடிவில் மேலும் உறுதியானாள் கந்தசாமி காலை வேளையில் வண்ணத்துப் பூச்சிகளாய் பாடசாலைச் சீருடையுடன் புத்தகப்பையும் சப்பாத்தும் அணிந்து பாடசாலை சென்று வரும் மாணவர்களைக் கண்டு ஏங்குவான் தானும் படிக்கவேண்டும் என விரும்பினான். அம்மா

உற்சாகப்படுத்தினாள் உடல் பலவீனநிலையில் இருந்த தகப்பன், இதையறிந்து கோபமடைந்தார். போர்க்கோலம் கொண்டார். வீட்டில் வறுமையிருக்க இவனைப்படிக்க அனுப்ப முடியாது என்று கத்தினார். வேலைக்கு அனுப்புவோம் என வாதிட்டார் மூத்த சகோதரர்களும் நாங்கள் மட்டும் உடல் வருந்தி வேலை செய்வதா இவர் படிக்கப் பள்ளி செல்வதா என பொறாமையடைந்தனர். வீட்டில் குழப்பம் ஆனால் தாய் மேலும் மேலும் உறுதியடைந்தாள்.

கந்தசாமியின் கல்விச் செலவுகளுக்கு உதவுமாறு தன் முதலாளியிடம் கேட்டாள். ஊர்ப்பெரியவர்களிடம் மன்றாடினாள் உறவுகளைக் கேட்டாள் யாரும் உதவ முன்வரவில்லை கேலி பண்ணி அனுப்பி விட்டனர். ஒரு வேளை உணவே ஒழுங்காக இல்லாதநிலையில் படிப்பு என்ன வேண்டிக்கிடக்கு என அறிவுரை கூறினர். ஒவ்வொரு தடவையும் அவமானப்பட அவளுக்கு மனதில் வைராக்கியம் பிறந்தது. அயல் கிராமத்துப் பெரியவர் ஒருவர் இவளது நிலை கண்டு கல்வியின் அருமை அறிந்த அவர் வளரத்துடிக்கும் ஏழைச்சிறுவன் கந்தசாமியை வளர்த்துவிட முன்வந்தார். நிலைமைகள் அறிந்து விளங்கிக்கொண்ட கந்தசாமி எப்படியும் படித்து நல்ல நிலைக்கு வந்துவிட வேண்டும் என முடிவு செய்தான். கந்தசாமி பள்ளியில் முதன்மை மாணவனாக விளங்கினான். எதையும் ஆய்ந்து அறியும் ஆவல் மிகுந்திருந்தது. பாடசாலை நூலகத்திலும் பிரதேச நூலகத்திலுமாக நூல்களைத் தேடித்தேடிப் பெற்று வாசிக்கத் தொடங்கினான் வாசிக்க வாசிக்க யோசிக்கத் தொடங்கினான் ஏன்? எதற்கு எப்படி? என்ற கேள்விகள் இவனுள்ளே எழத்தொடங்கியது. தனக்குப் புரியாத பல விடயங்களை வகுப்பறையில் ஆசிரியரிடம் கேட்கத்தொடங்கினான் நாளாக நாளாக இவனது கேள்விகள் விரிவடைய ஆசிரியர் பொறுமையிழந்து வகுப்பிலிருந்து வெளியேற்றினர். இதை ஒரு சவாலாகவே கந்தசாமி கருதினான். மேலும் மேலும் நூல்களைத் தேடித்தேடி வாசித்தான் உயர் வகுப்பு மாணவர்களிடம் விளக்கம் கேட்டான். விவாதிப்பான். தெளிவு பெறுவான்.

பொதுத்தேர்வுகளிலெல்லாம் சிறந்த பெறுபேறுகள் பெற்று முதன்மையாக விளங்கினான். புலமைப்பரிசீல் முறைமையாலும் பல்கலைக்கழக பயிலுனர்களுக்கான வறிய மாணவர்களுக்கென தனியாட்கள் செய்யும் உதவியாலும் கற்றுயர்ந்த கந்தசாமி மனித இனத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதை இலட்சியமாக வகுத்துக் கொண்டான்.

இன்று அவன் ஓய்வூதியம் வழங்கும் உயர் அதிகாரியாகக் கடமைபுரிவதைக் கண்டு தாயானவள் மிகவும் களிப்பெய்தினாள். தன் மகன் கல்விச் செலவுகளுக்கு உதவிய அயலூர் ஆசிரியரைத் தெய்வமாக வணங்குகிறாள். குடும்பமும் ஓரளவு வசதியுடன் வாழ்கின்றது. அயலவர்

உறவினர் இப்போ இவர்களுடன் அன்பு பாராட்டுகின்றார்கள்.

ஒரு நாள் ஒரு முதியவர் இவன் அலுவலகத்துக்கு வந்தார். காப்போன் முதல் அவரது விடயங்களைக் கையாளும் எழுதுனர் வரை முதியவருடன் முரண்படுவதை புரிந்து கொண்ட கந்தசாமி எழுந்து வந்து அவரை தனது அறைக்கு அழைத்துச் சென்று விபரங்களை விசாரித்தான். சம்மந்தப்பட்ட கோவைகளை உடனடியாகப் பரிசீலித்து ஓய்வூதியம் வழங்குவதற்கான அனுமதிகளை வழங்கினார். முதியவர் எழுந்து வணங்கி தம்பி மிகவும் அலைந்துவிட்டேன் களைத்துப் போனேன் "நீர் யார் பெற்ற பிள்ளையோ நல்லாயிருக்கவேண்டும் என வாழ்த்தினார்.

ஐயா என்னைத் தெரியவில்லையா? நான் கந்தசாமி என்றான். முதியவரான ஆசிரியருக்கு உடனே ஞாபகம் வரவில்லை. யோசித்துக் கொண்டு நின்றார். ஐயா கேள்விகள் கேட்டு உங்களைக் கோபமடைய வைத்தவன் நான் கந்தசாமி என்னை வகுப்பிலிருந்தும் வெளியேற்றி விட்டீர்கள். அறியும் ஆர்வத்தில் அறியாப்பருவத்தில் உங்களை வருத்தி விட்டேன் என இரக்கத்துடன் கூறினான்.

அறியாப் பருவத்தில் அறிய வேண்டும் என்ற துடிப்பில் நீ இருந்ததை நான் புரிந்து கொள்ளவில்லை எல்லா மாணவர்களையும் போல நீயும் கிண்டலடிக்கின்றாய் என எண்ணி விட்டேன் நீ இன்று வளர்ந்து பலருக்கு உதவி வருவதைக் காண பெருமையாக இருக்கின்றது. இறைவன் உனக்கு எல்லா வளங்களையும் தரவேண்டும் என வாழ்த்தினார்.

திருமதி. தயாமதி குகராசா
யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


# தொலைத்தொடர்பு சாதனங்களின் பயன்பாடு



இன்றைய உலகில் தொலைத்தொடர்பு சாதனங்களின் பெருக்கம் அதிகரித்த வண்ணம் உள்ளது. அதனால் எந்தமூலையில் இருக்கும் ஒருவருடனும் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக்கூடிய முறையில் சாதனங்கள் உள்ளன. ஆனால் முற்காலத்தில் இப்படியான சாதனங்களை அம்மக்கள் கண்டதே இல்லை. ஏன் என்றால் அப்பொழுது குறைந்த பட்சமான மனிதர்கள் தான் படித்து இருந்தார்கள். அவர்கள் வேலைக்குச் செல்லும் போது பயன்படுத்திய சாதனங்கள் கூட கடிதம், அஞ்சல், ஓட்டம், பறையடித்தல் என்பனவற்றின் மூலம் கருத்து வெளியிடப்பட்டது. கடிதம் கூட புறாக்கள் மூலம் அனுப்பப்பட்டது. ஆனால் இப்பொழுது இலக்கம் அடித்து காதுக்குள் வைக்கும் போது ஐந்து நிமிடத்தில் மற்றவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியும்.

தற்பொழுது உறவினர்களுடன் தத்தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் நன்மை, தீமைகளை அறிவிக்கவும் தொலைத்தொடர்பு சாதனங்களில் தொலைபேசி பயன் படுத்தப்படுகின்றது. இப்பொழுது பல வடிவங்களில் செய்யப்பட்டு எங்கு பார்த்தாலும் ஒரே தொலைபேசி மயம் அதனாலே அதிகமானோருக்கு காது கேட்காமல் போகின்றது. புதுப் புது Modelகளில் தொலைபேசி வர, வர அவர்களும் மாற்றிக்கொண்டே இருக்கின்றார்கள் தொலை பேசியினால் பல நன்மைகள் உண்டாகும் அதே போல் தீமைகளும் உண்டாகின்றன. சட்டைப்பைகளில் வைக்கும் அளவில் கூட கையடக்கத்தொலைபேசி உள்ளது.

அதனை எடுத்துச் செல்லுவதும் கையாள்வதும் இலகுவாக இருக்கும் இப்பொழுது கடிதங்களை தொலைநகல் மூலம் அனுப்ப முடிகின்றது. உலகின் எங்கோ ஒரு பகுதியில் வாழும் ஒருவருடன் நேரடியாக முகம் பார்த்து கதைக்க முடிகின்றது. தொலைபேசிகள் இப்பொழுது பல மடங்கில் அதிகரித்து உள்ளது. இதனால் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடிகின்றது. தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதனால் பல நன்மைகளும் உண்டு. அதற்கேற்ப தீமையும் உண்டு.




## எமது கிராமத்தில் ஏற்படும் டெங்கு நுளம்பை தடுப்பதற்கு என்ன வழி செய்யலாம்.

நாம் எமது வீட்டுச் சூழல்களையும் சுற்றுப்புறச்சூழல்களையும் சுத்தமாக வைத்திருந்தால் நாம் டெங்கு நுளம்பிலிருந்து தப்பிக்கொள்ளலாம். நாம் எவ்வாறு எமது சூழல்களை சுத்தம் செய்யலாம் நாம் எமது வீட்டில் தேங்காய் துருவிய பின்னர் அந்தச்சிரட்டைகளை வெளியே எறியாமல் ஒரு இடத்தில் கவிழ்த்து வைத்தல் வேண்டும். அவ்வாறு நாம் அந்தச் சிரட்டையை ஒரு இடத்தில் கவிழ்க்காது வெளியே எறிந்துவிட்டால். அதனுள் மழை நீர் தேங்கி அதற்குள் டெங்கு நுளம்புகள் உருவாகின்றன. அதனை விட பிளாஸ்ரிக் போத்தல்களை வெளியே எறியாமலும் அல்லது ஒரு இடத்தில் போட்டு எரித்தலும் கூடாது அவ்வாறு செய்தல் உங்களது வீடுகள் தான் சூழல் மாசடையும்.

நாம் அவ்வாறு செய்யாமல் அந்தப் பிளாஸ்ரிக் போத்தல்களை ஒரு சூழல் மாசடைந்த இடத்திலோ அல்லது கடற்கரையான இடங்களிலோ கொண்டு போடுதல் வேண்டும். அவ்வாறு செய்தால் உங்கள் சூழல்கள் மாசடையாது இருக்கும். அதனைவிட நீங்கள் அதிகாலைகளில் வீடுகளில் கூட்டி ஒதுக்குகின்ற குப்பைகளை எரித்தல் கூடாது. இதனை ஒரு இடத்தில் குவித்துவிடுதல் வேண்டும். அவ்வாறு நெடுகலும் கூட்டி அந்தக் குப்பைகளை சேர்த்து அவை கூடுதலாக சேர்ந்த பின்னர் அதனை வயலுக்கு அடிப்பசளைகளாக இடுதல் வேண்டும். அல்லது அதனை சூழல் மாசடைந்த இடத்திலே இடுதல் வேண்டும். அவ்வாறு செய்தால் உங்கள் சூழல் மாசடையாத வண்ணம் இருக்கும். அதனை விட இன்னமும் பல விடயங்களில் கூட உங்கள் சூழல்கள் மாசடைகின்றன.

அவையாவன சமைப்பதற்காக காய்கறிகளை வெட்டுகின்றோம் அந்தக் காய்கறிகளை நாம் வெட்டுவதற்கு முன்னர் எமது கைகளையும் காய்கறிகளையும் பாத்திரங்களையும் கழுவிய பின்னர் தான் காய்கறிகளை வெட்டுதல் வேண்டும் .அவ்வாறு நாம் செய்யாமல் காய்கறிகளை வெட்டினால் அந்தக் காய்கறிகளிலுள்ள கிருமிகள் ஒன்றும் அகற்றப்பட மாட்டாது. அதனை விட எங்களது கை விரலின் நகத்துக்குள் இருக்கின்ற கிருமிகளும் பாத்திரங்களினுள்ளும் இருக்கின்ற கிருமிகளும் காய்கறிகளில் தொற்றுகின்றன. அவ்வாறு தொற்றுவதாலும் டெங்கு நுளம்பு உருவாகின்றன. அவ்வாறான விடயங்களில் நாங்கள் கவனமாக இருந்தால் நாங்கள் டெங்கு நுளம்பிடம் இருந்து தப்பிக் கொள்ளலாம்

ச. பபிவன் – தரம் 11 யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

# அறக்குறள்

மரக்கன்றொன்றை வளர்ப்பாரே யாமாவர் மழை
வரக் காரண மானவர்

வெட்டி எரிக்காமல் விடுவோமேயாயின் மரங்கள்
மட்டில் மழை தரும்

அறம் காக்கும் வாழ்வுக்கீடாகும் வையத்து
மரங்காத்து வாழும் வாழ்வு

தெருக் காக்கும் மாந்தர் விரும்பியொரு
தருவளர்த்தால் பொழியும் மழை

மரம்பேணி வளர்ப்பாரைக் காணின் நிலமடந்தை
சிரந்தாழ்த்தி வணங்கிச் செல்வாள்

புண்ணியமாய்ப் போம் எவர்க்கும் இம்
மண்ணிலே மரம் வளர்ப்பவர்க்கே

வெட்டும்தனையும் நிழல் தந்தும் தான்
பட்டும்பின்னும் பயன்தருமாம் மரம்

மரம் வளர்ப்பாரே யாமாயின் இரு
கரங் கூப்பித் தொழுவோம் யாம்

மரக்கன்று வளர்த்து வாழ்பவர் இப்புவியில்
பிறர்க்கென்றும் வாழும் பெரியார்

குழைதரும் விறகுதரும் சுத்தமான காற்றுடன்
மழைதருமா தலால்மரம் வளர்த்திடுவோம்

கற்றாரேயொருவர் சிறப்புடையர் இவ்வுலகில்
மற்றொருவர் மரம் வளர்ப்பவர்

மரக்கன்று வளர்ப்பார் மாண்புடையார் வறட்சி
வரக்கண்டு தவிப்பார் அறிவிலாதார்

தித்திக்கும் வாழ்வுவரும் சுகம்வரும் மாந்தர்
எத்திக்கும் மரம்நாட்டி வளர்த்தால்

மரம் செழிக்க வளர்த்திடுவோமாயின் மாந்தர் குலம்
தளைக்கப் பெய்யும் மழை

கேடில் செல்வம் கைகூடும் மாந்தர்க்குக்
காடு வளர்க்கப் பெறின்

மரம்வளர்த்து வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தரம் இழந்து பின் செல்பவர்

அறம்காக்கும் காப்பும் காப்பாகும் மற்றொன்று
மரம் காக்கும் காப்பாம்....

மகான்

# ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை



ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப்பனாங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சக்கரையும் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவையதில் கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக்கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டே
அன்னைஅகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத்தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்து தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

**- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

# ஆத்திசூடி


## காப்பு

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தி தொழுவோ மியாமே

## சூத்திரம்

1. அறஞ் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண்ணெழுத்திகழேல்
8. ஏற்ப திகழ்ச்சி
9. ஐய மிட்டுண்
10. ஒப்புர வொழுகு
11. ஓதுவ தொழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட வுரை
18. இடம்பட வீடெடேல்
19. இணக்கமறிந் திணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர்செய்
23. மன்றுபறித் துண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவ மாட்டேல்
26. இலவம் பஞ்சிற்றுயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகலாதன செயெல்
29. இளமையிற் கல்
30. அறனை மறவேல்
31. அனந்த லாடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப்பட வாழ்
35. கீழ்மை யகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்ப தொழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட் டொழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோ ரினத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிட மறிந்து சேர்
51. சையெனத் திரியேல்
52. சொற் சோர்வு படேல
53. சோம்பித் திரியேல்
54. தனக்கோனெனத் திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக் கடிமை செய்
57. தீவினை யகற்று
58. தும்பத்திற் கிடங்கொள்
59. தூக்கி வினைசெய்
60. தெய்வ மிகழேல்
61. தேசத்தோ டொத்துவாழ்
62. தையற் சொற் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்

65. நன்மை கடைப்பிடி
66. நாடொப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர் விளையாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல்பல கல்
71. நெற் பயிர் விளை
72. நேர் பட வொழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய விரையேல்
75. நோய்க் கிடங்கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடு பெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
81. பூமி திருத்தியுண்
82. பெரியோரைத் துணை கொள்
83. பேதைமை யகற்று
84. பையலோ டிணங்கேல்
85. பொருடனைப் போற்றி வாழ்
86. போர்த் தொழில் புரியேல்
87. மனந் தடுமாறேல்
88. மாற்றானுக்கிடங்கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோ டிணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன்மக்கள் சொற் கேள்
95. மைவிழியார் மனையகல்
96. மொழிவதற மொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற் கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடு பெற நில்
102. உத்தமனாயிரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினைசெயேல்
106. வைகறைத் துயிலெழு
107. ஒன்னாரைத் தேறேல்
108. ஓரங் சொல்லேல்
109. பெரியோரை துணை கொள்



# கொன்றை வேந்தன்

## கடவுள் வாழ்த்து

**கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே**

01. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
02. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
03. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
04. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
05. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
06. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
07. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
08. ஏவா மக்கள் மூவா மருந்து
09. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப்பற்றி ஓரகத் திரு
11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
13. அ:.கமும் காசும் சிக்கெனத் தேடு
14. கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை
15. காவல் தானே பாவையர்க்கழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோராயினும் தாழ உரை
18. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
24. கோட் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
27. சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு
28. சிவத்தை பேணின் தவத்திற் கழகு
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு
30. சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்
31. சூதும் வாதும் வேதனை செய்யும்
32. செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்
33. சேமம் புகினும் சாமத் துறங்கு
34. சையயொத்திருந்தால் ஐய மிட்டுண்
35. சொக்கர் என்பர் அத்தம் பெறுவர்
36. சோம்ப ரென்பர் தேம்பித் திரிவர்
37. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
38. தாயிற் சிறந்த தொரு கோவிலு மில்லை
39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
40. திராக் கோபம் போராய் முடியும்
41. துடியாய் பெண்டிர் மடியில் நெருப்பு
42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
43. தெய்வம் சீறின் கைதவ மாளும்
44. தேடா தழிக்கின் பாடாய் முடியும்
45. தையும் மாசியும் வையகத் துறங்கு
46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
47. தோழ னோடும் ஏழைமை பேசேல்
48. நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
49. நாடெங்கும் வாழக் கேடொன்று இல்லை
50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
51. நீரகம் பொருந்திய ஊரகத்திரு
52. நுண்ணிய கருமம் எண்ணித் துணி
53. நூண் முறை தெரிந்து சீலத்தொழுகு
54. நெஞ்சை யொளித் தொரு வஞ்சகம் இல்லை
55. நேரா நோன்பு சீரா காது
56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்
57. நொய்யவர் என்பர் வெய்யவர் ஆவார்
58. நோன் பென்பது கொன்று தின்னாமை
59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
60. பாலோ டாயினும் காலம் அறிந்துண்

61. பீரம் பேணி பாரம் தாங்கும்
62. புலையும் கொலையும் களவும் தவிர்
63. பூரியோக்கில்லை சீரிய வொழுக்கம்
64. பெற்றோருக் கில்லை சுற்றமும் சினமும்
65. பேதமை என்பது மாதற்கணிகலம்
66. பையச் சென்றால் வையம் தாங்கும்
67. பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்
68. பேணகம் என்பது தானுழந்துண்டல்
69. மருந்தேயாயினும் விருந்தோடுண்
70. மாரி அல்லது காரியம் இல்லை
71. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
72. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
73. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
74. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
75. மெத்தையிற் படுத்தல் நித்திரைக்கழகு
76. மேழிச் செல்வம் கோழை படாது
77. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
78. மோனம் என்பது ஞான வரம்பு
79. வளவனாயினும் அளவறிந் தளித்துண்
80. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
81. விருந்தில்லோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
82. வீரன் கேண்மை கூரம் பாகும்
83. உரவோர் என்கை இரவாதிருத்தல்
84. ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு
85. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
86. வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை
87. வையந் தோறும் தெய்வந் தொழு
88. ஒத்த இடத்து நித்திரை கொள்
89. ஓதார் கில்லை உணர் வொடு ஒழுக்கம்.



திருவாசகம்

## 1. சிவபுராணம்

(சிவனது அநாதி முறைமையான பழமை)

திருப்பெருந்துறையில் அருளியது

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்துமண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி யாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர் களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

# பரிசு பெறுவோர் விபரம்

அமரர்கள் திரு. க.கந்தையா திருமதி. க. கனகம்மா நினைவு நிதியம் 10.12.2011 இல் நடாத்திய போட்டிப்பரீட்சையில் வெற்றி பெற்று பரிசில் பெறும் மாணவர் விபரம்.

**பணப்பரிசில், புத்தகம், நூல், சான்றிதழ் பெறுவோர்.**

**மேற்பிரிவு:-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | தி. புஸ்பகாந் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 1ம் இடம் | கு. றிதுசனா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | த. கீதாஞ்சலி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | த. தனுசா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |

**சிரேஷ்ட பிரிவு:-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | நி. பாஸ்கரி | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| 2ம் இடம் | ந. கௌதமி | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| 3ம் இடம் | சீ. குலதேவன் | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |

**மத்திய பிரிவு:-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ஜ. ஜதூர்சனா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | ப. நித்தியா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 3ம் இடம் | வ. மதுசன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |

**கனிஷ்ட பிரிவு:-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | வி. சுவேதா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | பு. கஜானா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 3ம் இடம் | ஸ்ரீ.கதிர்விழி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |

**கீழ்பிரிவு:-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | நா. சங்கீதா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 2ம் இடம் | ர. கனிஸ்ரிகா | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| 3ம் இடம் | வா.கபிலன் | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |

**நூலும் சான்றிதழ் பெறுவோர் விபரம்**

| | | |
|---|---|---|
| **மேற்பிரிவு:-** | பா. கஜீபன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | இ. சுவின்சன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | ச. சிந்துஜா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | சி. நிரோஜினி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | சு. சிவானுஜா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | ச. லவண்யா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | க. ரோபிநாத் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| | தே. சர்மிளா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |

**சிரேஷ்ட பிரிவு:-**

| | |
|---|---|
| இ. கல்யாணி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. லட்சிகா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| மௌ. தர்சிகா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ம. தேனுசா | யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம் |
| நா. சுயந்தா | யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம் |
| சி. லின்சன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு. அ.த.க.பாடசாலை |
| தி. ருசியந்தன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு. அ.த.க.பாடசாலை |
| சு. மிரேஸ் | யா/கைதடி நாவற்குழி தெற்கு. அ.த.க.பாடசாலை |
| பி.மகிழ்ராஜ் | யா/கைதடி நாவற்குழி தெற்கு. அ.த.க.பாடசாலை |
| ச. சோபனா | யா/கைதடி நாவற்குழி தெற்கு. அ.த.க.பாடசாலை |
| கு. கேதீஸ்வரி | யா/கைதடி நாவற்குழி தெற்கு. அ.த.க.பாடசாலை |

**மத்திய பிரிவு:-**

| | |
|---|---|
| வ. சகானா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| வி. பத்மஜன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ஜெ. கீதாஞ்சலி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| யோ. ஷபினா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| அ. அர்ஜுன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| வி. விதுசன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| செ. தீபிகா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| க. நிசாளினி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| வி. லவலக்ஷனா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ப. சாருஜா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |

**கனிஷ்ட பிரிவு:-**

| | |
|---|---|
| பி. சர்மினி | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| கி. நிரோஷா | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| பு. யதுசனா | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| ச. தாரணி | யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| சி. பானுஜன் | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| அ. தமிழ்வாணி | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| உ. லோஜப்பிருந்தா | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. நிலானி | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| நி. பிரியங்கா | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ஜ. சானுகா | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. சங்கீதா | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |

**கீழ் பிரிவு:-**

| | |
|---|---|
| ஆ. புவிரதன் | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| ச. பவித்திரன் | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| கு. கஜானி | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| ச. யுஜிந்தன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை |
| ச. டிலானி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை |

| | |
|---|---|
| பி. பிறேமினி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை |
| ம. மதுமிதா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ஜ. அபிநயா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ந. கார்மிகா | யா/கோவிலாண்டி மகாலஷ்மி வித்தியாலயம் |
| ச. சிந்துஜா | யா/கோவிலாண்டி மகாலஷ்மி வித்தியாலயம் |

## சான்றிதழ் பெறும் மாணவர்கள்

கோவிலாக்கண்டி மேற்கு
தச்சன் தோப்பு
திரு. க. கந்தையா
திருமதி. க. கனகம்மா
நினைவு நிதியம்

### சிரேஷ்ட பிரிவு:-

| | |
|---|---|
| இ. கஸ்தூரி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| பா. பிரியதர்சினி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| த. லக்ஷனா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ஜி. ஷம்சிகா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ந. தசாங்கன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. லதுசன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| சி.தர்சினி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| சி. சிவாஜினி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| இ. இலட்சனா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| மு. யசிந்தன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| சு. லக்ஸ்மன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| யோ. கிருபை நேசன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |
| ச. சமுத்திரா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை |

### மத்திய பிரிவு:-

| | |
|---|---|
| ஆ. விஸ்ணுகானன் | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| லி.ஜனார்த்தனன் | யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| சி. பகீரதன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| ச.அஜிந்தன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| பா.யதுஷன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| வ. அனுஷியன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| ம.சயந்தி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| கு. ஜெகதீஸ்வரி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| அ. அஜினா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. கார்த்திகா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| சு. சுபாஸ்கரன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| செ. டினிசா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| சி. கஜந்தா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |

### கனிஷ்ட பிரிவு:-

| | |
|---|---|
| உ. யதுசா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| சி. சுஞ்ஜித் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| து.மதுஜா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. கிருஷாந்தி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |

| | |
|---|---|
| சு. தேனுஜா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ச. சாருண்ஜா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| ந. அபிநயன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| கு. கஜானா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| தெ. ஆர்த்திகா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| சி. துஷ்யந்தி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| பி. கோகுலன் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |

**கீழ்பிரிவு:-**

| | |
|---|---|
| ஜெ. யேசுதாஸ் | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| இ. கம்சா | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| ந. கிஷாந்தி | யா/கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை |
| சி. திவாணி | யா/ மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம் |
| உ. கவிப்பிரிதன் | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ஜெ. கிஷாளினி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| இ. சௌமியா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| செ. மதுஷா | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் |
| உ. உதயசாளினி | யா/கோவிலாக்கண்டி மகா வித்தியாலயம் |
| ஞா. ரதீசன் | யா/மத்தியகல்லூரி |

**2011 க.பொ.த உயர்தர தேர்வில் சித்தியடைந்து ஊக்குவிப்பு நிதிபெறும் மாணவர்கள்:-**

| | |
|---|---|
| த. திருமகள் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| வ. சரவணபவன் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| கி. நிசாளினி | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |
| க. சபேஷா | யா/ வேம்படி மகளிர் கல்லூரி. |
| சு. பிரசங்கா | யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி. |
| பா. பிரியா | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| ஸ்ரீ. விதுனா | யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| கி. உசாளினி | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| யோ. தனுசா | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| இ. கன்னிகா | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| கு. சர்மிளா | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| ப. தனுஷா | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| ச. யர்சினி | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| சி. துனேஷா | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| சி. தீபிகா | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| சி. அமலினி | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |

# இளந்தளிர்

என்றும் செழித்திட
வாழ்த்தும்
இனிய

**விளம்பரதாரர்கள்**

# Style Park

Perfect Collection

அதிநவீன
ஆடைத் தெரிவுகளுக்கு...

## ஸ்ரைல் பார்க்



171, K.K.S Road,
Jaffna.
Tel : 021 222 8383

# இந்திரன்

## மரத்தொழிலகம்


சகலவிதமான மரத் தளபாடங்களும்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.



நாவற்குழி கிழக்கு,
கைதடி. T.P : 077 0259568 உரிமையாளர் : சுரேஸ்

# நடனமுருகன்

## வைத்திய நிலையம்





222,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# சர்மிலன் மரக்காலை



சகலவிதமான
பலகை
தீராந்தி வகைகள்
அனைத்தையும்
நியாயமான
விலையில்
பெற்றுக்
கொள்ளலாம்.

கட்டட
வேலைகளும்
ஒப்பந்த
அடிப்படையில்
தேவைக்கேற்றாற் போல
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர் :
சு. புண்ணியமூர்த்தி

குறுக்குவீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

# ராஜமணி

## பந்தல் சேவை

உங்கள் வீட்டு
வைபவங்களுக்கான
அலங்காரங்கள்
செய்து கொடுக்கப்படும்
(பந்தல், கதிரை, சமையல்
பாத்திரங்கள்)

குறுக்குவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

உரிமையாளர் :
செ. சுப்பிரமணியம்




*New*

# Cost Cutter

Hospital Road,
Jaffna.


# VELSONS WORKS

# வெல்சன் வேக்ஸ்



சகலவிதமான
மோட்டார்
உதிரிப்பாக
விற்பனையாளர்.

156/15, Stanley Road,
Jaffna.


RAJAH CREAM HOUSE
ASWATHY HAL
திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கு
அனைத்து வசதிகளையும் கொண்ட மண்டபம்
மேலதிக விபரங்களுக்கு :
www.saraswathyhall.com
மண்டபத்தின் ஒரு பகுதி
மண்டபத்தின் மற்றய பகுதி
மண்டபத்துடன்
இணைந்த கிறீம் ஹவுஸ்
உணவு பரிமாறும் பகுதி
தொடர்புகளுக்கு :
சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்)
37,சேர்.பொன்இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
Call : 021 3207369, 0779234176


சிறி சிவராம்
ரேடர்ஸ்
SRI SIVARAM TRADERS
248, Hospital Road,
Jaffna.
248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



தானங்களில் சிறந்தது கண் தானம்

# அப்பலோ (கண்) வைத்திய நிலையம்

கண் சத்திர சிகிச்சையும்
ஆலோசனையும்




# APOLO NURSING HOME

Eye Surgery + Consultation




No. 16, Palaly Rd,
Jaffna.
T.P : 021 222 3305

**இல. 16, பலாலி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



Aldi
Electronics
Dealers in :
Watches, Radios, Clock,
TV, Deck, Computer,
Accessories, Audio,
Video DVD, CD & Players
அல்டி
எலெக்ரோனிக்ஸ்
15, Stanley Road,
Jaffna.
Tel : 021 2222676
15, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.


ரமணன்
கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்
உங்கள் புதிய கட்டடம் சிறப்பானதாக அமைய
தரமான பொருட்களை நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
Ramanan
Hardware
No. 939, K.K.S Road,
Jaffna.
Tel : 021 222 9296
இல. 939, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


த. குமாரசாமி
ரெக்ஸ்டைல்ஸ்
Dealers in Textiles
Specialist in Sarees, Blouses & Readymade Garments
T. Kumarasamy
Textiles
44, 42, Grand Bazaar, Jaffna.
Tel & Fax : 222 8847,
E-mail : tkumarasamy@sltnet.lk


பவிசாரு
பூங்கனிச் சோலை
PaveeSharu
Poongani Solai
அலங்காரத் தாவரங்கள்
பயன்தரு மரங்கள்
மூலிகைகள்
பழமரங்கள்
311/1 பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
Tel :
021 222 8199
071 847 5629
077 397 6203

Gajaani Jewellery

# கஜானி

## நகைத் தொழிலகம்





தங்கப்பவுண்
நகை
வியாபாரம்

உங்கள் எண்ணத்தில் உருவாகும்
டிசைன்களை தரமான தங்கத்தில் குறித்த
தவணையில் செய்து தருபவர்கள்

க. உதயகுமார்,
291, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**291, Anaipanthi, Jaffna.**
Tel : 077 4071551, 021 4900670

இளந்தளிர் செழிக்க
அன்போடு வாழ்த்தும்...



# Annai Nagaa

## Food City

**175, K.K.S. Road, Jaffna.**
Tel : 021 2225515 Fax : 021 2225223
E-mail : anfc@dialogsl.net
Web : www.anfoodcity.com


With best Compliments from....!
KAJAMUGAN HARDWARE
கட்டடப்பொருள், கம்பி வகைகள், சீமேந்து,
PVC பைப் வகைகள், பெயின்ற் வகைகள்,
Mecson Mesh நெற் வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.
NIPPON CEMENT
Dulux
கஜமுகன் ஹாட்வெயர்
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
147, 149 Stanley Road,
Jaffna
Tel : 021 222 2833 Fax : 021 222 2368

Best Wishes From

# S.V.MURUGESU

## Agent For


Unilever Sri Lanka Ltd.,

Energizer Lanka Ltd.,

Forterra Brand Lanka (Private) Ltd.,

Litro Gas Lanka Ltd.,

Chevron Lubricants Lanka Ltd.




LITRO GAS

No.154, Hospital Road,
Jaffna.

Tel: 021 492 5831
021 222 8899

இளந்தளிர் சஞ்சிகைக்கு
எம் இனிய வாழ்த்துக்கள்...

# Nanthinee
## *Enterprise*



237, 239, Power Station Road
Jaffna.

# நந்தினி
## என்ரபிறைஸ்

237, 239, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



இளந்தளிர் சஞ்சிகைக்கு
எம் இனிய வாழ்த்துக்கள்...

# K.V.R

# Dealers

# கே.வி.ஆர்

# டீலர்ஸ்

ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

Stanley Road,
Jaffna.




# அன்னை மரக்காலை

சகல விதமான அளவுகளிலும்
மரங்கள் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

போலி அற்றது...
நாணயம் மிக்கது...

# ANNAI
TIMBER DEPOT

இல : 174A, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

"மரக்கன்று வளர்ப்பார் மாண்புடையார் - வறட்சி
வரக்கண்டு தவிப்பார் அறிவிலாதவர்"





மனதி லுறுதி வேண்டும்.

வாக்கினி லேயினிமை வேண்டும்;

நினைவு நல்லது வேண்டும்.

நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;

கனவு மெய்ப்பட வேண்டும்.

கைவசமாவது விரைவில் வேண்டும்;

தனமும் இன்பமும் வேண்டும்.

தரணியிலே பெருமை வேண்டும்;

கண் திறந்திட வேண்டும்.

காரியத்தி லுறுதி வேண்டும்;

பெண் விடுதலை வேண்டும்.

பெரிய கடவுள் காக்க வேண்டும்;

மண் பயனுற வேண்டும்.

வானகமிங்கு தென்பட வேண்டும்.;

உண்மை நின்றிட வேண்டும்.

ஓம் ஓம் ஓம் ஓம்.